662

# BALAVACHAKAM

## SIXTH BOOK

TAMIL

218

VIDWAN

R. MEENAKSHISUNDARAM

*Lecturer in Tamil, St. Joseph's School, Trichinopoly*

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

*(Vide Gazette, dated 10th May 1938, page 210)*

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1939

Registered] [Price 7 As.

662

# பால வாசகம்

(ஆறாம் வகுப்பு)

திருச்சிராப்பள்ளி செய்ன்ட் ஜோஸப் கலாசாலைத்
தமிழாசிரியர்

வித்துவான் - R. மீனாட்சிசுந்தரன்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
[10-5-'38 கெஜட் 210-ஆம் பக்கம் பார்க்க]

*(Reprinted in 1939)*

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1939

ரெஜிஸ்தர் செய்தது]   [விலை 7 அணா

# முன்னுரை

மாணவர்கள் இனிது கற்று, மொழி யறிவும், ஒழுக்கச் சீர்திருத்தமும், உரைநடை எழுதுந் திறனும் பேசும் வன்மையும் அடையத்தக்க முறையில் பாட புத்தகங்கள் அமைதல் வேண்டும் என்பது அறிஞர்களது கருத்தாகும்.

ஆகவே, இவ்வறிஞர்களது கருத்துக் கிணங்க, மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரக்கூடிய சிறந்த கதைகளையும், இயற்கை யுணர்ச்சி செறியப்பெற்றனவும், சமூகவாழ்க்கை, சமுதாயக் கல்வி நீதிமுறையாகிய இவைகளைப் பற்றிய பல பெரியார் வாழ்க்கை வரலாறுகளையும், அரும்பொருளமைந்த கட்டுரைகளையும், இலக்கிய வரலாறுகளையும் உலகியல் அறிவையும் தன்னகத்தே கொண்டு இப்பாட புத்தகங்கள் விளங்குவதானது மாணவர்களுக்கு மொழிப்பற்றையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணும் என்பது வெளிப்படை.

இப் புத்தகங்களில் குறை பல தோன்றுதல் கூடும். அவற்றை யுணரும் ஆசிரிய அன்பர்கள் அன்புகூர்ந்து தெரிவிப்பின் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்; அக்குறைகளையும் விரைவில் நீக்க முயல்வேன். ஆசிரிய அன்பர்கள் தமது அன்பார்ந்த உதவியால் என்னை இதுபோன்ற பணியில் மிகுதியும் ஊக்குமாறு பெரிதும் வேண்டுகின்றேன்.

வித்துவான் இரா. மீனாட்சிசுந்தரன்,
திருசிராபுரம்.
தமிழாசிரியர்,
அர்ச் சூசையப்பர் கலாசாலை.

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஒழுக்கம் | 1 |
| 2. | மலர்கள் | 4 |
| 3. | உடல் நலம் | 6 |
| 4. | தொழில் | 9 |
| 5. | நயவஞ்சகன் | 11 |
| 6. | முயற்சி | 14 |
| 7. | ஆறுகள் | 17 |
| 8. | உற்று நோக்குதல் | 21 |
| 9. | மின்சாரம் | 25 |
| 10. | பருவங்கள் | 28 |
| 11. | குரு பக்தி | 32 |
| 12. | இமயமலை | 37 |
| 13. | அரிச்சந்திரன் - (முற்பகுதி) | 42 |
| 14. | தேனீ | 47 |
| 15. | அரிச்சந்திரன் - (பிற்பகுதி) | 53 |
| 16. | எரிமலைகள் | 59 |
| 17. | ஆபுத்திரன் | 65 |
| 18. | இராஜாராம் மோகன்ராய் | 69 |
| 19. | உழைப்பின் சிறப்பு | 75 |
| 20. | தண்ணீர் | 79 |
| 21. | புலியோடு பொருதவீரர் | 85 |
| 22. | பாக்குமரம் | 90 |
| 23. | ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார் | 96 |


## செய்யுட் பகுதி


| | | |
|---|---|---|
| 1. | நன்னெறி | 103 |
| 2. | நீதி வெண்பா | 107 |
| 3. | இனியவை நாற்பது | 109 |
| 4. | இன்னா நாற்பது | 111 |

# வசனப் பகுதி

# பால வாசகம்

## (ஆரும் வகுப்பு)

### 1. ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது ஒழுங்கு, நடத்தை யெனப் பெயர் பெறும். இதனை வடமொழியில் ஆசாரம் என்பார். நல்லொழுக்கம் நன்மையைத் தரும். தீயொழுக்கம் தீமையைத் தரும். நல்லொழுக்க முடையவர்களே மேன்மையடைவார்கள். அவர்கள் பெருமையை நாடிச் செல்ல வேண்டியதில்லை. பெருமை தானாகவே அவர்களைத் தேடி யடையும். நல்லொழுக்க மில்லையானல் கல்வியும் செல்வமும் சிறப்படையா. ஆதலால் நாம் ஒழுக்கத்தை உயிர்போல் காக்கவேண்டும். நமது முன்னோர்கள் எல்லாம் ஒழுக்கத்தாற் சிறந்தவர்களே யாவர். "ஒழுக்கம் உயர்வு தரும்'' என்பது ஒரு பழமொழி யல்லவா?

பிள்ளைகளே! நாம் எப்பொழுதும் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகவேண்டும். தாய், தந்தை, குரு, அரசன், அண்ணன், மாமன் முதலியோர் நமக்

குப் பெரியோர்களாவார்கள். நமது தாய் தந்தையர்களே நமது முதற்பெரியோராவர். ஏனெனில் நம்மைப் பெற்றெடுத்து, பொன்னேபோற் போற்றி வளர்த்து, உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுத்து வருபவர்கள் அவர்களல்லவா? அவர்கள் நமக்கு நன்மையையே நாடிக்கொண் டிருப்பவர்கள். ஈ எறும்பு கடியாது, கண்ணை இமை காப்பதுபோல, அல்லும் பகலும் இடைவிடாது நம்மைப் பாதுகாத்து வருபவர்களல்லவா? இப்படிப்பட்டவர்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுவது நமது முதற் கடமையாகும்.

இவர்களுக்கு அடுத்த பெரியார் உபாத்தியாயராவர். உபாத்தியாயர் நன்கு கற்றுணர்ந்தவர்; உயர்ந்த குணங்களையுடையவர்; யாவருக்கும் நன்மையே நாடிச் செய்வார். அவர் நமக்குச் செய்வதெல்லாம் நன்மையேயாகும். ஆதலால் நாம் எப்பொழுதும் அவர் கற்பிப்பதை அன்புடன் கேட்டு, அதன்படி நடக்க முயல வேண்டும்.

சாதாரணமாகப் பள்ளியில் படிக்குஞ் சமயத்தில், இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியுஞ் சக்தி பிள்ளைகளுக்கு ஏற்பட்டிராது. ஆதலால் பிள்ளைகள் நல் வழியிற் செல்வதும், தீய வழியிற் செல்வதும் பெரியோர்களைப் பொறுத்ததேயாகும். அதனுல்தான் சிறுவர்கள் ஒழுங்கீனமாக நடக்கத் தொடங்கினுல், பெரியோர்கள் அப் பிள்ளைகளைத் தண்டித்தும், அச்சுறுத்தியும், திருத்தி வருகிறுர்கள். அவர்கள் சொல்வதெல்லாம் முதலில் கடினமாகவும் வருத்தமாகவும் தோன்றும். ஆனுல் நாளடைவில் அப் பெரியார் சொற்படி நடந்து வந்தால் எப்பொழுதும் நன்னெறி

யில் ஒழுகுவதான நல்லபழக்கம் குடிகொண்டுவிடும். ‘எறும்பூரக் கல்லும் தேயும்’ என்பது பழமொழியல்லவா?

நம்மை யாளும் அரசரிடத்தும் நாம் மிகுந்த அன்பாயிருக்க வேண்டும். அவர் தாயினும் இனிய தண்ணளியுடையவர். நமது முன்னோர்கள் எல்லாம் இராஜ பக்தியிற் சிறந்தவர்கள். நாமும் அவ்வாறு பக்தியில் சிறந்து விளங்கவேண்டும். அவர் நாளும் நமக்கு நன்மை செய்வதிலேயே நாட்டமுடையவர். அவர் இட்ட சட்டங்களெல்லாம் நமது நன்மையின் பொருட்டேயாகும். அவரது சட்டங்களுக்கு அடங்கி நடத்தல் வேண்டும். நமது அரசர் கண்கண்ட தெய்வமாவார். “அணைவோர்க்கும் தெய்வம் இலைமுகப் பைம்பூண் இறை” யன்றோ?

நாம் பிற வுயிர்களிடத்தும் அன்பா யிருக்கவேண்டும். அவைகளும் நம்மைப்போலவே இன்ப துன்பங்களை யனுபவிக்கின்றன. ஆதலால் நாம் ஒருபோதும் அவைகளுக்குத் தீங்கிழைக்கலாகாது. நம்மாலான உதவியைச் செய்யவேண்டும்.

இப்படிப்பட்ட நல்லொழுக்கங்களை நாம் கைக்கொண்டு ஒழுகவேண்டும். ஒழுக்கமே நாம் இறந்தபின்னரும் புகழுடம்புடன் வாழச்செய்கின்றது. நமதுமனமகிழ்ச்சிக்குக் காரணமாயிருப்பதும் ஒழுக்கமேயாகும். தாழ்ந்தவனையும் ஒழுக்கம் உயர்த்தும். ஒழுக்கமுடைய சிறுவர்களையும் போற்றுவர் பெரியார். ஒழுக்கம் ஒருவனுக்குச் சிறப்பைக் கொடுக்கும். ஆதலால் ஒழுக்கத்தைக் கைக்கொண்டு உத்தமர்களாக வாழ்வோமாக.

## 2. மலர்கள்

மலர்கள் மாந்தர்கள்தம் மனதுக்கு மகிழ்ச்சி தருவனவாகும். அவைகள் தம் மணத்தினுலும் வடிவத்தினுலும் இனிமை பயக்குந்தன்மை வாய்ந்துள்ளன. மலர்களுள் பல, தெய்வத்தைப் பூசிப்பதற்கே உபயோகிக்கப்படுகின்றன. நமது நாட்டில் பெண்மக்களும் இம்மலர்களைப் பெரிதும் விரும்பித் தமது கூந்தலில் அணிந்துகொள்வார்கள். சில மலர்களை மக்கள் உறுப்பிற்கு உவமையாகக் கூறுவர். தாமரை முகத்திற்கும், கைகளுக்கும், கண்களுக்கும் உவமானமாகக்கூறப்படும். உதாரணமாக:'தாமரைக் கண்ணன்', 'கமலக்கண்ணன்', 'குவளைக்கண்' முதலிய தொடர்கள் வழங்குவதால் அறிந்துகொள்ளலாம். இவைகளினுல் மலர்களிடத்து நாம் வைத்திருக்கும் அன்பையும் அருமையையும் வெளியிடுகின்றோம். அறிவாளிகள் சில வெண்ணிறமான மலர்களைத் தூய்மைக்கு அறிகுறியாகக் கொள்வர்.

இம்மலர்களில் பலவகை யுண்டு. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, புதர்ப்பூ முதலியனவாகும். இம்மலர்களுக்கு நிறத்தையளிப்பது சூரியவெப்பமே. சில மலர்கள் மணமுடையனவாக இருக்கும். சில மணமின்றித் தேனுடையனவாக விருக்கும். சில மணமும் தேனுமுடையனவாக விருக்கும். சில தேனின்றி யிருக்கும். சில பிரகாசமான நிறமுடையனவாக விருக்கும். சில சிறிதுநேரமே யிருக்கும்; பிறகு வாடிவிடும். சில நீண்ட நேரம் இருக்கும். கொடிப்பூ மலர்ந்ததும் கீழே யுதிர்ந்துவிடும். பெரும்பாலும் புதர்ப்பூவினிடம் மணமிராது. கோட்டுப்பூ நீண்டகாலம் இருக்கும்.

மலரைக் கண்டதும் மனத்துயர் நீங்கும். அதனுல்தான் மனதுக்கு மகிழ்ச்சி தருவது மலர் என்று சொல்லப்படுகிறது. மலர்கள் இனிமையை விளைப்பதன்றி வேறு என்னபயனை யளிக்கின்றனர்?

சில மலர்கள் மருந்தாகவும் உபயோகப்படுகின்றன. சில மலர்கள் மோத்தலும் நமக்குச் சுறுசுறுப்பை யுண்டாக்குகின்றன. சில மலர்கள் மயக்கத்தை யுண்டாக்குகின்றன. சிலமலர்கள் அறிவுடையார் மனத்தில் புதிய எண்ணங்களை விளைக்கும் கருவிகளுமாகின்றன.

வண்டினங்கள் மலர்களிடத்திற்குச் செல்வதையும் அம்மலர்களைச் சுற்றித்திரிவதையும் பார்க்கின்றேமல்லவா? எதைக் கருதி வண்டுகள் இவ்வாறு செய்கின்றன? தேனை விரும்பியே யாகும். ஆனல் மலர்கள் கைம்மாறு கருதாது தம்மிடத்திற்கு வரும் வண்டினங்கட்குத் தேனைத் தருகின்றனவா? இல்லை. பயனைக் கருதியே மலர்கள் வண்டுகளுக்குத் தேனை யளிக்கின்றன. பெரும்பாலும் மலர்கள் தங்களது விருத்தியைக் கருதியே தம்மிடத்தில் தேனுள்ளதென்று தமது நிறத்தினல் வண்டுகளுக்கு அறிவிக்கின்றன. பிராணிகளிடத்து ஆண் பெண் என்ற இருவகை காணப்படுவதுபோல, பூக்களிடத்தும் இருவகை யுண்டு. பூக்களின் அடிப்புறத்தேயுள்ள தேனைப் பருகவரும் பிராணிகளுக்குத் தேன் உண்பதற் கேற்றபடியாக நீண்ட உறுப்புக்கள் வாய்ந்திருக்கின்றன. இப்பிராணிகள் தேனை யுண்ணும்போது அம்மலரிலுள்ள மகரந்தப் பொடிகள் அவற்றின் உறுப்புக்களில் ஒட்டிக்கொள்ளும். இவ்வாறு மகரந்தப் பொடிகள் ஒட்டிக்கொண்ட உறுப்புக்களோடு அப்பிராணிகள் வேறு

மலரிடத்துக்குச் செல்லும். அப்பொழுது அம்மலர்களில் உள்ள கருப்பைக்குச் சமானமானதொரு பொருளிடத்து அம்மகரந்தப் பொடிகள் செல்வதால் விதைகள் உண்டாகும். இவ்வாறே செடி, கொடி, மரங்கள் தோன்றுவதற்குக் காரணமாகின்றது. வண்டினங்கள் செய்யும் பேருபகாரத்தைப் பார்த்தீர்களா? இந்த வண்டினங்கள் தேனை யுண்டு மலர்களுக்குக் கைம்மாறு செய்வதுபோல நாம் ஒருவர் செய்த நன்றியை மறவாது நன்றி செலுத்தவேண்டும்.

## 3. உடல் நலம்

உலகத்திலுள்ள எல்லா வுயிர்களிலும் மனிதனே சிறந்தவன். மனிதன் ஐம்புலவறிவுடன் மனவுணர்ச்சியும் உடையவன். இம்மனவுணர்ச்சியினால் இயற்கையாகவுடைய அறிவைச் செயற்கையறிவாகிய கல்வியறிவினால் சிறப்புறச் செய்துகொள்ளுகின்றான். இவ்வகையான அறிவைக் கொண்டு ஒருவன் அடைவதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பேறுகளையும் அடைய முயலுகிறான். இப்படிப்பட்ட பேறுகளைப் பெறுதற்குக் கருவியாகவிருப்பது நமது உடலேயாம். இவ்வகையான உடம்பை நோயின்றிப் பாதுகாத்துக்கொள்வது நமது கடமையல்லவா?

ஆதலால் நாம் உடல் நலத்தோடு கூடி வாழ்வதற்கு ஏற்றவழிகளைத் தேடிக்கொள்வது அவசியமாகும். நாம் உடல்நலத்தோடு கூடியிருப்பதற்குப் பிணியின்றி இருக்கவேண்டும். நமக்கு வரும் உடற்

பிணியானது நமது அறியாமையாலும், அசாக்கிரதை யாலும் உண்டாகிறது. நாம் நல்ல திடமான உடலோடு கூடி நன்மை பெறவேண்டு மென்றால், நாம் நல்ல காற்றையும், நல்ல உணவையும், நல்ல நீரையும், தூய ஆடையையும், உடற் பயிற்சியையும் நாளும் கவனித்து வரல்வேண்டும்.

நாம் இருக்கும் வீடுகளுக்குப் பக்கங்களில் வேம்பு முதலிய நல்லமரங்களையும்,செடிவகைகளையும் வைத்து உண்டாக்கல் வேண்டும். வீடுகளை மேட்டு நிலங்களில் கட்டவேண்டும். வீடுகளில் பலகணிகளை வேண்டிய மட்டும் அமைப்பித்தல் வேண்டும். வீடுகளுக்குப் பக்கத்தில் பள்ளங்களில் இலைகளை அழுகவிடுதலும், நீர் நின்று வற்றிச் சேறுபட விடுதலும் ஆகாவாம். படுக்கும் அறையில் மக்களது நெருக்கம் இருத்தலாகாது. இவ்வாறு இருந்தால் நல்ல காற்று நிறைந்திருக்கும்.

நாம் உண்ணும் உணவு நமது தேசத்துக்கும் காலத்துக்கும் ஏற்றதாயிருக்கவேண்டும். நமது உடம்புக்குத் தக்கதாகவும், சாரமுள்ளனவாகவும் இருக்க வேண்டும். அழுகிய பழங்களையும், பழங்கறிகளையும், கெட்டுப்போன உணவுகளையும் உண்ணலாகாது.

இப்படிப்பட்ட உணவை உண்டால் நோய் செய்யும். உண்ட வுணவு சீரணமான பின்பு உண்ணவேண்டும். பசித்த பின் உண்ணவேண்டும். "பசித்த பின் உண்க, தாக மெடுத்தால் தண்ணீர் குடிக்க" என்பது ஒரு பழமொழி. ஒவ்வொருவருக்கும் உண்டபின் போதும் என்ற உணர்ச்சியுண்டாகும். அதிகமாக உண்ணின் அசீரணப்பட்டுப் பல நோய்களையும் தரும். பசித்த பின் உண்ணத்தக்க உணவுகளை அளவறிந்து

உண்ண வேண்டும். அதுதான் நோயற்ற வாழ்வுக்கு வழியாகும். "அற்றால் அளவறிந்து உண்க" என்பது நீதி வாக்கியம். பருகும் நீர் அழுக்கில்லாததா யிருக்க வேண்டும். கலங்கலா யிருத்தலாகாது. கலங்கியிருப் பின் காய்ச்சிக் குடிக்க வேண்டும். எந்த நீரையும் காய்ச்சி ஆறவைத்துப் பருகுவது உத்தமமாகும்.

நமது உடம்பில் வேர்வை நீரால் உண்டாகும் அழுக்குப் படியாமலிருக்கும்படி நன்றாய்த் தேய்த்துத் தினமும் நீராடவேண்டும். நீராடியபின் உலர்ந்த ஆடைகளை உடுத்திக்கொள்ளவேண்டும். கைகால்களைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். உண்ணும் உண வையும், உடுக்கும் உடைகளையும், இருக்கும் இடத் தையும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். "சுத்தம் சுகம் தரும்" என்பது பழமொழி.

நாம் நீண்டகாலம் சுகமாய் வாழ்வதற்கு உடம்பு ஆதாரமானது. சுவரை வைத்துக்கொண்டு சித்திரம் வரைதல் வேண்டும். அதுபோல், உடம்பை நல்ல நிலை யில் வைத்துக்கொண்டாலன்றி நாம் நன்னிலையில் இருக்கமுடியாது. ஆதலால் உடம்பு உரமாயிருக்கும் பொருட்டு நன்றாய்ப் பயிற்சி செய்யவேண்டும். நல்ல காற்றுள்ள இடங்களில் ஓடியாடி விளையாடுதல், சிலம் பம் விளையாடுதல், மல்யுத்தம் செய்தல், குதிரை யேற் றம் முதலியன அவரவர்கள் தகுதிக்கேற்ப ஏதேனும் ஒன்றைத் தினமும் செய்து வரல்வேண்டும். இவற் றைக் கையாளுதலே உடல் நலத்தைப் பெறுவதற்கும் நீண்ட ஆயுளுடன் உயிர்வாழ்வதற்கும் ஏற்ற வழி யாகும்.

# 4. தொழில்

நமது வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழில்கள் பலவாம். அவைகளில் மக்கள் உயிர் வாழ்வதற்கு உதவியாகிய உணவுப் பொருள்களை யெல்லாம் தரக்கூடிய பயிர்த்தொழில் முதன்மையாகக் கருதப்படும். ஏனெனில் மற்றைய பொருட்களிருந்தும் ஒருவனுக்கு உணவுப்பொருள் இல்லையேல், அவன் உயிருடனிருக்க முடியாது. உயிரின்றி உடல் நிலையாது. ஆதலால் உணவுப்பொருள்களுக்காதாரமாகியஉழவுத்தொழிலே எல்லாத் தொழில்களிலும் ஏற்றமுடையதாகும்.

இத் தொழிலுக்கு இரண்டாவதாக எண்ணத்தக்க தொழில் நெசவுத்தொழிலாகும். உண்ணும் உணவுக்குப் பின் நமக்கு இன்றியமையாத பொருள் உடுக்கும் உடையாகும். நாம் ஆடையின்றி யிருக்க முடியாது. அவரவர்கள் நிலைமைக்குத் தக்க ஆடை வேண்டுமல்லவா? "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்று நமது பெரியோர்களும் சொல்லி யிருக்கின்றார்கள். "ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்னும் பழமொழியும் வழங்கி வருகிறது. ஆதலின் ஆடையை ஆக்கிக்கொள்ளத்தக்க இந்நெசவுத் தொழிலின் அவசியம் விளங்குகிறதல்லவா? இத் தொழிலே குற்றமற்ற தொழிலாகும். முன்னே சொல்லப்பட்ட பயிர்த் தொழிலிலும் குற்ற மேற்படும். உழவுத் தொழில் செய்யுங் காலத்தில் பல உயிர்களுக்குக் கேடு சம்பவிக்கும். ஆனல் இதில் எவ்வகையான குற்றங்களும் நேர்வதற்கு வழியில்லை. பிறருக்குத் தீங்கு விளைக்காத தொழில். பிறர்களை வஞ்சிக்கவும்

ஏமாற்றவும் இடமிராது. இதனாலேதான் உழவுத் தொழிலைச் சிறப்பித்துப் பாராட்டிய நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் குற்ற மற்ற நெய்தற் றொழிலைக் கைக்கொண்டு தமது வாழ்க்கையைத் தூய தாக நடத்தினர்.

இவ்வகையாகப் பயிர்த் தொழிலும், நெய்தற் றொழிலும் மக்களுக்கு இன்றியமையாத தொழிலா யிருப்பினும், நமது வாழ்க்கைக்கு வேண்டிய பல வகைப்பட்ட பொருள்களையும் செய்வதற்குரிய பல தொழில்களும் இருக்கின்றன. இத் தொழில்களில் கைத்தொழிலும் ஒன்றாகும். கையினால் செய்யப்படும் தொழில்களுக்குக் கைத்தொழில் என்று பெயராயி னும் நமது வீடுகளில் செய்யப்படுகின்ற உணவு சமைத் தல், நீர் இறைத்தல், விறகு வெட்டுதல் முதலியன கைத்தொழிலென்று சொல்லப்பட மாட்டா. மரத் தைக் கொண்டும் உலோகங்களைக் கொண்டும், இவை போன்ற பல பொருட்களைக் கொண்டும் நமது வாழ்க் கைக்கு வேண்டிய பொருட்களைச் செய்துகொள்ளும் தொழில்கள் எல்லாம் கைத்தொழில்களாகும்.

ஒருவனுக்கு உணவு கிடைக்காவிடினும், உத்தி யோகம் முதலிய பிழைப்புக்கேற்ற பல தொழில்களும் அகப்படாவிடினும் கைத்தொழில் தெரிந்திருப்பா னாயின் அவன் எப்பொழுதும் வறுமையின்றி மன மகிழ்ச்சியுடன் வாழ்வான். கையினால் செய்யப்படும் பல பொருட்களும் மனித வாழ்வுக்கேற்றவைகளா யிருப்பதனால் யாவரும் அவைகளை விலை கொடுத்து வாங்குவார்கள். ஒரு தொழிலாளி தான் செய்த பொருட்களை எந்த விலைக்கும் விற்கலாம். சில சமயத்

தில் அதிக இலாபத்திற்கும் விற்பான். சில சமயத்தில் குறைந்த விலைக்கும் விற்பான். அவன் எவ்வளவுக்கு விற்றாலும் பொருள் அவனிடம் எந்நேரமும் இருந்துகொண்டே யிருக்கும். அவனது வாழ்க்கையும் ஒருவாறு செவ்வையாக நடைபெறும். இப்பொருள்களைக் கொண்டே வாழ்க்கைக்கு வேண்டிய ஏனைய பொருட்களையும் தேடிக்கொள்வான். தொழிலாளிக்குத் தன்னாடு என்றும் பிறநாடென்றும் வித்தியாசமில்லை. அவன் எங்கு செல்லினும் தொழிலுக்குப் பஞ்சமில்லை. அவனது வாழ்க்கைக்குக் குறைவராது. இக் காரணங்களாலேதான் கைத்தொழில் சிறப்பாகப் பாராட்டப்படுகிறது. கைத்தொழிலே ஒரு நாட்டிற்குச் சிறப்பைக் கொடுக்கும். நாமும் கைத்தொழிலில் தேர்ச்சி பெற்று, மற்ற நாட்டினரைப்போலச் சீரும் சிறப்பும் பெறுவோமாக.

## 5. நயவஞ்சகன்

ஒரு நாட்டில் தேவசன்மா என்கிற ஒரு சந்நியாசி இருந்தான். அவன் தினமும் பிச்சை யெடுத்துச் சேர்த்துவைத்த பொருளைத் தனது கந்தைத் துணிக்குள் வைத்து ஒருவரு மறியாதபடி தைத்துப் போர்த்துக்கொண்டு பிச்சையெடுத்து வந்தான். இதை ஆஷாடபூதி யென்ற ஒரு பார்ப்பனன் எப்படியோ தெரிந்துகொண்டான். ஒருநாள் அவன் ஆலோசித்து அக் கந்தையை எப்படியாவது திருடிக்கொண்டால் நெடுநாளைக்குச் செலவுக்காகும் என்று நினைத்து, ஒரு நாள் பிரமசாரியைப்போல் அச் சந்நியாசியிடத்துக்குச்

சென்றான். அவன் காலில் தனது முடிபட வணங்கி வீழ்ந்து, 'சுவாமி! அடியேனுக்கு அறிவுரைதந்து, சாரமற்ற குடும்ப வாழ்க்கையில் சிக்குண்டு நான் அலைந்து துயருறுது சிறிது கடைக்கண் பார்த்துக் கடைத்தேறப் பண்ணவேண்டும்' என்று தன் குறை யிரந்து நின்றான். இப்படிப் பாசாங்கு செய்த அப் பார்ப்பனனுடைய வஞ்சத்தையுணராத சந்நியாசியும், அவனுடைய வார்த்தைகளை நம்பி அவன் தலைமேற் கைவைத்து வாழ்த்தி 'பயப்படாதே' என்றுரைத் தான். அதைக்கண்ட ஆஷாடபூதி மனமகிழ்ந்து, அன்றுமுதல் வஞ்சக சித்தனாய், அவன் காலாலிட்ட வேலைகளையெல்லாம் கையாற் செய்துகொண்டு, கந்தை யைக் கைப்பற்றச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் இவ்விருவரையும் ஒரு பிராமணன் விருந்துக்கு அழைத்தான். இருவருஞ் சென்று விலாப்புடைக்க உண்டு திரும்பி வந்தனர், இரு வரும் நெடுந்தூரம் திரும்பி வந்ததும் பின்னே வந்த ஆஷாடபூதி ஒரு துரும்பை எடுத்துத் தன் தலைமேலே வைத்துக்கொண்டு, அத்துரும்பைக் குருவுக்குக்காட்டி, "ஐயையோ! நமக்கு உணவளித்த பிராமணனது வீட்டுத் துரும்பொன்று எனது தலையில் ஒட்டிக் கொண்டு வந்துவிட்டதே! அன்னமிட்ட வீட்டில் கன்ன மிடலாமா? உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண் டுமே!" என வாய்பதற நாக்குழற நடுநடுங்கி, "இதை அந்த அன்னதாதா வீட்டிற் போட்டுவிட்டு இதோ நொடிப் பொழுதில் வந்துவிடுவேன்" என்று குருக் கள் பார்க்கும்படி மிகுந்த பரபரப்புடன் ஓடி சிறிது தூரஞ் சென்று ஒரு மறைவானவிடத்தில் இருந்தான்.

சிறிது நேரங்கழித்து இரைக்க இரைக்க ஓடிவந்து ஆசிரியரின் காலில் விழுந்து எழுந்தான். "சுவாமி! உம்முடைய கிருபையால் இந்தக் கொடிய பாவத்தினின்றும் மீண்டேன். உம்மால் யான் கடைத்தேறினேன்" என்றுரைத்தான். இதைக்கண்ட அச்சந்நியாசி பெரு வியப்படைந்து, "இவன் பிறர் சொத்தை விரும்பாத பெருங்குணவான்" என்று நம்பினன்.



ஒருநாள் இருவரும் ஒரு குளக்கரை வழியாகச் செல்லும்போது அத்துறவி தன்னிடத்திலிருந்த அக் கந்தையைச் சீடன் கையில் கொடுத்து அங்கோரிடத்தில் இருக்கச் சொல்லிவிட்டு அப்பாற் சென்ருன். அச் சமயத்தில் இரண்டு ஆட்டுக்கடாக்கள் ஒன்ருே

டொன்று முட்டிச் சண்டை செய்துகொண்டிருந்தன. அவைகளில் அடிபட்ட ஆட்டைத் தின்னக் கருதிய ஒரு நரியானது அவைகளினிடையே சென்று முட்டுப் பட்டு இறந்தது. இதனைப் பார்த்துக்கொண்டேயிருந்த சந்நியாசி சிறிதுநேரங் கழித்துத் திரும்பி வந்தான். அப்போது சீடனும் "இதுதான் நல்லசமயம்; காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்" என்று நினைத்து அக்கந்தையைச் சுருட்டிக்கொண்டு ஓடிப் போனான். உடனே சந்நியாசிவந்து பார்த்து சீஷனைக் காணாது திடுக்கிட்டு "ஓகோ! ஆஷாடபூதி நம்மை ஏமாற்றிவிட்டான். அறியாது மோசம் போனேமே" என்று வருந்தி வெளிக்குத்தெரிந்தால் வெட்கமென்று உணர்ந்து ஒருவருக்குஞ் சொல்லாதிருந்து விட்டான்.

பிள்ளைகளே, இவ்வாஷாடபூதிபோன்ற நயவஞ்சகர்கள் பலர் இருக்கின்றார்கள். சிலர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்கள். வஞ்சகமாக நடிப்பார்கள். அன்புடையவர்கள்போல் பேசுவார்கள். தம்மை நம்பும்படியான காரியங்களைச் செய்வார்கள். ஆதலால் இவைகளை நன்றாயறிந்து ஒருவனுடைய குணநலந்தெரிந்து சேரவேண்டும். 'சேரிடமறிந்து சேர்' என்பது ஔவையார் அமுத மொழியல்லவா?

## 6. முயற்சி

முயற்சியாவது செய்யவேண்டிய செயல்களில் சோர்வடையாது முயலுவதாம். இம் முயற்சி சரீர முயற்சியும் மனோ முயற்சியும் என இரு வகைப்படும்

சரீர முயற்சியினுல் பொருளீட்டவும், நற்செயல்களைச் செய்யவும், புகழ் அடையவும் ஆகும். மனமுயற்சியினுல் கல்வியறிவும் நற்சிந்தனையும் பெறலாம். இம் மனமுயற்சியோடு ஒன்றுசேர்ந்த வழியே சரீர முயற்சி பயன் தரும். ஆதலின் சரீர முயற்சியிலும் மன முயற்சியே சிறப்புடையதாகும். இவ்வுலகில் நாம் அடைவதற்குரிய பல நன்மைகளைப் பெறுவதற்குக் கருவியாயுள்ளவை இவ் விருவித முயற்சிகளுமாகும். இம் முயற்சிகளை யுடையவனே இவ்வுலகில் சிறந்து விளங்குபவனுவான்.

இவ்வுலகில் நமக்குப் பெருமை யளிப்பன கல்விச் செல்வமும் பொருட் செல்வமுமேயாம். இவ்விருவித செல்வங்களையும் பெறுவதற்குக் கருவியாயிருப்பது முயற்சியாகும். முயற்சியில்லாதவர் எத்தகைய பொருளுடையவராயிருப்பினும் இல்லாதவரேயாவர். முயற்சியுடையவர்கள் பொருளற்றவராயிருப்பினும் உடையவராவர். முயற்சியுடையார் கையிலுள்ள பொருளையிழக்கினும் அதனுல் மனமுடையார். முயற்சியில்லாதவர்களிடத்து ஒருபோதும் பொருளும் புகழும் பொருந்தா. முயற்சியுடையவர்களிடத்துக்குச் செல்வம் தானே சென்றடையும். அவர்கள் முயற்சித் திறமைக்குத் தக்கபடி பெருமையடைகிருர்கள். முயற்றின்மைக்குத் தக்கபடி சிறுமை யடைகின்ருர்கள். மக்களது பெருமைக்கும் சிறுமைக்கும் காரணம் அவர் தம் செயலேயாகும்.

முயற்சியுடையவர்கள் தாம் முயலும் காரியத்தின் முடிவையே நோக்குவார்கள். அதனுல் விளையும் பயனைக் கருதமாட்டார்கள். அவர்கள் எடுத்த கருமங்கள்

இனிது முடியும். எல்லா நலத்தையும் பெற்று மகிழ்வர். தளராமுயற்சி விதியையும் வெல்லுமென்பர். உதாரணமாக: மிருகண்டுமுனி மைந்தனாகிய மார்க்கண்டன் தனது சலியா முயற்சியினாலே காலனையும் வென்று இன்னும் நின்று நிலவுகின்றான் என்பர். ஒருகால் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்குக் கேடு வருவதாயினும் அம்முயற்சியின்றலை நின்று மனம் சலிப்பின்றி பின்னடையாது ஊக்கங்கொண்டு தமது காரியத்தில் உயர்வுபெறுவர். இவ்வித சலியா முயற்சியுடைமையினா லன்றோ ஆடவர்கள் ஆண்மையுடையார் எனப் புகழப்பெற்றார். இவ்வகையான முயற்சியில்லையேல் கல்வி செல்வம் முதலியவற்றால் பெருமையடையார். முயற்சியில்லாதவர்கள் தமக்கும் பயனற்றவராவர்; பிறர்க்கும் பயன்படார்.

ஒரு சிலர் முயற்சிசெய்யாது விதி பயனையளிக்கும் என்று கூறி வறிதேயிருப்பார். இவர் கூற்று விந்தையே. பசித்த ஒருவன் தனக்கு இடப்பட்ட பாற்சோற்றைப் பிசைந்து உட்கொள்ளினன்றோ அவன் பசியாறும்! அவ்வாறின்றி விதி பயனையளிக்கும் என்று சோற்றைப் பிசையாமலும் உட்கொள்ளாமலும் யாதொரு செயலுமின்றி யிருப்பின், அவன் பசி எவ்வாறு நீங்கும்? மற்றும் சிலர் தமது முயற்சிக்குத் தக்க பலனை யளிக்கத்தகுந்தது நல்வினை யென்றும் வறிதேயிருப்பர். இவர்களையும் உலகம் பழிக்கும். ஆதலால் அவரவர் முயற்சி செய்வாராயின் அம்முயற்சி அவரவர்களுக்கு ஏற்ற பயனையளிக்கும். ஆதலால் நாம் முயற்சிக்குத் தக்க பயனையடைவோம். முயற்சி எப்பொழுதும் வீண்போகாது. அதனை ஒருவரும்

கைவிடலாகாது. "முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்" என்பது பழமொழி யன்ருே !

இவ்வகையான முயற்சியினு லன்ருே ஐம்பது அறுபதாண்டுகளுக்குமுன் கீழ்நிலையிலிருந்த ஜப்பான் முதலிய தேசங்கள் இப்பொழுது ஏனைய நாடுகளும் கண்டஞ்சும்படியான அதியுன்னதநிலையிலிருந்து வருகின்றன. இப்பொழுது நமது நாட்டில் காணப்படுகின்ற எல்லாப்பொருள்களும் ஜப்பான் தேசத்தாரது நன் முயற்சியாலான பொருட்களல்லவா? ஆதலால் நாமும் நம் முன்னோர்களைப் போலவும் முன்னேற்றமடைந்த நாட்டினரைப்போலவும் நன் முயற்சியுடையவர்களாக முயலுவோமாக. அவ்வாறின்றிச் சோம்பியிருப்பின் "சோம்பரென்பவர்தேம்பித்திரிவார்" என்ற நீதிமொழிக் கிலக்காகித் துயருழந்து வருந்துவோம்.

## 7. ஆறுகள்

மக்கள் உயிர்வாழ்வதற்குரிய உணவுப் பொருள்களில் நீரும் ஒன்று. உணவுப் பொருள்கள் விளைவதற்குக் காரணமாயிருப்பது தண்ணீர் அல்லவா? அத் தண்ணீர் நமக்கு எவ்வாறு கிடைக்கின்றது? மழையினுலன்ருே? மலைப்பிரதேசங்களில்தான் மழை அதிகமாய்ப் பெய்கின்றது. மழை எவ்வாறு பெய்கின்றது?

பூமியிலுள்ள கடல், ஏரி, ஆறு, குளம் முதலியவைகளிலுள்ள தண்ணீர், சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி, மேலே சென்று மேகமாக மாறுகின்றது. இம்மேகங்கள் காற்றினுல் தள்ளப்பட்டுப் பல விடங்

களிலும் செல்கின்றன. இவ்வாறு செல்லும் மேகங்களின் மீது குளிர் காற்று வீசும்போது மழையாகப் பெய்யும். குளிர்ந்த தேசங்களிற் செல்லும்போதும் மாரியாகவும் பெய்யும். மலைகளின் உயர்ந்த பாகங்களில் எப்பொழுதும் குளிர்காற்று வீசிக்கொண்டிருக்கும். இந்த மலைகளால் அம்மேகங்கள் தடுக்கப்படும் போது, அங்குள்ள குளிர்காற்றுப் பட அம்மேகம் மழையாகப் பெய்யும். இதனுல்தான் மலைகளிலும், மலையடுத்த தேசங்களிலும் மழை அதிகமாகப் பெய்கின்றது.

இவ்வாறு மலைகளில் பெய்யும் மழை நீர், சிறு சிறு அருவிகளாக ஓடி, ஒன்றுகூடி பெரிய ஆருகப் பெருகிச் சமவெளிகளிற் பாய்ந்து, நாடுகளிலும் நகரங்களிலும் உள்ள நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. சில ஆறுகள் எப்பொழுதும் நீர் வற்ருது ஓடுகின்றன. இவைகளுக்கு ஜீவ நதிகள் என்று பெயர். பனியடர்ந்த பெரிய மலைகளிலிருந்து உற்பத்தியாகும் நதிகளே இப் பெயர் பெறும். ஏனெனில், மாரிக்காலத்தில் பெய்யும் மழையாலும், கோடைகாலத்தில் சூரிய வெப்பத்தால் பனிக்கட்டிகள் உருகுவதாலும் பெரிய மலைகளிலிருந்து வரும் பேராறுகள் எப்பொழுதும் நீருடையனவா யிருக்கின்றன. நாம் வசிக்கும் இந்து தேசத்தின் வட பாகத்திலுள்ள இமயமலையிலிருந்து உற்பத்தியாகி வரும் கங்கை சிந்து முதலியவை ஜீவ நதிகளாகும். சிறிய மலைகளிலிருந்து உற்பத்தியாகும் ஆறுகள் மாரிக்காலத்தில் மட்டும் வெள்ளப் பெருக்கெடுத்தோடும். கோடைக் காலத்தில் நீர் வற்றிப் போகும். காடுகளில் பெய்யும் மழை நீரெல்லாம்,

ஒன்றுசேர்ந்து ஆறுகளாகப் பெருகியோடும். இவ்வகையான ஆறுகளுக்குக் காட்டாறுகள் என்றுபெயர்.

இவ்வகையான ஆறுகளில் சில சமவெளிகளிற் பாய்ந்து வழியிலுள்ள நிலங்களை யெல்லாம் செழிப்பாக்கிக்கொண்டு சென்று கடைசியில் கடலில் விழும். சில ஆறுகள் பேராறுகளோடு கலக்கும். இவைகளுக்கு உபநதிகள் என்று பெயர். பவானி, நொய்யல், அமராவதி முதலியன காவிரிக்கு உபநதிகளாகும். சில நதிகள் பல கிளைகளாகப் பிரிந்து செல்லும். இவ்வாறு பிரிந்து செல்லும் நதிகளுக்குக் கிளை நதிகள் என்று பெயர். ஆறுகள் கடலோடு கலக்கும் இடத்திற்கு முகத்துவாரம் என்று பெயர். இம் முகத்துவாரத்துக் கருகில் சில மேட்டு நிலம் தோன்றும். இதை ஆற்றிடைக் குறை யென்பார்கள். இதற்கு ஆங்கிலத்தில் டெல்டா என்று பெயர்.

மலைகளில் பெய்யும் மழைநீர் பள்ளங்களில் பாய்ந்து ஓடும்போது அருவிகள் என்று சொல்லப்படும். பின் அவை ஒன்றுகூடிப் பெருக்கெடுத்துச் சமவெளியில் பாயும்போது நதி யெனப்படும். இவைகள் மலைகளிலிருந்து உற்பவித்து ஓடிவரும்போது அங்குள்ள சந்தனம், தேக்கு முதலிய மரங்களையும், இன்னும் பலவகைச் செடி கொடிகளையும், உலோக வகைகளையும் மற்றுமுள்ள அரிய பொருள்களையும் அடித்துக்கொண்டு வரும். ஆதலால் இந்த ஜீவ நதிகளில் நீராடினவர்களுக்கு உடல் நலம் வாய்க்கும். இதனால்தான் நமது நாட்டவர் இப் பேராறுகளைப் புண்ணிய நதி யென்று பாராட்டுவர். பருகுவதற்கும் ஆற்று நீரே சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

நமது உணவுப் பொருள்களெல்லாம் விளைவதற்கு இவ் யாறுகளே காரணமாகும். இவ்யாற்றின் வளத்தால் நிலவளஞ் செழித்து மக்கள் வாழ்வதற்கு ஏதுவாகின்றது. ஆறு பாயாத நாடு நாடல்ல. ஆறில்லாத ஊர்கள் பாழாய்க் கிடப்பதைப் பார்க்கலாம். இதனாலே தான் "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்று சொல்லியிருக்கின்றார்கள். மக்களது சிறந்த ஒழுக்கத்திற்கும் இவ் யாற்று ஒழுக்கத்தை உவமையாகக் கூறுவர் புலவோர். இவ்யாறுகளில் உண்டாகும் மீன் முதலியவை மக்களுக்கு உணவாகும். இந் நதிகளால் உண்டாகும் பயன் பலவாகும். மாலைக்காலங்களில் யாற்றின் கரைக்குச் சென்றிருந்து பார்க்க, மறையும் சூரியனது சிவந்த கிரணங்கள் நீரில் பிரதி பிம்பமாகத் தோன்றுவது மனதுக்கு மகிழ்ச்சி தரும்.

ஆனால் இவ் யாறுகளால் சில தீமையு முண்டு. மாரிக்காலத்தில் இவ் யாறுகள் பெருக்கெடுத்தோடும். அப்பொழுது அதைப்பார்ப்பவர் மனதுக்கு ஒருவகை அச்சத்தையும் நடுக்கத்தையும் பயக்கும். இப்பெருக்கினால் யாற்றை யடுத்துள்ள ஊர்கள் அழிந்துவிடும். சில சமயங்களில் அவ்வூரிலுள்ள ஆடுமாடுகளையும் வீடுகளையும் ஆறு அடித்துக்கொண்டு போவது பரிதாபமாயிருக்கும். அப்பொழுது நேரும் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் கணக்கிலடங்கா. பயிர்பச்சைகளெல்லாம் அழிந்துவிடும்.

பெரும்பாலும் நாம் வசிக்கும் இத்தேசம் புகழப்படுவதற்குக் காரணம் என்ன? இதன் செழுமையும் பெருமையுமேயாம். இத் தேசத்தின் செழுமைக்குக் காரணம் பல பெரிய யாறுகளைத் தன்னகத்தே

கொண்டு சிறப்புற்றிருப்பதேயாம். யாறுகளையுடைய நாடுகள்தான் செல்வத்திற் சிறந்திருக்கும். இப்படியாக இவ்யாறுகளால் விளையும் நன்மைகள் பலவாகும்.

## 8. உற்று நோக்குதல்

உற்று நோக்குதல் என்பதற்கு ஊன்றிப்பார்த்தல் என்பது பொருளாகும். அதாவது எவற்றையும் ஆழ்ந்து அறிதலாகும். இவ்வாறு நோக்குதலும் ஒரு வகைக் கல்வியேயாம். இவ்வகையான கல்வி பாடசாலைகளில் கற்பதன்று. பாடசாலைகளில் புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்ளுகின்றோம். ஆனால் உற்று நோக்குதலாகிய கல்விக்குப் பாடசாலையில்லை. நாம் வசிக்கின்ற இவ்வுலகமே பாடசாலையாகும்.

பாடசாலைப் படிப்பானது ஒருவனுடைய வாழ்க்கைக்குப் போதிய பயன் தராது. இப் படிப்பானது வீடுகட்டுவதற்கு எடுக்கப்படும் அடிப்படைபோன்றது. உலகியற் கல்வியே நமது வாழ்க்கைக்குப் பெரும் பயன் தருவதாகும். இக்கல்வி கல்லாதவன் கிணற்றுத் தவளைபோல் ஆவன். "பள்ளிக் கணக்குப் புள்ளிக்குதவாது" என்பது பழமொழியல்லவா? சாதாரணமாக எவற்றையும் மேற்போக்காகக் கவனிக்காது உற்றுநோக்கி யறிதல் நமக்குப் பெரும்பயன் அளிக்கும்: பல நீதிகளையும் உணர்த்தும்.

சிறு குழந்தைகளுக்கும் இப்படிப்பட்ட பழக்கமுண்டு. பேசத்தெரியாத சிறு குழந்தைகளுக் கெதிராக ஒரு விளையாட்டுச் சாமானைக்கொண்டு சென்றால்

அக்குழந்தை அதை ஆவலுடன் பற்ற முயலுவதைக் காணலாம். அக்குழந்தை அதைப் பற்றியவுடன் வாயில் வைப்பதையும், அதைத் துண்டுகளாக உடைத்தெறிவதையும் காண்கின்றோம். இதனால் சிறு குழந்தைகளுக்கும் உற்று நோக்குஞ் சக்தி யுண்டென்று விளங்குகிறதல்லவா? இன்னும் சில குழந்தைகள் உறங்குந் தொட்டிலின் மேலும் சில பதுமைகளைக் கட்டித் தொங்கவிடுவார்கள். அழுதுகொண்டிருக்கும் பிள்ளை அதைக் கண்டவுடனே அழுகையை நிறுத்தி விடுகின்றது.

ஆகவே சிறு குழந்தைகளும் தம்மனதை ஒரு வழிப்படுத்தி உற்று நோக்குகின்றனவென்பது விளங்கும். நமது சிறுவர்களுக்கும் இப்பழக்கத்தை விருத்தி செய்துவரவேண்டும். இவ்வாறு செய்தால் "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிக்கிணங்க அவர்களது அறிவு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து அவர்களது வாழ்க்கையில் பெரிதும் பயன் தரும்.

ஒரு சிலர் இவ்வுற்று நோக்குதலை அசட்டை செய்கின்றனர். தமது சொந்தக் காரியத்தையும் ஆழ்ந்து சிந்திப்பதில்லை. எதையும் அற்பமென்று இகழ்ந்து விடுவர். ஆனால் அறிவுடையவர்களுக்கு உலகில் எதுவும் அற்பமில்லை. அவர்கள் எதையும் அற்பமென் றிகழார். இத்தன்மையால்தான் பெரியோர் பலர் கடிகாரம், தொங்குபாலம், நீராவியந்திரம்போன்ற அரிய பெரிய காரியங்களைக் கண்டுபிடித்து பெரும் புகழ்பெற்று விளங்குகின்றனர். இதை விளக்குவதற்கு இங்கு ஒருகதை சொல்லுவோம்.

ஒருநாள் ஒரு காட்டுமார்க்கமாகச் சென்றுகொண்டிருந்த துறவியொருவர் இரண்டு வழிப்போக்கர்களைச் சந்தித்தார். அவர்கள் ஏதோ கவலையுடன் வருவதாகக் கண்டார். "அகத்தினழகு முகத்திற்றெரியு" மல்லவா? அவர்கள் கிட்ட நெருங்கிவருதலும் அவர்கள் தாம் இழந்தவொன்றைத் தேடிக்கொண்டு வருபவர்போல் காணப்பட்டார்கள். துறவியார் அதனை யுணர்ந்தார்.

பெரியார் அவ்விருவரையும் பார்த்து, "ஐயா! நீங்கள் இழந்தவொன்றைத் தேடிக்கொண்டு வருபவர்களாகத் தோன்றுகின்றீர்கள். அவ்வாறு ஏதேனும் கைவிட்டுப் போனதுண்டோ?" என்று வினவினர். அவர்களும் 'ஆம்' என்றார்கள். அதற்கு நான்கு கால்கள் உண்டோ? என்றார். அவர்கள் 'ஆம்' என்றார்கள். "அதன் முதுகில் ஒருபுறம் கோதுமையும், மற்றொரு புறத்தில் வெல்லமும் சுமையேற்றப் பெற்றிருந்ததோ?" என்றார். "ஆம்" என்றார்கள். "அதற்கு முன்னம்பற்க ளில்லையோ?" என்றார். "ஆம்" என்றுரைத்தார்கள். பெரியார் கடைசியாக "நீங்கள் ஒரு பொதிமாட்டையிழந்து தேடிக்கொண்டு வருபவர்போலத் தோன்றுகின்றது" எனவும் அவர்கள் மகிழ்ச்சியுற்று, 'சுவாமி! ஆமாம் எங்குக் கண்டீர்கள்? தாங்கள் கருணைபுரிந்து தெரிவிக்கவேண்டு" மென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்கள். உடனே, அத்துறவியார் "ஐயா! நான் ஒன்றையும் காணவில்லை" என்றார். அவ்வழிப்போக்கர் அவர்மீது ஐயங்கொண்டு அவரே தம் மாட்டைக் கொண்டுபோய் மறைத்துவைத்துள்ளார் என்றெண்ணி, அவரை யிழுத்துக்கொண்டு சென்று அடுத்த ஊரிலுள்ள நியாயாதிபதியிடம் விட்

டார்கள். நியாயாதிபதியும் வழிப்போக்கரது வழக்கைக்கேட்டுத் துறவியைப் பார்த்து "ஐயா! மாட்டை எங்குக் கண்டீர்? அது எங்கிருக்கிறது?" என்று கேட்டார்.

உடனே துறவியார், "ஐயா நீதிபதியே! நான் எதையும் காணவில்லை. அது எங்குளது என்பதையும் யானறியேன்" என்றார். நீதிபதி துறவியைப்பார்த்து "அப்படியானால் நீர் சொல்லியது முற்றிலும் பொய்யோ?" எனத் துறவி, "ஐயா இல்லை; இல்லை. நான் கூறியது உண்மையே. யான் செல்லும் வழியில் நான்கு காலடிச் சுவடுகளைக் கண்டேன், ஒரு புறத்தில் கோதுமையும், மற்றொரு புறத்தில் வெல்லக்கசிவும் வீழ்ந்திருக்கக் கண்டேன். வழியில் நடுவிலுள்ள புல் கடிபடாமல் சுற்றிலும் உள்ள புல் மேய்ந்திருக்கக் கண்டேன். இக் காரணங்களால் ஒரு பொதி எருது அவ்வழியே போயிருக்கவேண்டுமென்றும், அதனை இவர்கள் தேடிக்கொண்டு வந்திருக்கவேண்டுமென்றும் உய்த்துணர்ந்தேன்" என்றார். "ஆனால் யான் கண்ணால் காணவில்லை. யான் எதையும் ஆராய்ந்து பார்க்கும் இயல்புடையவன். ஆதலின் இவற்றையறிந்து இவர்களிடம் தெரிவித்தேன். இவர்களும் முகவாட்டத்துடன் காணப்பட்டார்கள்" என்றார். இவற்றையெல்லாங்கேட்ட நீதிபதி, அச்சந்நியாசியினது புத்திக் கூர்மைக்கு வியந்து அவரைப் புகழ்ந்து, அவரைக் குற்றமற்றவர் என்று போகவிடுத்தான்.

இவர் இவ்வாறு உற்று நோக்கியதனாலே கண்ணில் கண்டதுபோலத் தெளிவாய் எடுத்துரைத்தார். ஆதலால் நாம் எதையும் அற்பமென் றிகழலாகாது.

அற்பமானதைப்பற்றியும் நாம் ஆழ்ந்து சிந்தித்தால் அதனின்றும் பல நீதிகளையும் தெரிந்துகொள்ளலாம். அற்பமும் அரியபொருளாய்த் தோன்றும். எதையும் அற்பமென்று இகழாத இவ்வறிவினாலேயே பலர் சிறப்புற்று விளங்குகின்றார்கள்.

## 9. மின்சாரம்

மின்சாரம் என்பதற்கு "மின்னலின் சாரம்" என்பது பொருளாகும். இதைக் கண்ணுற் காண்பது அரிது. காற்றை அதன் வேலைகளால் அறிந்து கொள்வதைப் போல, மின்சாரத்தை அதன் வேலை களால் தெரிந்துகொள்ளலாம். மின்சாரத்தில் ஒளி யும், வேகமும், சூடும் அடங்கியுள்ளன. இவைகளைத் தொழிலால் அறிந்துகொள்ளலாம். இதை உபயோ கிக்கும் தொழில்களுக்குத் தக்கபடி சூடும், ஒளியும், வேகமும் வெளிப்படும். இதனை மக்கள் பல வகையி லும் உபயோகப்படுத்துகின்றார்கள். ஒவ்வொரு ஆண் டிலும் இதன் சக்தியைக்கொண்டு பற்பல விதமான புதிய வேலைகளைச் செய்து வருகின்றார்கள்.

நீராவி கண்டு பிடிக்கப்பட்ட பின்னர், நீராவியைக் கொண்டு வண்டிகளையும், இயந்திரங்களையும் கப்பல் களையும் செலுத்தி வந்தனர். நீராவி கண்டு பிடிக்கப் பட்ட சிலகாலத்துக்குப் பின் இந்த மின்சாரத்தைக் கண்டுபிடித்தனர். பிறகு நீராவி உபயோகிக்கப்பட்ட பல தொழில்களுக்கும் இந்த மின்சாரத்தை உபயோ கித்து வருகின்றனர்.

உதாரணமாக நமது நகரங்களிலுள்ள வீடுகளி லும், தெருக்களிலும் கம்பிகளால் இணைக்கப்பட்டு

எரிகின்ற விளக்கைப் பாருங்கள். இதற்கு முன் விளக்கெரிப்பதற்கு நமக்கு எண்ணெயும் நெருப்புக் குச்சியும் வேண்டும். இப்பொழுதோ நாம் இருந்த விடத்தி லிருந்துகொண்டே எண்ணெயின்றியும் தீயின் றியும் நமது வீடு முழுவதும் விளக்கேற்றி விடலாம். தெருவின் ஒரு புறத்திலிருந்து அத் தெரு முழுவதும் விளக்கேற்றலாம். அவ் விளக்குகளை அணைக்க வேண்டு மென்றாலும் நொடியில் அணைத்து விடலாம். இவ் வாறு இந்த விளக்குகள் எரியக் காரணமென்ன? இவ் விளக்குகளுட் பிரவேசிக்கும் இரண்டு கம்பிகளி னூடே செல்லும் மின்சாரமே காரணமாகும். இவ் விளக்குகள் காற்றினாலும் மழையினாலும் அணையா.

இதுபோலவே இச் சக்தியைக் கொண்டு பல வேலைகளையுஞ் செய்து வருகின்றார்கள். இப்படிப் பட்ட மின்சாரத்தை முதலில் கண்டு பிடித்தவர் அமெரிக்கா கண்டத்திலிருந்த சாம்பல் மார்ஸ் என்ற பெரியாராவர். இப் பெரியார் இச் சக்தியைக்கொண்டு நெடுந் தூரத்திலுள்ளவர்க்கும் சமாசாரத்தைத் தெரி விக்கும் வழியைக் கண்டுபிடித்தார். இதைத்தான் நாம் தந்தி என்று சொல்லுகிறோம். ஒவ்வொரு எழுத் திற்கும் ஒவ்வொரு விதமான ஓசையைக் குறியாகக் கொண்டு ஒருவருடைய சங்கதியை மற்றவருக்குத் தெரிவித்து வருகிறார்கள். மின்னல்கள் அதிவிரை வில் தோன்றுவது போலவே இவ்வோசைகளும் அதி விரைவாகச் செல்கின்றன. இக்கம்பிகள் தரை வழி யாகவே சென்றுகொண் டிருந்தன.

இதைப் பார்த்துகொண் டிருந்த மற்றொரு பெரி யார் இக் கம்பிகளைக் கடல் மார்க்கமாகச் செலுத்தும்

மார்க்கத்தைக் கண்டுபிடித்தார். அதிலிருந்து கடல் மார்க்கமாகவும் தந்தி செல்கின்றது.

நாம் ஒருவரோ டொருவர் நேரில் பேசிக்கொள் வது போலவே, நெடுந் தூரத்திலுள்ளவர்க ளோடும் இப்பொழுது பேசலாமல்லவா? அதற்குப் பெய ரென்ன? அதுதான் டெலிபோன் என்னும் பேசுங் கருவியாகும். இந்தப் பேச்சுக் கருவியும் மின்சார சக்தியைக் கொண்டே கண்டுபிடிக்கப்பட்ட தாகும். இதன் உதவியைக் கொண்டு சமாசாரங்களை அதி விரைவில் நேரில் பேசுவது போல் பேசித் தெரிந்து கொள்ளலாம். இக்கருவியைப் பெருஞ் செல்வர்கள் வீட்டிலும் பெரிய வியாபாரத் தலங்களிலும் தபா லாபீசுகளிலும் காணலாம்.

இதன் பிறகு சில அறிஞர்கள் ஒன்று கூடி ஆராய்ந்து இத்தகைய மின்சாரக் கம்பியில்லாமலே சமாசாரம் அனுப்பும் வழியைக் கண்டு பிடித்தார்கள். அது ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலும் செல் லும். இதற்குத்தான் கம்பியில்லாத் தந்தி என்று பெயர். இது எவ்வளவு ஆச்சரியமானது பாருங் கள்! நமது நகரங்களிலுள்ள சிங்காரத் தோட்டங்களி லும், சிற்றுண்டிச் சாலைகளிலும், செல்வச் சீமான்கள் மாளிகைகளிலும் இவ்வகையான அற்புதச் செயல் களைக் காணலாம். இந்த விடங்களிலிருந்து உலகத்தி லுள்ள பற்பல பாகங்களிலும் நடப்பவற்றை மின்சார சக்தியின் உதவியாற் கேட்டின்புறலாம். பலர் பேசும் வார்த்தைகளைக் கேட்கலாம். பலர் பாடும் பாடல் களைக் கேட்கலாம்.

கடல்களிற் செல்லும் மரக்கலங்களிலும் கம்பியில்லாத் தந்தியைத் தெரிந்துகொள்வதற் கேற்ற சாதனங்கள் அமைக்கப்பெற் றிருக்கும். அவைகளின் உதவியைக் கொண்டு கப்பலைச் செலுத்தும் மாலுமிகள் மற்ற விடங்களிற் செல்லும் கலங்களோடு உரையாடுகின்றனர். அவர் தம் சமாசாரங்களைத் தெரிந்து கொள்கின்றனர். இருப்புப் பாதையிற் செல்லும் நீராவி யந்திர வண்டிகளையும் இதன் உதவியைக் கொண்டே இயக்குகின்றார்கள். இதனால் வண்டிகள் அதிவிரைவாகச் செல்வதன்றி குறைந்த செலவிலும் ஓடுகின்றது. நீர் இறைக்கும் இயந்திரம் அரிசியுடைக்கும் இயந்திரம் முதலியவைகளுக்கும் இச்சக்தியை உபயோகிக்கின்றனர். இன்னும் பலவிதமான இயந்திரங்களையும் இயக்குகின்றார்கள்.

## 10. பருவங்கள்

நமது நாட்டில் காலத்தை ஆறு பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன: கார், கூதிர், முன்பனி, பின் பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். ஒவ்வொரு பருவமும் இரண்டிரண்டு மாதங்களையுடையது. ஆவணியும் புரட்டாசியும் கார்காலமாகும். ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்ப் பருவமாகும். மார்கழியுந் தையும் முன்பனிக் காலமாகும். மாசியும் பங்குனியும் பின்பனிக் காலமாகும். சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலமாகும். ஆனியும் ஆடியும் முதுவேனிற் காலமாகும். ஒவ்வொரு பருவமும் தனக்குரிய சிறப்புக்களுடன் திகழ்ந்து

விளங்குகின்றது. இந்தப் பருவங்களை இயற்கைத் தேவியின் இனிய குணங்களெனச் சொல்லலாம்.

மேனாட்டார்களாகிய ஆங்கிலர் தமது நாட்டில் பருவங்களை நான்காக வகுத்திருக்கின்றனர். அவை, வசந்தம், வேனில், இலையுதிர்காலம், கார் என்பவைகளாகும்.

கார்காலம் : இக்காலத்தில் ஆகாயமெல்லாம் கரிய மேகங்களால் மூடப்பட்டிருக்கும். மின்னலும் இடியுமாகப் பெருமழை பெய்யும். இக்காலத்தில் மழை அதிகமாகப் பெய்யும். மக்களடைதற்குரிய அறம் பொருள் இன்பங்களை அடைவதற்குக் காரணமாயுள்ளது இந்தமழையேயாகும். மழையின்றி மாநிலத்தார்க்கில்லை யென்பது மறைமொழியன்றோ! இக்காலங்களில் யாறுகளும் குளங்களும் நீர் நிறைந்து, அவை தம் கரைகளோடு மோதுதலை நோக்க மனதிற்கு மகிழ்ச்சியை விளைவிக்கும். இந்த மழையினால் மரஞ் செடி கொடிகளுக்குச் சிறிது அழிவு நேரும். ஆயினும் பின்னர் அவை பன்மடங்கு செழித்து வளரும். இந்த மழைக்காலம் செல்வர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். ஆனால் ஏழைகளுக்குத் துன்பத்தை விளைவிக்கும். ஏனெனில் ஏழை மக்கள் பாடுபட்டு வயிறு வளர்ப்பவர்கள். அவர்கள் இக் காலத்தில் வெளியேறிப் பாடுபட முடியாமற் போகும். சில சமயங்களில் இம் மழை விருத்திக்குக் காரணமா யிருப்பதன்றி அழிவிற்குங் காரணமாயிருக்கும். பெருமழையினால் வெள்ளம் பெருகி கிராமங்களையும் நகரங்களையும் அழித்துவிடும். சில சமயங்களில் மிகுந்த பொருட் சேதத்தையும், ஆட்சேதத்தையும் விளைவிக்கும். இக் காலத்

தில் வாடைக் காற்று வீசும். வடக்கிலிருந்து வீசும் காற்றுக்கு வாடை என்று பெயர்.

கூதிர்காலம் : இது மழைக்காலத்துக்குப் பிந்திய காலம். கார்காலத்திற் செந்நிறமாகிய யாற்றுநீர் இப் பருவத்தில் தெளிவடைந்து இனிமை யடையும். ஆகாயம் தெளிவாய் மேகமில்லாது நீலமாயிருக்கும். இக்காலத்து நிலா மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சிதரும். இக்காலம் மனிதர்க்கும் பறவைகளுக்கும் துன்பமா யிருக்கும். பாரிஜாதம் முதலிய பூக்கள் மலருங்காலம் இதுவே. இக்காலத்து வீசும் காற்றுக்குக் கூதைக் காற்று என்று பெயர்.

முன்பனிக்காலம் : இக்காலம் கூதிர்காலத்துக்குப் பின் வருங் காலம். இக்காலத்தில் மழையில்லை. குளிர் ஆரம்பித்துவிடும். மேகங்கள் மழையைப் பொழிந்து விட்டபடியால், வெப்பம் தரும். பகல் குறைந்து குளிர்தரக்கூடிய இரவு மிகுதியாகும். அதனால் நீராவி கள் மேலே சிறிதுதூரஞ் சென்றவுடன் குளிர்ந்து போய் பனியாகப் பெய்துவிடும். இதனால் நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்று குளிர்ந்திருக்கிறது.

பின்பனிக்காலம் : முன்பனிக் காலத்திற்குப் பிந்தியகாலம் பின்பனிக்காலமாகும். இக்காலத்தில், விடியற்காலத்தில் குளிர் மிகும். இக்காலங்களில் இயற்கையரசி மகிழ்சிறந்து விளங்குவாள். மாமரங் கள் தளிர்த்து மனத்திற்கு மகிழ்ச்சி யளிக்கும். கொடுமையிராது. தாமரை முதலிய மலர்கள் மலருங் கால மிதுவே. இக்காலத் தொடக்கத்தில் பெரும் பாலும் நெற்களங்களில் போரடிப்பார்கள்.

இளவேனிற்காலம்: இப்பருவமே மேலான பருவம். இக்காலத்திற்றான் தென்றற்காற்று மெல்லெனத் தவழும். இது செழிப்பான காலமுமாகும்; வீட்டுக்கு வேண்டிய பொருட்கள் சேர்த்துவைக்கும் காலமுமாகும். இக்காலத்தில் அதிகமான குளிரும் இல்லை; உஷ்ணமும் இல்லை. இக்காலம் முடிவதற்குள் நாளுக்கு நாள் வெப்பம் மிகுந்து உஷ்ணம் அதிகமாகும். இக் கொடிய வெப்பத்தின் மிகுதியால் பாடசாலைகளும் நியாயத்தலங்களும் மூடப்படுகின்றன.

முதுவேனிற்காலம்: இக்காலத்தில் வெயிலின் கொடுமை யதிகம். ஆதலால், ஏரி, குளம், கடல் முதலியவைகளிலுள்ள நீர், ஆவியாகமாறி மேலே கிளம்புகிறது. இது காற்றினுல் அலைப்புண்டு மரங்களடர்ந்த தேசங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் மழையாகப் பொழிகிறது. இக்காலத்தில் பழங்களெல்லாம் வெயிலினது வெப்பத்தால் முதிர்கின்றன. இச்சூரிய வெப்பத்தினுல் மலர்களுக்கு நிறம் உண்டாகின்றன. இயற்கைப் பொருட்களின் வளர்ச்சிக்கு மழை வேண்டுவதுபோலவே வெயிலும் வேண்டியதாகும். வெயிலில்லாமல் நிழலில் செடி கொடிகள் வளரா. சிலர்க்கு மழைக் காலத்தைவிட வேனிற்காலமே உடலுக்கு நலம் பயக்கின்றது.

தேசங்களில் சீதோஷ்ணநிலையே மாந்தர்களின் மனப்பான்மையை யறிவிக்கும். இந்நிலைக்குத் தக்கபடி மக்களது வழக்கங்கள் மாறுபடும்.

## 11. குருபக்தி

குருபக்தி என்பது ஒருவன் தனக்குக் கல்வி கற்பித்த குருவினிடத்தில் வைக்கின்ற அன்பாகும். அன்பு என்பது நமக்குப் பிரியமான ஒருவரிடத்தில் காட்டும் நேசமாகும். அன்பு, பிரியம், நேசம், நட்பு என்பன ஒருபொருட்சொற்கள். இந்த அன்பு சிறு பிள்ளைகளிடத்தில் காட்டப்படும்பொழுது வாச்சல்யம் எனப்படும். தன்னேடொத்தவர்களிடத்தில் காட்டும் அன்புக்கு நட்பு என்றுபெயர். தம்மிலும் கீழ்ப்பட்ட பிராணிகளிடத்தில் காட்டும் அன்புக்கு ஜீவகாருண்யம் என்று பெயர். நமது தேசத்தினிடத்தில் வைக்கும் அன்புக்கு தேசாபிமானம் என்று பெயர். அந்த அன்பு பெற்றோர், பெரியார், அரசர், குரு முதலியவர்களிடத்தில் கொள்ளும்போது பக்தி எனப்படும்.

நாம் நமது ஆசிரியரிடத்தில் அன்பாயிருக்க வேண்டும். அவர் நமக்கு அன்புடன் வேண்டிய கல்விகளைக் கற்பிக்கின்றார். நமக்குக் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியருக்குக் குரு என்று பெயர். நம்மிடத்திலுள்ள அஞ்ஞானத்தைப் போக்கி ஞானமாகிய செல்வத்தை நமக்கு அளிப்பவராதலால் அவர் குருவெனப்பட்டார். ஆதலால் நாம் அவரிடத்தில் அன்புடையவர்களாயிருக்கவேண்டும். நாம் நமது குருவினிடத்தில் எவ்வளவு அன்பு கொள்ளுகின்றோமோ, அவ்வளவுபிரியம் அவரால் கற்பிக்கப்படும் கல்வியிடத்திலும் செலுத்தப்படும். ஆகவே கல்வியினிடத்தில் நமக்கு அவாவுண்டாகும். நாம் கல்வி கற்கவும் கற்றபடி ஒழுகவும், நல்ல உத்தமர்களாய் விளங்கவும், நமக்கு உதவிசெய்

வது நமது குருபக்தியேயாகும். இதற்கு உதாரண மாக இங்கு ஏகலைவனது வரலாற்றை அறிவது அவ சியமாகும் :

ஒரு காட்டில் ஏகலைவன் என்ற வேடுவச்சிறுவன் ஒருவ னிருந்தான். அவன் தனது குலத்தொழிலாகிய விற்றொழிலில் தேர்ச்சியடைய விரும்பினன். அப் போது பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் வில் லாசிரியராக விளங்கியவர் துரோணர். அவ் வேடுவன் ஒருநாள் அவரை உணர்ந்து அவரிடத்தில் சென்று முடிபட வணங்கி, தனக்கு வில்விதைை கற்றுக் கொடுக்கும்படி வேண்டி நின்றான். அதைக் கேட்ட துரோணர் புன்னகைசெய்து "ஏகலைவா! உனக்கு விற் றொழில் கற்பிக்க எனக்குப் போதிய காலமில்லை" எனவும், ஏகலைவன் அவரை வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

மனந்தளர்ந்து தனதிருப்பிடஞ்சென்ற வேடன் ஆங்கு துரோணரிடத்தில் கொண்டுள்ள அன்பின் பெருக்கால் அவரைப்போன்றதொரு உருவம் செய் வித்து அமைத்து, அதனை நாடோறும் அன்புடன் வணங்கி அதன் முன்னிலையிலிருந்து வில்வித்தை கற்றுவந்தான். அவன் கொண்டுள்ள பக்தியின் காரணமாக பலவிதமான தொழில்களையும் பிறர் அறி விக்காமலே அறிந்துகொண்டான்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் அர்ச்சுனன் வளர் த்துவந்த நாய் அவ்வனத்துட் புகுந்து, அவ்வேடனது சிலையில் அசுத்தஞ்செய்தது. அதைக்கண்ட ஏகலைவன் கடுஞ்சினங்கொண்டு அந்நாயின்மீது அம்பொன்றை



துரோணரும் ஏகலைவனும்

யேவி அந்நாயின் உடலின் பல்விடங்களிலும் தைக்கும் படிசெய்தான். அந்நாய், வேதனை பொறுக்கமுடியாது கத்திக்கொண்டே அர்ச்சுனனிடத்தில் வந்து வீழ்ந்தது. அதைக்கண்ட குந்தி மைந்தன் மிகுதியும் வருந்தினன். அந்நாயின்மீ துண்டாயிருக்கும் பல துளைகளையும் கண்டு, அவ்விற்றொழிலைவியந்து, அதனை எய்தவனைக் காணவிழைந்து புறப்பட, அந்நாயும் வழிகாட்டிச் சென்றது. அர்ச்சுனனும் ஏகலைவனிருக்கை யடைந் தான். அவ் வரசிளங் குமாரனைக் கண்ட வேடனும், எழுந்து வணங்கி நின்று நடந்ததைச் சொல்லித் தன்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டான். அர்ச் சுனனும் அவனை மன்னித்து அவனது திறமையை வியந்துகொண்டே தன்னிடம் சென்றான். அர்ச்சுனன் அவ்வேடனது விற்றொழிலை வியந்தனனாயினும், அவ் வரிய தொழிலை வேடன் தெரிந்திருப்பதற்கு மனம் மிகுதியும் வருந்தினன். அதனைக்கண்ட துரோணர் அவனது சோர்வுக்குக் காரணத்தை வினவ, அவனும், அவ்வரிய தொழிலைப்பற்றி யுரைத்து, "சுவாமி! அவ் வித்தை தம்மையும் என்னையுமன்றி மற்றொருவருமறி யார் என்றுரைத்தீர்களே! ஏகலைவன் அதனை யுணர்ந் திருக்கின்றானே!" என்று நடந்த வரலாற்றை யுரைத்து முகங்கோணி நின்றான். துரோணர், "அர்ச் சுன! முன்னொரு நாள் அவ்வேடன் என்னிடம் வந்து தனக்கு வில் வித்தை கற்றுக்கொடுக்கும்படி வேண்டி னன். நான் அதற்கு இணங்கவில்லை. அவன் சென்று விட்டான். இப்பொழுது நீ கூறுவது விந்தையாக விருக்கிறது. வா சென்று பார்ப்போம்" என்று கூறி அவனையும் அழைத்துக்கொண்டு வேட்டுவச் சிறுவ னிருக்கும் இடம் சென்றார்.

ஏகலைவன் இவ்விருவரையும் கண்டு மனமகிழ்ந்து அன்புடன் வரவேற்று இருவரையும் அவர் தம் தகுதி நோக்கி உபசரித்தான். அர்ச்சுனன் அவ்வேடனது பக்தியைக் கண்டு அதிசயித்தான். முனிவன் அவ் வேடன் விற்றொழில் பயிற்சியைப்பற்றி வினவ, அவன் "ஐயனே! தாங்கள் வித்தை கற்பிக்க மறுத்து விட்டீர்கள். அதன்பின் தங்களைப்போலச் சிலை யொன்றுண்டாக்கிப் பூசித்துவருகின்றேன். தங்களது பெருங் கருணையினால் யான் இத்திறமை யடைந்தேன். தொழில்கள்யாவும் எனக்குக் கைகூடின. தேவரீர் எளியேனைப் பொருட்படுத்தி, இவ்விடத்திற்கு எழுந் தருளியது என் பாக்கியமேயாகும். அடியேன் செய் யக்கூடியதான பணி ஏதாவதிருந்து தெரிவிப்பின், செய்யச் சித்தமா யிருக்கிறேன்" என்று சொல்லிப் பணிந்து நின்றான்.

அப்பொழுது துரோணர் "ஏகலைவா! நீ எனதரு ளால் இத்தொழில்களைக் கற்றுக்கொண்டனையல்லவா? ஆதலால் எனக்கு நீ கொடுக்கவேண்டிய தட்சணையைக் கொடுக்கவேண்டாமா? அதனைப் பெறவே வந்தேன்" என்றார். உடனே வேடன், "சுவாமி! என்னிடம் இருப்பவைகளில் எதைக் கேட்பினும் கொடுக்கத் தயாராக விருக்கின்றேன்" என்றான்.

துரோணர் அவனைப் பார்த்து "உனது வலக்கைப் பெருவிரலைக் கொடு" என்றுரைத்தலும், ஏகலைவன் சிறிதும் யோசிக்காமல் தன் பெருவிரலைத் துண்டித் துத் தந்தான்.

துரோணர் அவனது சிறந்த பக்தியைக் கண்டு வியந்து அவனை வாழ்த்திச் சென்றார்.

பிள்ளைகளே, ஏகலைவனது குருபக்தியைப் பார்த்தீர்களா! நீங்களும் அவனைப்போல் குருபக்தியிற் சிறந்து உத்தமர்களாக விளங்குவீர்களாக.

## 12. இமயமலை

நாம் வசிக்கும் இந்தப் பூமியானது எங்கும் ஒரே விதமாக இருப்பதில்லை. சில இடங்களில் மேடாக விருக்கும். இவைகள் மேட்டுப் பாங்கான நிலம் என்று சொல்லப்படும். சில இடங்களில் பள்ளமாயிருக்கும். அவைகளுக்குப் பள்ளத்தாக்குகள் என்று பெயர். சில இடங்களில் நிலம் உயரமாக விருக்கும். அதற்குக் குன்று என்று பெயர். இந்தக் குன்றுகள் சில இடங்களில் மண்ணாகவும் இருக்கும். சிலவிடங்களில் கல்லாகவு மிருக்கும். சிலவிடங்களில் மண்ணும் கல்லும் கலந்துமிருக்கும்.

சில இடங்களில் இந்தக் குன்றைப் பார்க்கிலும் அதிக உயரமான நிலங்கள் உண்டு. அவைகளுக்கு மலைகள் என்று பெயர். இந்த மலைகள் சிலவிடங்களில் வரிசையாகத் தொடர்ந்திருக்கும்; இப்பாகத்திற்கு மலைத் தொடர்ச்சி யென்று பெயர். உதாரணமாக நமது தேசத்தில் கிழக்கில் ஒரு மலைத் தொடருண்டு. அதற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலையென்று பெயர். இதுபோலவே மேற்றிசையினும் ஒரு மலைத் தொடர்ச்சியுண்டு. அதற்கு மேற்குத் தொடர்ச்சி மலை யென்று பெயர். இவைகளைப் போல எத்தனையோ பல மலைத் தொடர்ச்சிகள் நமது நாட்டிலிருக்கின்றன. அவைகளில் இமயமலையும் ஒன்று.



இமயமலை

இந்த இமய மலையானது உலகத்திலுள்ள எல்லா மலைகளையும் விட மிகவும் பெரியது. இம் மலை நமது இந்தியாவின் வடக்கே எல்லையாக விருந்து அழகு செய்கின்றது. இது நமது நாட்டின் மேல் கோடிமுதல் கீழ் கோடிவரையிலும் ஒரே தொடர்ச்சியாயிருக்கின்றது. இம்மலையின் மேலிடமெல்லாம் பனி மூடியிருக்கும். அதனால் இதற்குப் பனி மலை யென்று பெயர். வடமொழியில் இம்மலைக்கு இமாசலம் என்று பெயர் சொல்வர். இமம் என்றால் பனி, அசலம் என்றால் மலை. ஆகவே இமாசலம் என்ற சொல்லுக்குப் பனி மலை என்பது பொருளாகும்.

இம்மலை சராசரி இருபதினாயிரம் அடி உயரமுள்ளது. இது பூமியில் ஆயிரம் மைல் தூரம் பரவியிருக்கிறது. ஆனால் இம்மலை அடிமுதற்கொண்டு முடிவரையில் ஒரேயளவாக உயர்ந்திருக்கவில்லை. அடிவாரமுதற்கொண்டு சிகரம் வரையிலும் படிப்படியாக உயர்ந்து கொண்டே போகிறது. இதன் உச்சியில் துண்டு துண்டாய்ப் பல சிகரங்கள் உண்டு. இவைகள் எண்ணாயிரம் அடிவரையில் உயர்ந்திருக்கும்.

இப்படியாக வானமளாவிய இம்மலையானது ஓரிடத்தில் இருப்பதுபோல எங்கும் இருப்பதில்லை. இதன் அடிப்பாகத்திற்கு அடிவார மென்று பெயர். இந்த அடிவாரம் இருபது மைல் அகல முள்ளது. மழைக் காலங்களில் இம்மலைமீது பெய்கிற மழை நீர் எல்லாம் ஓடிவந்து இவ்விடத்தில் தங்கும். ஆதலால் இவ்வடிவாரம் சதுப்பு நிலமா யிருக்கும். வெயிற் காலம் வந்ததும் சூரிய வெப்பத்தினால் அவ்விடங்களிலெல்லாம் விநோதமாகச் செடி கொடிகள் முளைத்துப்

பயங்கரமாய் அடர்ந்திருக்கும். அவ் வடிவாரத்தில் யானை, புலி முதலிய காட்டு விலங்குகள் வசிக்கும். அவைகளெல்லாம் சிறிதும் பயமின்றிச் சஞ்சரிக்கும்.

இம்மலைத் தொடரின் காட்சிகள் காண்பவருக்கு மிகுதியும் வியப்பைத்தரும். இம்மலையிலிருந்து உற்பத்தியாகும் கங்கை, யமுனை முதலிய யாறுகளின் இருகரைகளிலும் பலவகையான மரங்கள் ஓங்கிவளர்ந்திருக்கும். கணவாய்களில் பலவித புற்பூண்டுகள் முளைத்து வெகு விநோதமாயிருக்கும். சில சிறு குன்றுகள் பார்ப்பதற்கு அழகாயிருக்கும். அவைகளின்மீது ஓங்கி யுயர்ந்த பல மலைத் தொடர்களுண்டு. அவைகளின்மீது எப்பொழுதும் பனி மூடிக்கொண்டிருக்கும். அம்மலைமேலிருந்து அங்குள்ள கணவாய்களையும், ஆழமான நீரோடைகளையும், கானாறுகளையும் பார்க்கப் பயங்கரமா யிருக்கும்.

இம்மலையை அடிவாரத்திலிருந்து முடிவரையிலும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். அடியிலிருந்து ஐயாயிரம் அடி வரையிலும் ஒரு தன்மையாயிருக்கும். இப்பாகத்திலிருந்து மேலே செல்லச் செல்ல கீழ்வரையிலுள்ள தன்மை சிறிது வேறுபடும். இங்குக் கதிரவனது வெப்பம் தாக்கும். மழையும் ஒரே அளவாகப் பெய்யும். செடி கொடிகளும் ஒரே தன்மையாக வளரும். இப்பாகத்தில் பனியைக் காண்பதரிது.

ஐயாயிரம் அடியிலிருந்து ஒன்பதினாயிரம் அடி வரையிலும் உள்ளது இரண்டாம் பாகமாகும். இப்பாகம் வேறு வகையாக விருக்கும். இங்கு மழைக் காலங்களில் பனி பெய்யும். பனி நன்றாய் உரைந்து

வெண்மையான பாறைகளைப்போல் தோன்றும். வெயிற் காலங்களில் இப்பனிகள் சிறிது சிறிதாய்க் கரைந்து அருவியாய் ஓடும். இவ்விடத்தில் மரங்கள் எல்லாம் மிகச் செழித்து வானமளாவி ஓங்கி வளரும்.

இதற்கு மேலுள்ள பாகத்தில் எப்பொழுதும் பனி மூடிக்கொண்டே யிருக்கும். ஆனி, ஆடி மாதங் களில் அப்பனி சிறிது சிறிதாய் உருகியோடும். ஆத லால் இம்மலையில் உற்பத்தியாகும் ஆறுகளில் எக்கால மும் நீர் நிறைந்தே ஓடிக்கொண்டிருக்கும். இம்மலை யின் அடிவாரங்களில் கரடி, புலி, யானை முதலிய விலங் குகள் மிகுதியாக உண்டு. மேற்பாகங்களில் வசிப்பன காட்டுப்பூனை, கரடி, பன்றி முதலியனவே. சிறிது தூரத்துக்குமேல் பலவகையான பறவைகள் சஞ்சரிக் கும். பருந்து கருடன் முதலிய பறவைகள் எங்கும் உண்டு.

இம்மலையிலும் மக்கள் வசிக்கிறார்கள். அவர் களுக்கு மலைவாசிகள் என்று பெயர். அவர்கள் பெருப்பாலும் பசுக்களையும், காட்டெருமைகளையும், ஆடுகளையும் வளர்க்கிறார்கள். இந்த ஆட்டுரோமத் தால் ஒருவகைக் கம்பளம் நெய்யப்படும்.

இம்மலையின் அடிப்புறத்தில் ஒரு தேச மிருக் கிறது. அதற்கு நேபாளம் என்று பெயர். அங்கே பல கிராமங்களுண்டு. மிகுதியும் சிறந்த நன்செய் நிலங்கள் பலவுண்டு. இம்மலையின் மேற் கோடியில் காஸ்மீர தேசமிருக்கிறது. அதனைப் பூலோக நந்த வனம் என்றழைப்பார். இம்மலையில்தான் அரித் துவார மென்ற அழகிய தலமிருக்கிறது. இம்மலையில்

கைலாச மிருக்கிறது. வேனிற் காலத்தில் வசிப்பதற் கேற்ற சிம்லா என்ெறாரு நகரமிருக்கிறது. இது மிகுதியும் உடலுக்கு நன்மை பயக்கும். ஆதலால் நமது இராஜப் பிரதிநிதியாகிய கவர்னர் ஜனரல் தமது ஆலோசனை சபையோடும், சட்டநிரூபண சபையோடும் அவ்வேனிற் காலத்தில் அங்குச் சென்று வசிப்பார்.

## 13. அரிச்சந்திரன்

(முற்பகுதி)

நீர் நில வளத்தாற் சிறந்தோங்கிய கோசல நாட்டை, அயோத்தி என்னும் அணிநகரத்தைத் தலை நகரமாகக் கொண்டு அரிச்சந்திரன் என்ற மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். இவன் இந்நாட்டிலிருந்த சக்கரவர்த்திகளில் ஒருவன். உலக முழுவதும் ஒரு குடை நிழலிலாண்ட உத்தமன். "மன்னன் உயிர்த்தே மலர் தலை யுலகம்" என்பது போல மக்களுக்கு உயிர் போல்வான். குடிகளுக்கு நேரும் ஐவகைத் துன்பந் துடைத்து இன்பமியற்றி வந்தான். ஆதலின் அவன் கீழ்வாழும் குடிகளனைவரும் அவனையே தெய்வ மெனக் கருதி வழிபட்டு வந்தனர். அனைவோர்க்குந் தெய்வம் இலைமுகப் பைம்பூண் இறைவனன்றோ!

அவனது இல்லறத்துணைவியாயமைந்த பெண் ணாள் சந்திரமதி என்பாள். அவள்,

"மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந்து உவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள், கொழுநன் குறிப்பறிந்து ஒழுகும் நீராள்
தேசுறு வாய்மை உள்ளாள் சினந்திடல் என்றும் இல்லாள்
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் பெற்றதே கொண்டு உவப்பாள்"

கணவனது அகக் குறிப்பை முகக் குறியாற் கண்டு உணர்ந்து ஒழுகும் உத்தம குணமுடையாள். இவர்களுக்குத் தேவதாசன் என்னும் பெயருடைய மைந்தன் ஒருவனிருந்தான். மன்னனும் மனைவியுடனும் மைந்தனுடனும் மகிழ்ந்திருந்து செங்கோல் செலுத்தி வருவானாயினன்.

ஒரு நாள் விண்ணவர் தலைவனது பேரவைக்குப் பல முனிவர்கள் வந்து கூடினர். அமரேசன் அவர்களுக்கு வழிபாடியற்றி, இருக்கை யளித்து, அவர்களை நோக்கி, "முனிவர் பெருமக்களே! மூவுலகிலும் சிறந்த உத்தமருண்டா?" வென்று வினவினன். அப்பொழுது அவையின்கண் ணிருந்த வசிஷ்டமுனிவர் எழுந்து, "சுராதிப! யானறிந்தவரை அத்தகையன் ஒருவன் உளன். அவனே கோசல நாட்டுக் கோமான்.

"பாருக் கொருவன் பரதார சகோதரன் வெம்
போருக் கொருவன் புகழுக்கும் மறைப் பொருட்கும்
நேருக்கும் வீடாம் மனுநூல் நெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கு மிக்கான் அரிச்சந்திர னாகும்" என்றார்.

இதைக்கேட்ட இந்திரன் மிகவும் வியந்தான். அச்சமயத்தில் கௌசிகன் எழுந்து, "அரசே! இவ்வசிஷ்டர் கூறுவது முழுவதும் பொய். அம்மன்னவன்

"வெய்யன் பதகன் பரதார விருப்பன் வீணன்
பொய்யன் நிறையும் பொறையும் சிறுதுமில் புல்லன்
கையன் கபடன் கயவன்தனை நல்லவன் என்றிவ்
வையன் திருமுன் உரைத்தான் இதென்னாக"வென்றான்.

இவ்வாறு கோசிகன் கூறியதும், வசிஷ்டருக்கு மனம் பதைத்தது. விரைந்தெழுந்து "அடே! கௌசிகா!

குற்றமற்ற சிறந்த உத்தமனை இவ்வாறுரைக்கலாமா? அவனைப் பழித்துரைத்த உனது நாவெந்திலது; உன்னிடத்தில் தெய்வமும் பொய்த்ததுபோலும்'' என்றார். பின்னர் கோசிகன் எழுந்து வசிஷ்டரைப் பழித்தான். இந்நிந்தை மொழிகளைக்கேட்ட அமரேசன் இருவரையும் கையமர்த்தி இருக்கச்செய்து, "உலகத்தாரை நன்னெறியி லுய்க்கவல்ல நீங்களே இவ்வாறு சண்டையிடுவது தகுதியாகாது. இது வேலியே பயிரையழிப்பது போலாகும். நீங்கள் சொன்னதில் ஒருவர் கூற்று பொய்யாகும். அவரே தோற்றவராகக் கருதப்படுவார்'' என வசிஷ்டன் எழுந்து "எனது சொல் பொய்யாயின் என் தவத்தையிழந்து தலையோட்டில் பலியேற்றுண்பேன்'' என்றார். உடனே கோசிகன் எழுந்து "என் கூற்று பொய்யாயின், என் தவத்திற் பாதிதருவேன்'' என்றான். பின்னர் கோசிகன் தனது கூற்றை மெய்ப்பிக்க எண்ணி மண்ணுலகைச் சார்ந்தான்.

இவ்வாறிருக்கையில் வனவிலங்குகள் கோசல நாட்டிற் புகுந்து பயிர்களை யழித்துக் குடிகளையும் துன்புறுத்தின. இதனைக்கண்ட நாட்டினர் தமதரசனிடம்சென்று முறையிடலும், அரிச்சந்திரன் வேடர் குழாம் புடைசூழக் கானடைந்து அவ்விலங்குகளை வேட்டையாடிக் கொன்றான். அவ்விலங்குகளில் ஒரு பன்றியானது வேடர் வலையிற் சிக்காது விரைந்து ஓட, அரசனும் அதைப் பினதொடர்ந்து சென்று கணையெய்து கொன்றான். நெடுந்தூரம் சென்ற களைப்பால் ஆங்குள்ள ஒரு தடத்தில் தங்கினன். அப்பொழுது கோசிகன் இரண்டு கடைக்குலப் பெண்களைப் படைத்துஅரிச்சந்திரனிடம் செல்லவிடுத்தான். பெண்

கள் இருவரும் அரசனையண்மி, தமது இனிய குரலால் பாடியும், ஆடியும் அவனது செவிக்கும் கண்ணுக்கும் இன்ப மூட்டினர். அதனைக் கண்ட அரசன் மன மகிழ்ந்து அவர்களை நோக்கி, "பெண்களே! உங்களுக்கு வேண்டியவற்றைக் கேளுங்கள். கூடியதை யளிக்கின்றேன்" என்றான். எனலும் பெண்கள் தங்களை மணந்துகொள்ளுமாறு வேண்டிநின்றார்கள்.

அதைக்கேட்டதும் அரசன் வெகுண்டு "பெண்களே! நீங்கள் இதைத் தவிர்த்துக் கொடுக்கக்கூடியதைக் கேளுங்கள். உங்களை மணம் செய்துகொள்வது தக்கதன்று" என்றான். அதைக் கேட்ட அப்பெண்கள் இருவரும் திரும்பிச் சென்று நடந்தவற்றை முனிவருக் குணர்த்தினர்.

கோசிகன் மிகுதியும் சினங்கொண்டு அரிச்சந்திரனை யடைந்தான். அரசன் எதிர்சென்று முனிவனை அழைத்துவந்து இருக்கையளித்துவணங்கி நின்றதும், முனிவன் அரசனைப் பார்த்து "வனவிலங்குகளை வறிதே வதைத்தனை; நான் ஏவிய பெண்களை அறவே வெறுத்தனை. இது நீதியோ?" என்று கேட்டான். அரசன் முனிவனை நோக்கி, "கொடியவனவிலங்குகளை வதைத்தல் அரசருக் குரிய தொழில்களில் ஒன்றல்லவோ? அப் பெண்கள் தமது பெண்களென அறியேன். மேலும் அவர்கள் கடைக்குலப் பெண்களாதலால் அவர்களை வெறுத்தேன்.

"கண்ணை வேண்டினும் ஈகுவன் காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுடன் ஈகுவன்
பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன் யானென்று பேசினான்"

உடனே கௌசிகன் "நீ வாய்மை தவருதவன் என்பதை யானுணர்வேன். நீ கூறியபடி உனது அரசு முழுவதையும் எனக்களிப்பாயாக" எனலும், அரிச்சந்திரன் அத்தடத்து நீரைக்கொண்டு அக்கணமே தனது அரசு முழுவதையும் முனிவனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான். அம்முனிவனையும் நாட்டுக்கழைத்து வந்து யாவற்றையும் அம்முனிவன் வசமாக்கினன். அனைத்தையும் கைப்பற்றிய முனிவனும் அரசனை நாட்டைவிட்டு அப்புறப்படுத்தினன். அரசன் தன் மனைவியுடனும் மைந்தனுடனும் நாட்டை விட்டகன்ருன். அதைக்கண்ட முனிவன் மீட்டும் அரசனை அண்மி, தனக்கு அவன் முன்னர் யாகத்தின்பொருட்டுத் தந்த பொருளைத் தருமாறு கேட்டான். அரசன் அதைச் சின்னளில் தருவதாகக் கூறினன். அந்தணனும் அதற்கிசைந்து நட்சத்திரேயன் என்பவனை ஏவி அப்பொருளைப் பெற்றுவருமாறு பணித்தான். அவனும் அரசனைப் பின்தொடர்ந்தான்.

நாளடைவில் அவன் அரசனுக்குப் பல இன்னல்கள் விளைவித்தான். பலவகையிலும் துன்பத்திலாழ்த்தினன். துன்பத்திலாழ்ந்திருக்கும் சமயத்தில் கோசிகனும் மன்னனையடுத்துத் தனக்குக் கொடுத்த நாட்டைக் கொடுக்கவில்லையென்று பொய்யுரை புகலும்படி வற்புறுத்தினன். அரசன் அதற்கு உடன்பட்டானில்லை.

இறுதியில் நால்வரும் காசிமா நகரையடைந்தனர். ஆண்டு அரையன் தன் மனைவியையும் மைந்தனையும் காலகண்டன் என்னும் பார்ப்பனனுக்கு அடிமையாக விற்றுக் கௌசிகன்கடனை யிறுத்தான். பின் நட்சத்தி

ரேயன், தான் வழி நடந்தமைக்கு எதுவும் இல்லையே யென்று வருந்தக்கண்ட மன்னன், தானும் ஒரு புலைய னுக்கடிமையாகி அப்பொருள்களைக்கொண்டு நட்சத்தி ரேயனைத் திருப்தி செய்து அனுப்பினன்.

காலகண்டனுக்கு ஆட்பட்ட சந்திரமதியும் மைந் தனும் அடைந்த இன்னல்களுக்களவேயில்லை. அவன் அவர்களை மிகவும் துன்புறுத்தினன். பல சொல்லி யென்ன? தாயும் தனயனும் பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோலாகினர்.

வீரபாகுவுக்கு அடிமைப்பட்ட மன்னவன் அவ னுடன் சென்று ஈமங்காக்குந் தொழிலி லமர்ந்தான். அங்கு வரும் பிணங்களைச் சுடுவது அவன் வேலை. அதன் பொருட்டுக் கொடுக்கப்படும் வாய்க்கரிசியை யும் முழத் துண்டையும், காற்பணத்தையும் பெற்று அவன் வாழ்ந்துவந்தான். சக்கரவர்த்தியாகிய அவ னது நிலை யிவ்வாறாயின் ஏனைய மக்களது செல்வ நிலையை யென்னென்பது? நிறைசெல்வம் நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் என்றும், செல்வம் சகடக் காற்போல வரும் என்றும் முன்னோர் மொழிந்த மொழிகள் பொன்மொழியன்றோ?

## 14. தேனீ

நமது வீடுகளில் ஈக்கள் திரிகின்றனவல்லவா? அந்த ஈக்களில் தேனீயும் ஒன்று. இது தேனைச் சேர்த்துவைக்கின்ற காரணம்பற்றித் தேனீ யென்று அழைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட தேனீயைப்

பற்றி நாம் நினைக்கும்போது நமது மனம் மகிழ்கின்றதல்லவா? இதற்குக் காரணம் என்ன? நமது வீடுகளில் உலாவித் திரிகின்ற ஈக்கள் அசுத்தமான பொருட்களில் உட்கார்ந்து மீட்டும் சுத்தமான வற்றிலும் உட்கார்கின்றன. இதனால் சுத்தமான பொருளும் அசுத்தமாகிவிடுகின்றது. இதன் காரணமாக நமக்கு நோயைத்தந்து நமது வாழ்க்கையைக் கெடுத்துவிடுகின்றன. ஆனால் தேனீயோ அப்படியன்று. நாவிற்கினிய தேனைத்தந்து நமது வாழ்க்கையை இனிதாக்குகின்றது. அல்லாமலும் அவைகளின் வாழ்க்கையிலிருந்து நாம் பல நீதிகளையும் கற்றுக் கொள்ளலாம். நம்மையும் சீர்திருத்திக் கொள்ளலாம். இவைகளின் வாழ்க்கை மிகுதியும் வியக்கத்தக்கதே.

தேனீக்கள் பல கூடியே வாழும். அவை தனித்து வசியா. பலவும் ஒன்றுகூடி கூடுகட்டி வசிக்கும். இந்த ஈக்கள் காலத்திற்குத் தக்கவாறு முட்டையிடும். இம்முட்டைகளிலிருந்து ஐந்து தினத்தில் புழுக்கள் வெளியே வரும். அப்பொழுது அவை வெண்ணிறமாய்த் தோன்றும். சில நாட்களில் சிறகு முளைத்து விடும். தேன் பூந்தாது முதலிய உணவுண்டு வளரும். ஏறக்குறைய ஒருமாதத்தில் வெளியே செல்லும். இந்த தேனீக்களில் பலவகையுண்டு. வேலைக்கார ஈக்கள், சோம்பேறி ஈக்கள், இராணி ஈக்கள் எனப் பலவகை ஈக்கள் உண்டு. இவைகளுடைய வாழ்க்கை வெகு அற்புதமானது. இவைகளின் வாழ்க்கை மனிதர்களுடைய வாழ்க்கையை ஒத்திருக்கின்றது.

வேலைக்கார ஈக்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக மலர்களிருக்குமிடம் தேடிச்சென்று, தேன் சேகரிப்-

பதிலேயே கருத்தாயிருக்கும். ஆதலால் இவைகளுக்கு "வேலைக்கார ஈக்கள்" என்று பெயர். இவைகள் சோம்பேறிகளாய்த் திரிகின்ற ஈக்களைத் துரத்தும்.

ஆண் ஈக்கள் எல்லாம் சோம்பேறித்தனமாயிருக்கும். ஆதலால் இந்த ஈக்கள் சோம்பேறி ஈக்கள் என்று சொல்லப்படும். இவை மற்றொன்றையும் எண்ணாது மலர்களிடம் சென்று தேனை யருந்தி தம் வயிற்றைமட்டும் நிரப்பிக்கொள்ளும். பெண் ஈக்கு



இராணி ஈ

இராணி ஈ என்று பெயர். ஒவ்வொரு கூட்டிலும் ஒரே பெண் ஈ வசிக்கும். இது மற்றவைகளைப் பார்க்கிலும் சற்று நீண்டும் பருத்து மிருக்கும். இது இல்லாத கூட்டில் வேறு ஈக்கள் வசிக்கா. இதன் இறகு சிறியதாயிருக்கும். ஆதலால் இது வெளியிற் பறந்து செல்லாது.

பொதுவாக ஈக்களில் சில மலர்தோறுஞ் சென்று செழுந்தேனையும் பூந்தாதையும் கவர்ந்து செல்லும். சில ஈக்கள் கூட்டைப் பழுதுபார்க்கும். சில சுத்தம்

செய்யும். சில தாய்போல் தேனீப் புழுக்களை வளர்க்கும். சில தேனைக் கவர்ந்துகொண்டு போகாத படி கூட்டின் வாசலிலிருந்து காவல் செய்யும்.

இவைகளின் கூடு பார்ப்பதற்கு அற்புதமாயிருக்கும். இவைகள் வசதியான ஓரிடத்தில் கூட்டை அமைக்கும். பெரும்பாலும் ஓங்கிவளர்ந்த மரங்களிலும், மரத்தின் பொந்துகளிலும், உயர்ந்த கட்டிடங்களின் வளைவுகளிலும், மலைப்பிளவுகளிலும் ஈக்கள் தமது கூட்டைக் கட்டும். ஈக்கள் எல்லாம் ஒன்று கூடி மொய்த்துக்கொண் டிருக்கும். அச்சமயம் அவற்றின் உடம்பிலிருந்து ஒருவகை மெழுகு வெளிப்படும். இந்த மெழுகை ஒன்று சேர்த்துத் திரட்டும். பிறகு இந்த மெழுகை உமிழ் நீரால் பக்குவப்படுத்திச் சுவர் எழுப்பும். இவ்வாறு அடைபட்ட இடத்திற்கு அறை என்று பெயர். அதனைச்சேர்த்துப் பல அறைகளைக் கட்டிமுடிக்கும். இதுதான் தேன் கூடு. இந்த அறைகள் ஒவ்வொன்றுக்கும் ஆறு பக்கங்கள் உண்டு. சில அறைகளில் பறக்கமுடியாத சில ஈக்கள் வசிக்கும். கூட்டின் அடியில் ஒரு பெரிய அறை இருக்கும். அதில் இராணி ஈ வசிக்கும். சில அறைகளில் முட்டையிடும். இதன் முட்டைகள் சிறிது நீலங்கலந்த வெண்மை நிறமுடையதா யிருக்கும். முட்டைகளின் புறத்தில் ஒருவகைப் பசையிருக்கும். அதனல் அவை கூட்டின் புறங்களில் ஒட்டிக்கொள்ளும்.

முட்டைகள் மூன்று நாட்களில் பொரித்துப் புழுக்கள் வெளிவரும். இப்புழுக்களைச் செவிலித்தாய் ஈக்கள் வளர்க்கும். இவை தமது உடம்பிலிருந்து

ஒருவகை மெழுகை யுண்டுபண்ணி அதனல் கூடு செய்துகொண்டு, அந்த மெழுகுக் கூடுகளில் மறைந்து உறங்கும். சில நாளில் சிறகு முளைத்து வளர்ந்து தேனீக்களாகும்.

இந்தத் தேனீக்கள் பூக்களிலுள்ள தேனை யுண்டு தமது இரைப்பையில் செலுத்தும் ரசமே தேனக மாறுகின்றது. மழைக் காலங்களில் தேன் அகப் படாது. அதனல் தாம்வருந்தாமலிருக்கும்பொருட்டே கோடை காலத்தில் தேனைச் சேகரித்துத் தம் கூட்டில் நிரப்பி, மெழுகினல் மூடி வைத்துக்கொள்ளு கின்றன. இவ்வாறு சேர்க்கப்படும் தேனில் பலவகை யுண்டு. மலைப் பிளவுகளில் சேர்த்து வைக்கப்படும் தேனுக்கு மலைத்தேன் என்று பெயர். ஓங்கிய மாக் கிளைகளில் கட்டப்படும் கூண்டிலுள்ள தேனுக்குக் கொம்புத்தேன் என்று பெயர்.

மனிதர்களிற் சிலர் தேனை எடுப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டுத் தேன் கூட்டண்டை சென்று ஈக்களைக் கலைத்துவிடுவார்கள். கூட்டைக் கலைக்கவே எல்லா ஈக்களும் வெளியேறி அவர்களைக் கடித்துத் துரத்தும். இதனல் சிலர் அபாயத்துக் குள்ளாவார்கள். இவ்வீக் களின் செயலை அறிந்த சிலர் அவை இருக்கு மிடங் களுக்குச் சென்று அடியில் புகைத்து ஈக்களைத் துரத் துவார்கள். அந்தப் புகையினல் பல ஈக்கள் இறந்து படும். சில உயிர் தப்பி ஓடிவிடும். பின்னர் கூட்டை எடுத்துவந்து தேன் வேருகவும், மெழுகு வேருகவும் பிரித்தெடுப்பார்கள். தேன் உண்பதற்கு இனிமை யானது. இது மருந்தாகவும் உபயோகப்படும். தேன் மெழுகும் பலவகையில் உபயோகப்படும்.

இக்காலத்தில் பல தேசங்களிலும் இப்படிப்பட்ட தேனீக்களைப் போற்றி வளர்த்து வருகின்றார்கள். இப்படித் தேனீக்களை வளர்ப்பதனால் தேன் அதிகமாக உண்டாக்கப்பட்டுப் பற்பல தேசங்களுக்கும் அனுப்பப்படுகிறது. நீலகிரி, கோடைக்கானல் முதலியஇடங்களிலும், வடஇந்தியாவில் இமயமலைப் பக்கங்களிலும் மற்றும் பல விடங்களிலும் தேனீக்களை வளர்த்து வருகின்றார்கள்.

தேனீக்கள் உருவத்தில் சிறியவையா யிருந்தாலும் அவைகளிடத்தில் அரிய குணங்கள் பல வுண்டு. அவைகள் தம் இனத்தோடு கூடி வாழ்வதையும், சுறுசுறுப்புடன் தேனைச் சேகரிப்பதையும் சோம்பலாய் இருக்கும் ஈக்களைத் துரத்தி யடிப்பதையும் உற்று நோக்கினால், நாமும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதும், சுறுசுறுப்புடன் வேலையைச் செய்யவேண்டுமென்பதும், சோம்பேறிகளுடன் சேரக்கூடாதென்பதும் விளங்குமல்லவா? தேனீ தேனைத் தேடி வைத்துக்கொள்வது போலவே நாமும் நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். நாம் தேடும் பொருளையும் அவ்வப்போது அதிகமாகச் செலவு செய்யலாகாது. பிற்காலத்துக்கு உதவியாகச் சேமித்துவைக்க வேண்டும். அப்படிச் செய்தால் இத்தேனீக்களைப்போல் நாமும் சுகமாயிருக்கலாம்.



## 15. அரிச்சந்திரன்

(பிற் பகுதி)

ஒரு நாள் வழக்கம்போல் தேவதாசன் ஏனைய பார்ப்பனச் சிறாருடன் சேர்ந்து தருப்பை முதலியன கொண்டுவருமாறு காடுநோக்கிச் சென்றான். சென்று விறகும் தருப்பையுங் கொண்டு மாலைப் பொழுதில்

வீடுநோக்கி வரும்போது, வழியில் தருப்பைப் புல் லடர்ந்த ஒரு புதரைக் கண்டு, அவை தன்னையாளு டைய பார்ப்பனருக்குப் பயன்படும் என்றுணர்ந்து பறிக்கச் சென்றான். அப்பொழுது அங்கிருந்த நாகம் ஒன்று சீறிக்கடிக்க அவன் ஆவென்றலறிக்கொண்டு கீழே விழுந்து சிறிது போழ்தில் உயிர் நீங்கினான். அதனைக்கண்ட மற்ற சிறுவர்கள் மனம்வருந்தி, வீடு சென்று சந்திரமதிக்கு அதனையெடுத்துரைத்தேகினர்.

மைந்தன் இறந்ததைக் கேட்ட சந்திரமதி, ஆவென்று அலறினாள்; துடித்தாள்; பெற்ற வயிற் றில் அடித்துக்கொண்டாள்; முகத்தில் அறைந்து கொண்டாள். 'மகனே, மகனே' யென்பாள்; 'இனி யாரை நம்பி உயர்வாழ்வது' என்பாள்; 'இனி உலகில் உயிர்வைத்திருப்பது அவமே' யென்பாள். இவ்வாறு அவள் பலவாறாகப் புலம்பித் துயருற்றுக் கீழே வீழ்ந் தாள்; சிறிது மூர்ச்சைதெளிந்து எழுந்தாள்; பின் தனது வேலைகளை முடிக்காவிடில் வேதியன் முனிவான் என்றறிந்து ஆறாத்துயருடன் அன்றைய வேலைகளை விரைந்து செய்யத்தொடங்கினாள்.

சந்திரமதி தனக்குரிய வேலைகளைச் செய்து முடித்துவிட்டுக் காலகண்டனை யணுகி, இறந்த தன் மைந்தனை எடுத்து அடக்கம் செய்துவர அனுமதி கேட்டாள். அதைக்கேட்ட பார்ப்பனன் சினந்து தனக்கு நேரிட்ட நட்டத்துக்குப் பெரிதும் வருந்திக் கடைசியில் சென்று வருமாறு உத்தரவிட்டான். சந் திரமதி நள்ளிரவில் புறப்பட்டுச் சிறார்கள் சொல்லிய குறிப்புணர்ந்து நாட்டைவிட்டுக் காடு சென்றாள். மைந்தனை இழந்த ஆறாத்துயரத்தால் காட்டுவழியில்

காலில் தைக்கும் முட்களைப் பொருட்படுத்தாமலும் கல்லிலும் முள்ளிலும் நடந்து சென்று அலைந்து திரிந்து, கடைசியாகத் தன் மைந்தன் வீழ்ந்து கிடக்கும் இடத்தைக் கண்டடைந்தாள்.

அரசுக்குரிய மைந்தன் அரணியத்தில் வீழ்ந்து கிடத்தலைக் காணவும் மனம் பொருளாய்க் கதறினாள்; பதைத்தாள்; அவன்மீது விழுந்தழுதாள்; எழுந்தாள்; விம்மினாள்; வெய்துயிர்த்தாள். பாவியேன் மகனே' யென்பாள்; ஆவியைத் தேடித்தேடி அலமரும் உடலம் ஒத்தாள். இவ்வாறு கதறி ஒருவாறு தேறுதலடைந்து தன் மைந்தனை எடுத்துத் தோள்மேல் ஏற்றிக்கொண்டு சுடுகாடு சென்றாள். அங்குத் தனது பாலனைக் கீழே கிடத்தி, முன்னர் எரிந்து எஞ்சிய கட்டைகளைப் பொருக்கி யெடுத்து அவற்றையே சிதையாகக்கொண்டு அடுக்கித் தன் மைந்தனை வைத்துத் தீமூட்டினாள். தீயும் பற்றியெரிந்தது.

அவ் வெளிச்சத்தைக் கண்ட ஈமங்காக்கும் மன்னன், இறந்துபட்டவன் தன் மைந்தனென்றுணராது வெகுண்டு, விரைந்தோடி வந்து "ஏ அறிவிலீ! எனக்குக் கொடுக்க வேண்டிய பொருளைக் கொடுக்காமல் தனியாக இப்பனியிருளில் பிணத்தை சுடுகின்றாய்!" என்று தன் காலால் தன் கான்முளையை எடுத்தெறிந்தான். அதைக் கண்ட சந்திரமதி, "ஐயனே! பொருளும் உற்றாரும் இருந்தால் இந்நள்ளிரவில் தனியே வந்து பிணத்தைச் சுடுவேனோ? ஏழையாகிய என்மீது கிருபை செய்யும்" என்றாள். அச்சமயம் அவன் அவளது கழுத்திலிருந்த மங்கிலியத்தைக் கண்டு, "நல்லை! நல்லை! அறச்சமர்த்தி நீயே!

இந்திர ஜாலம் வல்லை! வல்லை! எரிந்த விறகுக்ளும் களவே! செம்பொன் மங்கலநாண் நின் கழுத்திலிருக்க ஏதும் இல்லையென்பது பொருந்தாது. இதனைக் கொடுத்து நின்மைந்தனைச் சுடு" என்றான். அச்சொல்லைக்கேட்டு மனம் பொறுத சந்திரமதி புலம்புவதிலிருந்து, அவள் தன் மனைவியென்றும், இறந்த மைந்தன் தன்னரும் பெறல் மைந்தன் என்றும் அரிச்சந்திரனாகிய அத்தோட்டி அறிந்தான். பிறகு இருவரும் அடைந்த துக்கத்திற்கு அளவேயில்லை.

துயரம் ஒருவாறு தணிந்த பிறகு அரிச்சந்திரன் சந்திரமதியைப் பார்த்து "பெண்ணே! இங்கு எரிக்கப்படும் பிணத்துக்குக் காற்பணமும் முழத்துண்டும் கொடுக்கவேண்டும். இவை என்னை விலைகொண்டாலும் வீரவாகுவுக்குச் சேர்வனவாகும். ஆதலால் நீ வீடு சென்று நின்னை விலைகொண்ட பார்ப்பனரிடம் அவற்றைப் பெற்று வருக!" என, அவளும் "அங்ஙனமே சென்று வருவேன்" என்று புறப்பட்டுச் சென்றாள்.


அந்நள்ளிரவில் காசி ராஜனுடைய அரண்மனையிற் கள்வர் புகுந்து அவன் மைந்தனிட மிருந்த அணிகலன்களைக் கைக்கொண்டு அச்சிறுவனைக் கொன்று நகர்ப்புறத்தே கிடத்திச் சென்றார்கள். காலகண்டன் வீடு நோக்கிவந்த சந்திரமதி வழியிலிருந்த சவத்தைக் கண்டு, அதுவே தன் மைந்தனென சோகத்தால் ஒன்றுமறியாது அவ்விறந்த பிள்ளையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு அரற்றலாயினள். அரண்மனையிலிருந்த அரசிளங் குமரனைக் காணாது தேடிக் கொண்டு வந்த காவலர்கள் வழியில் அப் பிள்ளையை வைத்துக்கொண்டிருந்த சந்திரமதியைக்கண்டு,

அவளே அப் பிள்ளையைக் கொன்ற கொலைகாரி என்றெண்ணி அவளைக் கட்டி இழுத்துக்கொண்டுபோய் அரசன் முன்சென்று, நடந்ததை அறிவித்து அவளே தமது மைந்தனைக் கொன்றவள் என்றார்கள். அவளிடத்தில் யாதொரு குறியும் காணாது அரசன் அவளை வினவ, அவள் தனக்கு யாதொரு துணையுமில்லாததாலும் புத்திர சோகத்தாலும் தானே கொன்றவள் என்றாள். அவ் வார்த்தையைக் கேட்ட அரசன் தன் மைந்தனை இழந்த துயரத்திலும் பன்மடங்கு துயர மேற்கொண்டு, அவளே தன் மைந்தனைக் கொன்றவள் என்பதற்கு பிற ஏதுக்கள் காணப்படாதிருப்பினும், அவள் தானே ஒப்புக்கொள்வதால் அவளே கொலை செய்தவள் எனத் தீர்மானித்து அவளைக் கொலை செய்யுமாறு கட்டளையிட்டான். வீரவாகு தன் கைவாளைத் தன்னடிமை யாகிய மன்னவனிடம் கொடுக்க, அவனும் வாளை வலக்கையிலேந்தி சந்திரமதியைக் கட்டிய கயிற்றை இடக்கையில் கொண்டு கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றான்.

அச்சமயத்தில் கோசிகன் கொலைக் களத்தையடைந்து, மன்னனை நோக்கி, "அரிச்சந்திர! நீ எனக்குக் கொடுத்த நாட்டை எனக்குக் கொடுக்கவில்லையென்று சொல்லின், முன் எனக்கு நீ வழங்கிய யாவையும் உனக்குக் கொடுத்து விடுகின்றேன். இத்துன்பங்களெல்லாம் உனக்கு நேராது" என, அப்பொழுது அரிச்சந்திரன், "பதியிழந்தனம்; பாலனை யிழந்தனம்; படைத்த நிதியிழந்தனம்; இனி நமக்குள தென நினைக்கும் கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்" என்றான். மதியிழந்து தன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்.

உடனே மன்னவன் தன் மனைவியைப் பார்த்து "பெண்ணே! நீ நாளும் வழிபடுந் தெய்வத்தை மனதில் சிந்தித்துக்கொள்" என, அவளும் கணமும் கனவிலும் மறவாத தன் கணவனை எண்ணிக்கொண்டு நிற்க, அரிச்சந்திரன் "நான் உண்மை யுரைத்தலையே விரதமாகக் கொண்டிருப்பது உண்மையாயின், என்னைத் தவிர வேறு ஒன்றையும் எண்ணாத கற்புடைமை இவளிடத்தில் இருக்குமாயின், யாங்கள் இருவரும் கொண்டுள்ள தருமம் இவளைக் காக்க!" என்று வாளை வீசினான். அவ்வாள் அவளது கழுத்தில் மாலைபோல் விழுந்தது. தேவர்கள் அரிச்சந்திரனது உண்மைக்கும் அவனது சீரிய ஒழுக்கத்துக்கும் வியந்து அவனுக்குக் காட்சி யளித்து இறந்துபட்ட மக்களிருவரையும் உயிர்ப்பித்துக் கொடுத்து அவனை வாழ்த்தி மறைந்தனர். அரிச்சந்திரனும் தானிழந்த பொருட்களை மீண்டு மடைந்து நாடுசென்று நலமுடன் வாழ்ந்து வந்தனன்.

வசிட்ட முனிவர் மொழிந்தபடியே அரிச்சந்திரன் உண்மையிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்தவன் என்பதை யறிந்த கௌசிக முனிவன் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, தான் முன்புதேவசபையில்மொழிந்த சபதப்படி, தன் தவத்திற் பாதியை வசிட்டருக்குக் கொடுத்துவிட்டுச் செருக்கொழிந்து சென்றான்.



## 16. எரிமலைகள்

எரிமலை யென்பது நெருப்பைக் கக்கும் மலை யாகும். உலகத்திலுள்ள அற்புதமான தோற்றங்களில் இம்மலையும் ஒன்றாகும். உலகை வலஞ் செய்தவர் களே இவ்வற்புதமான மலையையும் கண்டிருப்பார்கள். படித்தவர்களோ புத்தகங்களிலிருந்தும், பத்திரிகையி லிருந்தும் இம் மலைகளின் வரலாற்றை யறிந்திருப்பார் கள். பாமரரிற் சிலர் இப்படிப்பட்ட மலைகள் உண்டு என்பதை அறிந்தோர் சொல்லக் கேட்டிருப்பார்கள். இம் மலைகளைப்பற்றியே தெரியாதவரும் சிலரிருப்பார்.

உலகத்திலுள்ள எரிமலைகளைக் கணக்கிடுவது இய லாத காரியம். சிலர் 225 என்றும், சிலர் 300 என்றுஞ் சொல்லுகிறார்கள். இவைகளில் சில மலைகள் எப்பொ ழுதும் உக்கிரமாகவே இருக்கின்றன. பெரும்பாலான

மலைகள் சிற்சில காலங்களில் மட்டும் உக்கிரமாக இருப்பதாகத் தோன்றுகின்றன. இம் மலைகள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுக் கிளைகளாகவே இருக்கின்றன. எட்னா எரிமலையின் சார்பில் சுமார் 700 கிளைகளிருக்கின்றன. ஹாவே என்னும் எரிமலையினது பிரிவுகள் ஆயிரக்கணக்காக விருக்கின்றன.

எரிமலையின் உக்கிரத்தின்போது அதில் உண்டாகும் காட்சிகளை எடுத்துக்கூற இயலாது. அம்மலையின் வாயில்களிலிருந்து கற் குழம்பு வழிந்தோடுவதும், பெரும் பாறைகளும் கற்களும் அதிர்ச்சியால் ஆகாயத்தில் அதிவேகமாகக் கிளம்புவதும் அதி வியப்பைத் தரும். கிலேனியா என்ற எரிமலையின் வாயில் உலகத்திலுள்ள வாயில்கள் யாவற்றிலும் பெரிது. இம் மலை காவையின் என்ற தீவில் முனேலோ என்ற மலையின் மேல் 4000 அடி உயரத்தில் இருக்கிறது. அது மூன்று சதுர மைல் பரப்புள்ளதாயும், ஏழு மைல் நீளமுள்ள கரையையுடையதாகவும், அதன் உட்புறம் கற் குழம்பாலாகிய பெரிய ஏரிபோன்றும் இருக்கிறது. அந்த ஏரியின் மட்டம் 800 அடி ஆழத்திலும், எரி குழம்பு 1400 அடி ஆழமுள்ளதாகவு மிருக்கிறது. இது அதிகக் கொதிப்பும் வெப்பமும் உள்ளது. இராக் காலங்களில் கற் குழம்பின் வெளிச்சத்தால் மேகங்கள் செந்நிறத்தை யடையும் காட்சி மிகவும் கம்பீரமானதென்று சொல்லப்படுகிறது.

இம் மலைகளின்மேலுள்ள வாயில்கள் பாதாளம் வரையில் செல்லும். இவ் வாயில்கள் சில மலைகளின் உச்சியில் மாத்திரம் இருக்கும். சில விடங்களில் மலைகளைச் சுற்றிலுமிருக்கும். சில மலைச் சாரல்களில்

சுற்றிலும் சிறு வாயில்கள் காணப்படும். இவ்வாயில்கள் கால்வாயின் அடிப்பக்கத்திலிருக்கும் அடுப்புக்களைப்போல் காணப்படும். இவ் வாயில்களிலிருந்துதான் நெருப்புச் சுவாலைகளும், சாம்பல்களும் உருகிய கற்பாறைகளும், கற் .குழம்புகளும், புகைத் திரள்களும், தீப்பொறிகளும் வெளிப்பட்டுக்கொண் டிருக்கும். இவைகளெல்லாம் இம் மலைகளிலிருந்து வெளிப்படுவதற்குரிய காரணம் என்ன?

பூமிக்குள்ளே 20 மைல்களுக்கு அப்பால் நெருப்புமயமாகவே இருக்கிறது. ஐந்தாறு மைல்களுக் கப்பாலும் சில விடங்களில் நெருப்பைப் பார்க்கலாம். நாம் பூமியைத் தோண்டிப் பார்த்தால் சிறிது தூரத்தில் வெப்பம் காணப்படும். போகப்போக அவ் வெப்பம் மிகுந்துகொண்டே போகும். இதனால் பூமியின் அடிப்பாகத்தில் நெருப்பிருக்கிறதாகக் கொள்ளப்படுகிறது. மேலே கூறிய வாயில்கள் பிலத்துவாரம் போன்று இந்த அக்கினி வரையிலும் சென்றிருப்பதே தீ முதலியவற்றைக் கக்குவதற்குக் காரணம் என்பார்கள். ஆனால் இக்கொள்கை சரியானதன்று. இவ்வாறு நெருப்பு முதலியவற்றை வெளிப்படுத்துதற்கு உரிய காரணம் எரிமலைகளின் பக்கத்திலுள்ள பூமியின் தன்மையைப் பொருத்திருக்கிறது என்று சொல்லவேண்டியிருக்கிறது. இக் கொள்கைக்குரிய காரணங்கள் பல.

பூகோளப் படத்தைப் பார்த்தால் எரிமலைகள் கடற்கரைப் பக்கங்களில் அமைந்துள்ளனவென்றும் கண்டங்களின் உட் பிறதேசங்களில் அவைகள் இல்லாதிருப்பதும் நன்கு புலப்படும்.

உதாரணமாக ஆண்டிஸ் மலைத் தொடரில் எரிமலைகள் பல விருக்கின்றன. ஆல்ப்ஸ், யூரல், இமய மலை ஆகிய இம்மலைத் தொடர்களில் எரிமலைகளே இல்லை. பசிபிக் மகா சமுத்திரக்கரை யோரத்திலோ எரிமலைகள் பல விருக்கின்றன.

நியுசீலண்டு (Newzealand), பிஜி தீவுகள் (Fiji Islands), சாம்பவா (Sambava), ஜாவா (Java), சுமட்ரா (Sumatra), பிலிப்பயின்ஸ் (The Philipines), ஜப்பான் (Japan), ராக்கி மலைகள் (Rocky Mountain), மெக்ஸிகோ (Mexico), பெரு (Peru), சில்லி (Chilli) முதலிய விடங்களில் எரிமலைகளைக் காணலாம் ஆனால் அட்லாண்டிக் (Atlantic) மகா சமுத்திரத்தில் இம்மாதிரியான எரிமலைகள் கிடையா.

பூமியின் மேற்பாகமானது நாளடைவில் குளிர்ச்சியாய் இறுகிக் குறுகிக்கொண்டு வருகின்றதென்பது நமக்கு நன்றாகத் தெரிந்ததே. இதன் காரணமாக சில விடங்களில் வெடிப்பும் பிளப்பும் உண்டாகின்றன. அச்சமயத்தில் சிலவிடங்களில் மற்ற இடங்களைவிட அதிக வெப்பத்தை யடைகின்றன. அவ்வெப்பமான பிரதேசங்களே எரிமலைகளின் உற்பத்திக்குக் காரணமாக விருக்கின்றன.

இம்மலைத் தொடர்களை ஆல்ப்ஸ் (Alps), ஆண்டிஸ் (Andes) ஆகிய மலைத்தொடர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவைகளை வெடிப்புகளாகவே கருத வேண்டும். ஆகையால் மலைத்தொடரின் சாரலைச்சார்ந்த கடற்கரை யோரத்தில் வெப்பம் அதிகமாயிருக்கும். எரிமலைகளும் கண்டங்களின் மத்திய நாடுகளில் அதிக

மாக விருப்பதில்லை. கடற்கரை யோரங்களிலேயே அவை அதிகமாகக் காணப்படுகின்றன.

எரிமலைகளின் உக்கிரம் பக்கத்திலுள்ள பூமியின் தன்மையைப் பொருத்திருப்பதற்கு இன்னொரு காரணமுமுண்டு. ஒன்றுக்கொன்று அடுத்திருக்கும் எரிமலைகள் தனித்தனியே யாதொரு சம்பந்தமு மில்லாது தங்கள் உக்கிரத்தைக் காண்பிக்கின்றன.

இவ்வாறு எரிமலைகள் எரிவதற்குக் காலவரையறையில்லை. சில சமயங்களில் சில மலைகள் எரிந்துகொண்டே யிருக்கும். சில அடங்கி யிருக்கும். எல்லாம் ஏககாலத்தில் எரிவதுமில்லை; அடங்கி யிருப்பதுமில்லை. எரிந்துகொண் டிருக்கும் மலைகள் சில காலம் அடங்கியிருக்கும். அடங்கியிருக்கும் மலைகள் சில காலம் எரியும்.

இந்த எரிமலைகளெல்லாம் நாளடைவில் மலையுருவம் பெற்றனவாயிருத்தல் வேண்டும். ஆதியில் பூமிக்குள் உண்டாகிய நெருப்பு முதலியன வெளிப்படுவதற்குப் பூமியில் பல பிளவுகள் தோன்றும். இந்தப் பிளவுகளின் வழியாக வெளிக்கிளம்பிய நெருப்பு, கற்குழம்பு, சாம்பல் முதலியன நாற்புறமும் வழிந்து வழிந்து காய்ந்து இறுகிவிடும். இவ்வாறு இறுகியவை நாளடைவில் பாறைகளாய்த் தோன்றும். இவைகளே இக்காலத்தில் எரிமலைகளாகக் கருதப்படுகின்றன என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகின்றார்கள்.

இவ்வாறு எரிமலைகள் எரியும்போது இவைகளின் பக்கங்களில் ஒன்றும் இருத்தலாகாது; மக்களும் வாசஞ்செய்ய வொண்ணாது. இம்மலைகளைச் சூழ்ந்து

அநேக மைல்கள் தூரம் வரையிலும் இம்மலைகளின் வெப்பம் தாக்கும். புகைத்திரள் நாலா பக்கங்களிலும் சூழ்ந்துகொள்ளும். சில சமயங்களில் சில மலைகள் திடீரென்று எரிய ஆரம்பித்துவிடும். அப்பொழுது அதன் அருகில் இருக்கும் நகரங்களும் அழிந்துவிடும். அந்நகரத்தில் உள்ள மக்களும் அவ்வெப்பத்திலும், புகைத்திரளிலும் அகப்பட்டுக் கொண்டு வழிதெரியாது திகைப்பார்கள். சிலர் அதிலிருந்து உண்டாகும் ஒளியினால் வழிதெரிந்து தப்பி ஓடுவார்கள். சிலர் இறந்துபோவார்கள். அஃறிணைப் பொருள்கள் யாவும் அழிந்தே போகும்.

இம்மலைகள் எரியத் தொடங்குமுன் சில அறிகுறிகள் காணப்படும். இம்மலைகளின் இயல்பை உணர்ந்த மக்கள் இவ்வறிகுறிகளைக் கண்டதும் எரிமலை எரியத் தொடங்குவதை முன்னதாக அறிந்து அவ்விடங்களைவிட்டு வெளியேறி விடுவார்கள். இவ்வாறு வெளியேறிச் செல்பவர்களே உயிர் பிழைத்தவராவர். ஏனையோர் இறந்துபோவார். இவ்வாறு எரிந்த மலைகளைச் சுற்றிலுமுள்ள நாடு நகரங்கள் எல்லாம் அழிந்து பாறைகளாகக் காணப்படும். பல ஆண்டுகளுக்கப்பால் அவ்விடத்தைத் தோண்டிப் பார்த்தால் புதையுண்ட பொருள்களெல்லாம் கிடைக்கும்.

# 17. ஆபுத்திரன்

வாரணாசி யென்னும் ஊரில் அபஞ்சிகன் என்னும் ஓர் அந்தணன் இருந்தான். அவன் மனைவியின் பெயர் சாலி என்பது. சாலி சிறிது ஒழுக்கந் தவறியதால், அப்பாவந் தீரும்பொருட்டுக் கன்னி.யா குமரிக்கு நீராடச் சென்றாள். அப்பொழுது அவள் கருப்பமா யிருந்தாளாதலால், அவள் கன்னியா குமரிக்குப் போகும் வழியிலேயே ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். பெற்றபின் அவள் அக் குழந்தையிடத்தில் சிறிதும் இரக்கங் காட்டாமல், அதனை ஒரு தோட்டத் தில் வைத்துப் போய்விட்டாள். குழந்தை பசியால் அழுதுகொண்டிருந்தது. அப்பொழுது ஒரு கறவைப் பசு அங்குவந்து அக்குழந்தையைத் தன் நாவால் நக்கிப் பாலூட்டி ஏழு நாட்கள் வரையில் காப்பாற்றி வந்தது.

பிறகு வயனங்கோடு என்னும் ஊரில் வாழும் பூதி என்னும் ஓரந்தணன், தன் மனைவியோடு அவ் வழியாக வந்துகொண்டிருந்தான். அவன் அக்குழந் தையின் கூக்குரலைக் கேட்டு ஓடிப்போய் அதைத் தூக்கிவந்து தன் மனைவியிடங் கொடுத்தான். அவள் குழந்தையைக் கண்டு மகிழ்ந்து அதை மார்போடு அணைத்துக்கொண்டாள். பிறகு இருவரும் குழந்தை யைத் தங்களூருக்குக் கொண்டுபோய்த் தங்கள் குழந் தையைப்போல் பாராட்டி அருமையாய் வளர்த்தார் கள். பசு வளர்த்தமையால் அக்குழந்தைக்கு ஆபுத் திரன் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக

வளர்ந்துவந்தது. உரிய காலத்தில் அக்குழந்தைக்குக் கல்வி கற்பித்தார்கள்.

ஆபுத்திரன் இயல்பிலேயே இரக்கமுள்ளவனாயிருந்தான். அவன் ஒருநாள் அவ்வூர் வீதிவழியே போய்க்கொண் டிருக்கும்பொழுது ஒரு வீட்டில் வேள்வி செய்துகொண் டிருப்பதைக் கண்டான். அவ் வேள்விச் சாலையின்முன் ஒரு பசு கட்டப்பட்டிருந்தது. அதன் கழுத்தில் பூமாலை போடப்பட்டிருந்தது. பசுவைக் கொன்று வேள்வியை முடிப்பார்களாதலால், பசு கதறிக்கொண்டிருந்தது. ஆபுத்திரன் பசுவின் நிலைமைக்கிரங்கி அதை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணினான்; அதற்கு வேண்டிய சமயத்தையும் எதிர்பார்த்திருந்தான். இரவு நேரம் வந்தது. எல்லோரும் படுத்துறங்கப் போய்விட்டார்கள். எல்லோரும் நித்திரை செய்யும் வேளையில் ஆபுத்திரன் அப்பசுவை அவிழ்த்துக்கொண்டு வெளியே போய்விட்டான்.

ஆபுத்திரன் நெடுந்தூரம் போனபிறகு அந்தணர்கள் கண் விழித்துப் பார்த்தார்கள். பசுவைக் காணவில்லை. கள்வன் எவனோ பசுவைக் கொள்ளைக்கொண்டு போய்விட்டானென்று எண்ணி, அவர்கள் பசுவைத் தேடப் புறப்பட்டார்கள். தூரத்தில் ஆபுத்திரன் பசுவுடன் செல்லுவதைக் கண்டு ஓடிப்போய்ப் பிடித்துக் கொண்டார்கள். ஓரந்தணன் ஆபுத்திரனைக் கோலால் அடித்தான். அதைக் கண்ட பசு அவ்வந்தணனைத் தன் கொம்பால் முட்டி அவன் வயிற்றைக் கிழித்து விட்டது. மற்ற அந்தணர்கள் ஆபுத்திரனைப் பார்த்து "இவன் இழி நடத்தையுள்ள ஒருத்தியின் மகனல்

லவா! அதனால்தான் வேள்விப் பசுவைத் திருடிக் கொண்டு வந்துவிட்டான்!'' என்று அவனை இழிவாகப் பேசிப் போய்விட்டார்கள். இச் செய்தியைப் பூதி என்பவன் கேள்விப்பட்டான். அவன், ஆபுத்திரன் இழி நடத்தையுள்ள ஒருத்திக்குப் பிறந்தவன் என்று அறியவும் ஆபுத்திரன்மேல் வெறுப்புக் கொண்டு, அவனை அனுப்பிவிட்டான்.

இங்ஙனம் வளர்த்த தந்தையால் கைவிடப்பட்ட ஆபுத்திரன், வயிற்றுப் பசியைப் போக்க வகையொன்றும் அறியாமல் பிச்சையெடுக்க எண்ணித் தெருத் தெருவாய்ச் சென்றான். பசுவைத் திருடிய கள்வனென்று எவரும் அவனுக்கு உணவு கொடுக்கவில்லை. பிறகு வேறு வழியில்லாமல் அவன் தென் மதுரைக்குப் போய் பிச்சை யெடுத்துக் காலங்கழித்து வந்தான். இரவு நேரங்களில் அறச் சாலைகளில் தங்கித் தூங்குவான்.

ஆபுத்திரன் தங்கியிருந்த ஒரு அறச் சாலையில் ஒருநாள் சிலர் வந்து "ஐயா! நாங்களெல்லாம் மிகுந்த பசியால் வாடுகிறோம். எங்கள் பசியடங்க ஏதேனும் உணவு தாருங்கள்!'' என்று இரக்கந் தோன்றக் கேட்டார்கள். அதைக் கேட்ட ஆபுத்திரன் அவர்கள் பசியைப் போக்கமுடியாத தன் நிலைமையை எண்ணி மனம் வருந்தினான். அப்பொழுது சிந்தாதேவி என்பவள் அங்குவந்து ஆபுத்திரனிடம் ஒரு பிச்சைப் பாத்திரத்தைக் கொடுத்து, "நாடெல்லாம் வறுமையடைந்தாலும் இவ்வோடு வறுமையடையாது; கொடுக்கக் கொடுக்க இதில் உணவு வளர்ந்துகொண்டேயிருக்கும்; இதைக் கொண்டு ஏழைகளுக்கெல்லாம் உண

வளிப்பாய்'' என்று சொன்னாள். இதைக் கேட்டதும் ஆபுத்திரன் அடைந்த அக மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா? சிந்தாதேவியை வாயார வாழ்த்தித் துதித்தான். அப்பொழுது இந்திரன் அவனுக்கு வரங் கொடுக்க அவ்விடம் வந்தான். ஆபுத்திரன் இந்திரனை இலட்சியம் செய்யவில்லை. அதனால் இந்திரன் கோபம் கொண்டான். "இவன் பிச்சைப் பாத்திரம் பெற்று விட்ட செருக்கினாலல்லவா இவ்வாறு நம்மை அவமதித்தான்'' என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டு நாட்டில் பசியால் வாடுவோரில்லாமற் செய்தான். ஆதலால் ஆபுத்திரன் தான் பெற்ற பிச்சைப் பாத்திரத்தைக் கொண்டு ஏழை மக்களுக்கு உணவளிக்க முடியாமற் போய்விட்டது. எங்கு பார்த்தாலும் மழை நன்றாய்ப் பெய்து செழிப்பா யிருந்தபடியால் ஊரிலுள்ள மக்கள்யாவரும் பசியென்பதே தெரியாமல் மகிழ்ச்சியாய் வாழ்ந்துகொண் டிருந்தார்கள். அவர்களிடையில் ஆபுத்திரன்சென்று "உணவுவேண்டுவோர் உண்டோ'' என்று கேட்டுக் கொண்டே போவான். அவர்கள் இவன் பைத்தியக்காரன் என்று நகைத்துத் துரத்துவார்கள். இவ்வாறு ஆபுத்திரன் பெற்ற பிச்சைப் பாத்திரம் பயன்படாமற் போயிற்று.

அப்பொழுது கப்பலிலிருந்து வந்த சிலர், "சாவக நாட்டில் மழையில்லாமல் மக்கள் யாவரும் பசிப்பிணியால் வருந்துகிறார்கள். அங்குச் சென்றால் உன் பிச்சைப் பாத்திரம் உபயோகமாகும்'' என்று தெரிவித்தார்கள், அதைக் கேட்டதும் ஆபுத்திரன் மகிழ்ந்து அங்குச் செல்லுவதற்குக் கப்பலேறினான். அக் கப்பல் மணிபல்லவத் தீவிற்கருகில் வந்து ஒரு

நாள் தங்கியது. ஆபுத்திரன் அத் தீவில் இறங்கி, அதைச் சுற்றிப் பார்க்கச் சென்றான். அன்று நள்ளிரவில் கப்பல் புறப்பட்டுப் போய்விட்டது. ஆபுத்திரன் தீவில் அகப்பட்டுக் கொண்டு வருந்தினான். பிறகு அவன் மனமுடைந்து, “ஆண்டுக்கொருமுறை தோன்றி அறஞ்செய்வோர் வந்தால் அவர் கையிற் சேர்க!” என்று சொல்லித் தன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை அத் தீவிலிருந்த கோமுகி என்னும் ஒரு பொய்கையில் போட்டுவிட்டுப் பட்டினியிருந்து உயிர்விட்டான். அதன்பின் அவன் சாவக நாட்டிற் பிறந்து புண்ணியராசன் என்னும் பெயருடன் அந்நாட்டை அரசாண்டு வந்தான்.

## 18. இராஜாராம் மோகன்ராய்

> நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
> நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
> குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
> இணங்கி யிருப்பதுவும் நன்று.

நீங்கள் எப்பொழுதும் நல்லவர்களைக் காணல் வேண்டும். அவருடைய நல்ல குணங்களையும், நல்ல செயல்களையும் பிறருக்கு எடுத்துச் சொல்லுதல் வேண்டும். அவர்களோடு கூடிப் பழகுதல் வேண்டும். நல்லவர்கள் என்போர் எப்பொழுதும் பிறருக்கு நன்மையே செய்துகொண் டிருப்பார்கள். இப்படிப்பட்ட நல்லவர்கள் யார் தெரியுமா? அவர்கள் தாம் கற்றறிந்த பெரியோராவர். இவ்வகையான பெரியோர்

பலர் நமது நாட்டிலே தோன்றியிருக்கிறார்கள். பல வழிகளிலும் பாடுபட்டு நாட்டுக்கு நன்மையே செய்திருக்கிறார்கள். இப்பொழுதும் செய்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட பெரியவர்களின் சரித்திரங்களைப் படித்தலும், கேட்டலும் பெரும் நன்மை பயக்கும். நாம் இங்கு ஒரு பெரியவரைப் பற்றி படிப்போம்.

மேற் சொல்லப்பட்ட பெரியோர்களில் ஒருவராகப் புகழ்ந்து சொல்லப்படுபவர் நமது ராஜாராம் மோகன்ராய் என்ற அறிஞராவர். இவர் நமது முன்னேற்றத்தின் பொருட்டு மிகவும் பாடுபட்டிருக்கிறார்.

இராஜாராம் மோகன்ராய் வங்காள நாட்டிலுள்ள இராதா வென்ற நகரத்தில் பிறந்தார். இவரது தந்தை இராம கண்டராய் என்பவர். இவர் இளமையிலே வங்காள பாஷையைக் கற்றுக்கொண்டார். பிறகு பாட்னு நகரத்துக்குச் சென்று அரபி பாஷையைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். பின் காசிக்குச் சென்று வடமொழியையுங் கற்று அம்மொழியிலுள்ள தர்க்கம், இலக்கியம், இலக்கணம் முதலியவைகளில் தேர்ச்சிபெற்று விளங்கினர். பண்டிதர்களும் அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

சிறு வயதிலிருந்தே இவர் எதையும் ஆராய்ந்து பார்த்துதான் செய்வார். ஒவ்வொன்றையும் நன்றாக யோசிப்பார். திடீரென ஒன்றையும் செய்யமாட்டார். மதங்களைப்பற்றி மிகுதியும் ஆராய்ச்சி செய்வார். மதவாதிகளது வேறுபட்ட கொள்கைகளைப்பற்றி வாது செய்வார். 'விக்கிரகத்தை வணங்கலாகாது' என்பார். கடவுள் ஒருவரே. அவரையே யாவரும் வணங்க

வேண்டும். வித்தியாசம் வேண்டுவதில்லை' என்று யாவருக்குஞ் சொல்லிவருவார். இவ்வாறு சொல்வதைக் கேட்டறிந்த இவரது தந்தையார் இவரை



வீட்டைவிட்டுத் துரத்தினர். இவரும் தாம் பலவற்றையும் நன்ருகத் தெரிந்து கொள்வதற்குத் தக்க சமயம் வாய்த்தது என்று கருதி வீட்டைவிட்டு வெளியேறி விட்டார்.

இராஜாராம் மோகனர் தமது ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பல தேசங்களுக்குச் சென்ருர். ஆங்காங்கு வழங்கும் பல பாஷைகளையும் கற்றுக் கொண்டார். பின் இமயமலைக்கு வடக்கிலுள்ள திபேத்துக்குப் போய் அங்கு பரவியிருந்த புத்தமதத்தைப்பற்றி ஆராயத் தொடங்கினர். அம்மத சம்பந்தமான பல நூல்களையும் கற்றுணர்ந்தார். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன. பின் தந்தையார் அவரைத் தமது ஊருக்கு வரும்படி அழைத்தார்.

அதைக் கண்ட மோகனர் தமது ஊர்போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் ஆங்கில மொழியைக் கற்கத் தொடங்கிச் சிறிது ஞானம் வரப்பெற்ருர். சில ஆண்டு கழிய தமது தந்தையையும் தம்முடன் பிறந்த சகோதரர்களையும் இழந்தார்.

தந்தையை இழந்த மோகனர், நமது தேசத்தில் வந்திருந்த கிழக்கு இந்திய கம்பெனியாரிடத்தில் வேலைக்கு அமர்ந்தார். அக்காலத்தில் ஆங்கிலத்தில் நன்ருகப் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டார். சில காலம் கலெக்டர் ஆபீசில் வேலை பார்த்துவந்தார். பிற்பாடு அதனையும் விட்டுவிட்டார். நாட்டுக்கு உழைப்பதையே குறியாகக் கொண்ட இவர் கல்கத்தாவுக்குச் சென்று அங்குள்ள கற்றறிந்த பண்டிதர்களிடையே பல பிரசங்கங்களைச் செய்தார். வடமொழியிலுள்ள நூல்கள் எல்லாம் சிறந்த நூல்களாயிருக்கக் கண்டு அவற்றை யெல்லாம் வங்காள பாஷையிலும் இந்துஸ்தானியிலும் மொழிபெயர்த்தெழுதி யச்சிட்டு யாவரும் எளிதில் உணரும்படி செய்தார்.

இவ்வாறு மத சம்பந்தமாக உழைத்துவந்த இவர் மக்களது ஒழுக்கத்தையும் சீர்திருத்த எண்ணங் கொண்டார். மக்கள் பெரும்பாலும் அறிவுக்குப் பொருத்த மில்லாத பல மூடப்பழக்க வழக்கங்களைக் கைக்கொண் டிருந்தார்கள். அதனால் அப் பழக்கங் களையும் திருத்த முயன்றார். இறந்தவர்களை எரியி லிட்டுக் கொளுத்தி விடுவது வழக்கம். கணவன் இறந் தால் அவனது மனைவியையும் உயிரோடு அவனுடன் வைத்துத் தீக்கு இரையாக்கி விடுவார்கள். விருப்ப மில்லாத பெண்களையும் இவ்வாறு கொளுத்துவதனால் அவர்கள் படும்பாடு சொல்லமுடியாது. இது பார்ப்ப தற்கும் பெருந் துயரத்தைத் தந்தது. இவ்வழக்கத் திற்கு உடன்கட்டையேறுதல் என்று பெயர். இதை வடமொழியில் சககமனம் என்று சொல்வார்கள். அக் காலத்தில் இருந்த பெரியார் அனைவரும் இக்கொடிய வழக்கத்தை நிறுத்த அரும்பாடு பட்டார்கள். மக்க ளுக்கும் அறிவுறுத்தினார்கள். யாரும் கேட்கவில்லை. அக்பரும் இவ் வழக்கத்தை நிறுத்த சில ஏற்பாடு களைச் செய்தார். ஒரு சமயத்தில் ஒரு இராஜ புத்திர மாது உடன்கட்டை யேறுவதாகக் கேள்வியுற்று விரைந்தோடி அதனை நிறுத்தினார். இவ்வாறு செய் யினும் அவ்வழக்கத்தை ஒழிக்க முடியவில்லை. இதனை நன்குணர்ந்த மோகனர் இப்பழக்கம் கொடியதென் றும், யுக்தமல்ல வென்றும் போதித்தார். சாதாரண மக்களும் இதனை நன்குணரும் வண்ணம் எளிய நடை யில் வினாவிடையாக நூல் எழுதி வெளியிட்டார். அக் காலத்தில் கவர்னர் ஜெனராலாயிருந்த லார்டு வில்லியம் பெண்டிங்கு இதனை நன்றாய் அறிந்து இவ்வழக்கத்தை யொருவரும் கைக்கொள்ளலாகாதென்று ஒரு சட்டத்

தைச் செய்து உடன்கட்டை யேறுதலை அறவே யொழித்தார். இவர் காலத்திலிருந்து இக் கொடிய வழக்கம் அடியோடு நீங்கியது. இதற்குக் காரணரா யிருந்தவர், இராஜாராம் மோகனராயே யாவார்.

இவர் இவ்வாறு இக் கொடிய வழக்கத்தை ஒழித்ததுமல்லாமல் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் உழைத்துவந்தார். ஒருவன் பல பெண்களை மணந்து கொள்வது தவறென்று சொல்லிவந்தார். சிறு கைம் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளலா மென்றார். ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் கல்விகற்க வேண்டும் என்று அதன் அபிவிருத்திக்காகவும் பாடு பட்டார். பத்திரிகைகளின் சுதந்தரத்துக்கும் உழைத்து வந்தார். ஜனங்களின் நன்மை கருதி அரசியற்றுறைகளிலும் உழைத்து வந்தார்.

அக் காலத்தில் டில்லியிலிருந்த பாதுஷாவுக்கும் ஆங்கிலேயருக்கும் ஒரு வழக்கு ஏற்பட்டது. அதன் பொருட்டு லண்டன் நகருக்குச் சென்று வாதித்தற் பொருட்டு அதிகார பத்திரம் பெற்று இங்கிலாந்துக் குப் புறப்பட்டுச் சென்றார். அப்பொழுது முகலாய சக்கரவர்த்தி இவருக்கு ராஜா என்ற பட்டப் பெயரை யளித்தார். இவர் இங்கிலாந்து சென்றதும் அங்குள்ள பண்டிதர்களால் நன்கு மதிக்கப் பெற்றார். பலரும் இவரது புலமையை நன்குணர்ந்து இவரை மரியாதை யாகவும் பிரியமாகவும் அழைத்துக் கொண்டாடினார்கள். சக்கரவர்த்தியின் குறைவுகளை யெல்லாம் இங்கிலாந்தில் தெளிவாக எடுத்துரைத்து அவருக்குச் சாதகமாகச் செய்தார். ஆங்கிலேயர்களுக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுக்கப்படுவது போலவே கற்றறிந்த

இந்தியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று வாதித்தார். இறுதியில் இப் பெரியார் அத் தேசத்திலே பிரிஸ்டல் என்னும் நகரத்தில் மரணமாயினர். அவருடைய ஞாபகச் சின்னமாக அங்கு ஒரு சமாதி கட்டப்பட்டுள்ளது. பிள்ளைகளே! 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்ற பெரியார் சொல்லுக்கிணங்கத் தோன்றிப் புகழ்பெற்ற இப் பெரியாரைப் போலவே நீங்களும் நடந்து புகழ்பெற்று வாழ்வீர்களாக.

## 19. உழைப்பின் சிறப்பு

உலகிலுள்ள பொருள்களெல்லாம் இயற்கைப் பொருள்களென்றும், செயற்கைப் பொருள்களென்றும் இருவகைப்படும். இயற்கைப் பொருள்களெல்லாம் இறைவனால் படைக்கப் பட்டவை. செயற்கைப் பொருள்களெல்லாம் மக்களால் ஆக்கப்பட்டவை. செயற்கைப் பொருள்கள் உண்டாவதற்குக் காரணம் மக்களுடைய மெய்முயற்சியேயாம். மக்கள் முயன்று உழைக்காவிட்டால் உலகில் செயற்கைப் பொருள்கள் இல்லையாம். இந்த உழைப்பின் சிறப்பை எந்த மொழிகளால் எடுத்துச் சொல்லுவது!

உழைப்பானது காட்டையழித்துச் சதுப்பு நிலத்தைச் சீர்படுத்தி, பார்க்கப் பயங்கரமான வெட்ட வெளியைக் கண்ணுக்கு இனிமையாகத் தளிர்க்கச் செய்கிறது; ஏர் உழுது, நிலத்தைக் கொழுமையாக்கி விதைத்துப் பயிர் செய்து, அறுப்பறுத்து, அரிசியாக்கி மாவரைத்துத் தின்பண்டமாக்கி உயிர்களைக் காக்கின்றது.

உழைப்பானது செங்கல் அறுத்து, சுரங்கத்திலிருந்து கல்வெட்டியெடுத்து, கற்பலகைகள் பிளந்து, கம்பங்கள் சித்திரித்து, அற்பமான குடிசைகள் மாத்திரமேயன்றிச் சிங்காரமான அரண்மனைகளையும், மாட மாளிகைகளையும் உண்டாக்குகிறது.

உழைப்பானது பூமியின்கீழ்ப் புதைந்து கிடக்கும் நிலக்கரிகளை வெளிப்படுத்துகிறது ; நல்ல பாறைகளைப் பரிசோதித்துப் பொன், வெள்ளி, செம்பு, ஈயம் முதலிய உலோகங்களை வெட்டி யெடுக்கின்றது ; இரும்பை யுருக்கிப் பெரிய தூண்முதல் சிறிய ஊசி வரையிலும், பளுவான நங்கூரம் முதல் இலேசான கம்பியிருகவும், நீராவியந்திரத்தை இயக்கும் சக்கரம் முதல் மெல்லிய வளையம் வரையிலுமுள்ள பலவகைப் பட்ட பொருள்களையும் செய்கின்றது.

உழைப்பானது காட்டிலுள்ள மரங்களை வெட்டித் துண்டு மரங்களாக உருவாக்கிக் கப்பல் செய்து, அகன்ற கடலின் வழியாய் அலைகளைப் பொருட்படுத்தாமலும், காற்றுக்குப் பயப்படாமலும் வெளிநாடுகளுக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டுபோய் அந்தந்த நாட்டு விளை பொருள்களைக் கொண்டுவந்து வாணிகத்தை நன்கு தழைத்துச் செழித்தோங்கும்படி செய்கின்றது.

இரும்பைப் பொன்னாக்க வல்ல குளிகையைப் போல், உழைப்பானது மிகவும் அற்பமான பொருள்களை மிகச் சிறந்தவைகளாக மாற்றுகிறது. ஒன்றுக்கும் பயன்படாத கந்தை, கூளங்களெல்லாம் சிறந்த காகிதங்களாக மாறுவது எதனால்? இரசாயன முறைப்படி

பற்பல பொருள்களிலிருந்து திராவகங்கள், உடல் நலத்திற்குகந்த மருந்துகள் முதலியன உண்டாவது எதனுல் ? உழைப்பாலல்லவா ?

பாய்ந்தோடும் நதிகளின்மேல் பாலம் விளங்குகிறது. காட்டுப்புறங்களில் கண்ணுக்கினிய வழி காணப்படுகிறது. கெட்டியான மலைகளைத் துளைத்து இருண்ட குழாய் வழி இலங்குகிறது. ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் இருப்புப்பாதைகள் அமைந்துள்ளன. இவற்றுக்கெல்லாம் காரணமென்ன? உழைப்பல்லவா ?

பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் மனிதரோடு நேரில் பேசுவதுபோல் நாம் பேசுகிறோம். எங்கேயோ ஓரிடத்தில் ஒருவரோ அல்லது பலரோ பேசியதையும், பாடியதையும் கேட்கிறோம். எந்த ஊரிலோ நடக்கும் இசைக்கச்சேரிகளை நமது வீட்டிலேயே கேட்டு மகிழ்கிறோம். ஓரிடத்தில் நடிக்கப்பட்ட நாடகங்களை அப்படியே அணுவும் தவருமல் வெள்ளைத் திரையில் ஆடல் பாடல்களுடன் கண்டு களிக்கிறோம். விண்ணில் பறந்து வெகுதூரம் செல்லுகிறோம். இவற்றிற்கெல்லாம் என்ன காரணம் ? தொலைபேசி (Telephone,) பாடும்பெட்டி (Gramophone), ஒலி விளம்பி (Radio), நிழற்படம் (Cinema), ஆகாய விமானம் (Aeroplane) முதலியவை கண்டுபிடிக்கப்பட்டதாலல்லவா ? இவற்றைக் கண்டுபிடித்தது எது ? உழைப்புதானே ?

இப்பொழுது காணப்படும் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய பெரிய நகரங்களெல்லாம் பழைய காலத்தில் சிறிய ஊர்களாகவும், அதற்கும்

முந்திய காலத்தில் ஊர்களே யில்லாமலும் இருந்திருக்க வேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இங்ஙனம் ஊரே யில்லாதவிடம் அல்லது சிறிய ஊர்களாயிருந்தவிடம் இப்பொழுது மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், பல அழகிய தோற்றங்களும் கொண்டு பெரிய நகரங்களாக மாறி விளங்கக் காரணமென்ன? உழைப்புதானே!

பச்சையப்ப முதலியார், முத்துசாமி ஐயர் ஆகிய இருவரும் பிறந்தகாலத்தில் அவர்கள் பெற்றோர்கள் மிக்க எளிய நிலையில் இருந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் பச்சையப்ப முதலியார், பெரிய வள்ளலென்று புகழ்ந்து போற்றும்படி ஏராளமான பொருள்களைப் பலவூர்களிலும் தருமம் செய்துள்ளார். அவர் பெயரோடு காஞ்சீபுரம், சிதம்பரம், சென்னை ஆகிய விடங்களில் பள்ளிக்கூடங்கள் இன்றும் நின்று நிலவுகின்றன. முத்துசாமி ஐயர் சென்னை உயர்தர நீதிமன்றத்தில் நீதிபதியாய் அமர்ந்து புகழும் பொருளும் பெற்றுச் சிறந்தார். இவ்விருவர் உயர்விற்கும் என்ன காரணம்? உழைப்புத்தானே? இவர்களைப்போல் உலகத்தில் எத்தனையோ பேர் தங்கள் உழைப்பால் உயர்ந்துள்ளார்கள்.

# 20. தண்ணீர்

நாம் உயிரோடிருப்பதற்கு உணவு வேண்டும்; நீரும் அவசியம் வேண்டும். நாம் உணவின்றியும் இருக்கலாம்; நாம் நீரின்றி உயிரோடிருக்க முடியாது. எந்த உயிரும் நீரின்றி இருக்க இயலாது; புல் பூண்டு முதலியனவும் முளையா. நீர் நமக்கு உணவாகவும் உபயோகப்படுகிறது. நாம் உண்ணும் உணவைச் சமைப்பதற்கும் உபயோகப்படுகிறது. ஆகவே நீர் நமக்கு மிகவும் உபயோகமானது. உணவுப் பொருட்களில் அதுவே முக்கிய மென்றும் சொல்லலாம்.

இப்போது நாம் நமது குடி தண்ணீரைப் பற்றி ஆராய்வோம். "தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே" என்பது ஒரு பழமொழி. தாய் என்றால் எல்லாருந் தாயாவார்களா? ஆகார். அது போலவே தண்ணீர் என்றால் எல்லாந் தண்ணீராகுமா? ஆகாதல்லவா? ஆதலால் நாம் தண்ணீரின் குணத்தை ஆராய்தல் வேண்டும். பின் நமக்குத் தகுந்த நல்ல நீரையே குடிக்கவேண்டும். அசுத்த நீரைக் கையாடலாகாது.

உலகத்திலுள்ள நீர், நிலத்தின் தன்மைகளாலேயே பல வகைப்பட் டிருக்கிறது. நல்ல நிலத்திலிருக்கிற நீர் நல்ல நீராகும். அசுத்தமான இடத்திலுள்ள நீர் அசுத்த நீராகும். நீர் தங்கியிருக்கும் இடங்களுக்கு நீர் நிலைகள் என்று பெயர். அவை ஆறு, ஏரி, குளம், சுனை, கிணறு முதலியனவாகும். இவற்றைத் தவிர மழைநீர், கடல்நீர், குழாய்நீர் எனப் பல வகையாகும். ஆகையால் இந்த நீர்நிலைகளை ஆராய்ந்து உபயோகிக்கவேண்டும்.

குடி தண்ணீரின் குணத்தை நாம் என் ஆராய்தல் வேண்டும்? நாம் பருகும் நல்ல நீரால் நமது உடல் நலம் பெருகிறது. நாம் பருகும் அசுத்த நீரால் சிலந்தி, காய்ச்சல் முதலிய பிணிகள் வரும். இதனை நாம் கண்டு மிருக்கின்றோம்; கேட்டு மிருக்கின்றோம். ஆதலால் நீரைப்பற்றி ஆராய வேண்டுமென்பது விளங்குகிறதல்லவா?

**மழை நீர்:** இந்த மழைநீர் பூமியில் விழுமுன் நல்ல நீராகும். எனெனில் பூமியிலுள்ள நீர் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறுகின்றது. மேலே சென்று மேகமாகப் பரவுகின்றது. அதன்மீது குளிர் காற்று வீச மழையாக விழுகின்றது. ஆதலால் இது குடிக்கத் தக்கதே. நல்ல நீருக்கு மணமிராது; சுவையுமிராது. ஆனால் இம் மழைநீர் பூமியில் விழுந்தவுடன் அந்தந்த நிலத்தின் குணத்தை யடைகிறது. பூமியிலுள்ள கரையும் பொருள்களைக் கரைத்து விடுகின்றது. பூமியிலுள்ள புல் பூண்டுகளும் அழுகித் தண்ணீரைக் கெடுத்துவிடும். ஆதலால் பூமியில் விழுந்த மழைநீர் அசுத்த நீராகி விடுகிறது. அதை நாம் குடிக்கக் கூடாது.

மழை நீரை உபயோகப்படுத்த வேண்டுமானால் நல்ல இடத்தில் ஒரு குளம்போல் வெட்டவேண்டும். அங்கு செமிண்டால் கட்டிடம் கட்டவேண்டும். மழை வருமுன் அவ்விடத்தைச் சுத்தம் செய்யவேண்டும். பின் மழைநீரை அக்குளத்தில் தேக்கிவைத்து உபயோகப்படுத்தலாம். அதற்குக் காவலும் வைக்க வேண்டும்.

ஆற்று நீர்: ஆறுகளில் ஓடும் நீர் மண்ணையும் செத்தைகளையும் அடித்துக்கொண்டுவரும். ஆதலால் ஆற்று நீர் அசுத்தமாகவும் பயனற்றதாகவு மிருக்கும். ஆனால் ஆறுகள் பெரியதாய் அதிவேகமாக ஓடக் கூடியதாய்க் கலங்கலில்லாமலு மிருக்கும். அப்படிப் பட்ட ஆற்றுநீரை வடிகட்டிக் குடிக்கலாம். இருந் தாலும் ஜனங்கள் ஆற்றங்கரை யோரங்களில் வசிக்கின் றார்கள். இவர்களது வீடுகளிலுள்ள சலதாரை நீரும் ஆற்றில் விழும். ஆடு மாடுகள் முதலியவற்றையும் குளிப்பாட்டுவார்கள். இவைகளால் ஆற்றுநீர் செட்டு விடும். ஆதலால் ஆற்றுநீரைக் குடிப்பது அவ்வளவு சுகத்திற்கு நன்மை பயக்காது.

வாய்க்கால் நீர்: சில வாய்க்கால் சாகுபடியாகாத நிலத்தில் செல்லும். சில கால்வாய்கள் ஜனங்கள் வசிக்காத பூமியிற் செல்லும். அப்படிப்பட்ட வாய்க் கால்களில் நல்ல நீர் ஏற்படும். இப்படியின்றிச் சாகு படியான நிலத்தில் ஓடும் வாய்க்காலும், கிராமத்தின் வழியாகச் செல்லும் வாய்க்காலும், அசுத்த நீராகவே யிருக்கும். இவ் வாய்க்கால்களின் கரையோரங்களி லும் அசுத்தங்கள் நிறைந்திருக்கும். ஆதலால் இந்தத் தண்ணீரைக் குடிக்கக் கூடாது. வேறு நன்னீர் கிடைக்காவிட்டால் இந்த நீரை நன்றாய்க் காய்ச்சி ஆறவைத்துக் குடிக்கலாம்.

வயல் கழிவு நீர்: முக்கியமாக நெல் வயல்களி லிருந்து நீர் வழிந்துகொண்டேயிருக்கும். அதற்குக் கழிவு நீர் என்று பெயர். அந்த நீரும் தேங்கிய நீராகும். பல செடி கொடிகளும் அழுகிய நீராகும். ஆதலால் அதுவும் கெட்ட நீராகும். உடம்புக்கு நோயுண்டாக்கும். இது குடிப்பதற்கு ஏற்றதன்று.

சில கிராமங்களில் இந்தக் கழிவு நீரே வாய்க்காலாக ஓடும். இந்த நீரைத் தவிர வேறு நீர் கிடைக்காது. ஆதலால் சில கிராமத்தார் இந்த நீரைத்தான் குடிக்கிறார்கள். ஆதலால் இந்த நீரைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும். காய்ச்சாமல் குடித்தால் பிணியுண்டாகும்.

**கிணற்று நீர்:** கிணறுகளில் மூன்று வகையுண்டு. மேலெழுந்ததும் ஆழமில்லாததுமானது ஒருவகைக் கிணறு. அதிக ஆழத்துடன் கூடியது மற்றொரு வகைக் கிணறு. பூமியிலிருந்து தானாகவே நீர் வெளி வருவது இன்னொரு வகைக் கிணறு.

**ஆழமில்லாத கிணறு:** இக் கிணறுகள் மேலாகவே யிருக்கும்; ஆழமிராது. பக்கங்களில் சிறிது ஆழத்தி லுள்ள நீர் ஓடிவந்து அக்கிணற்றில் விழும். ஆதலால் இக்கிணற்று நீர் குடி தண்ணீர் ஆகாது. ஆனால் இந்தக் கிணறுகளின் அடியில் சரளை அல்லது சுக்கா னிருந்தால் அந்த நீரைக் குடிக்கலாம்.

**ஆழமான கிணறு:** இக்கிணறுகள் தரையிலிருந்து சுமார் நாற்பது அல்லது அறுபதடி ஆழமிருக்கும். இதனடியில் சரளை அல்லது பாறை அல்லது சுக்கான் தரையாயிருக்கும். ஆனதுபற்றி இந்த நீர் சுத்தமா யிருக்கும். சுகத்துக்கு ஏற்றதாயு மிருக்கும். மேலும், அதிக ஆழமுள்ள கிணற்றுநீர் முதல்தரமான கிணற்று நீரைவிடக் குளிர்ச்சியா யிருக்கும்.

**இயந்திரக் கிணறுகள்:** பூமியில் தக்க இடங்களில் குழாய்களை ஆழத்தில் செலுத்துவார்கள். அக்குழாய் கள் இயந்திரங்களின் உதவியால் பூமியினடியில் நீர்

மட்டம் வரையில் செல்லும். தரையின்மேல் குழாயில் இயந்திரம் வைக்கப்பட் டிருக்கும். இவ்வியந்திரத் தின் உதவியால், நீர் குழாயின் வழியாக குபு குபு வென்று வெளிவரும்.

இந்தக் கிணறுகள் பெரும் பாலும் சத்திரங்களில் இருக்கும். இக்கிணற்று நீர் மிகவும் சுத்தமான நீர். ஆனதால் இக் கிணற்று நீரைக் குடிக்கலாம். இக் கிணற்று நீர் சுகத்துக்கு ஏற்றது. இந்த நீர் பல பிணிகளையும் கண்டிக்கும்.

கடல் நீர்: கடல் நீர் மிகுந்த உப்பாயிருக்கும். அதைக் குடித்தால் உப்புக்கரிக்கும். அதில் குளித் தால் உடம்பு அரிப்பெடுக்கும். நாம் உப்புக் கரைத்த நீரை உண்டால் பேதியுண்டாகும். ஆதலால் உப்புக் கலந்த கடல் நீரை நாம் உட்கொள்ளலாகாது. ஆனால் குன்மம் வயிற்றுவலி முதலிய நோய்கள் கடல் நீரால் நீங்கும்.

ஊற்று நீர்: ஊற்று நீர் பார்ப்பதற்கு பளிங்கு போலத் தோன்றும்; சுத்தமாயும் தெளிவாயும், மதுர மாயுமிருக்கும். அதிக ஆழத்திலிருந்து வரும் ஊற்று நீர் வடிகட்டப்பட்டு வரும். ஆதலால் அது குடி தண் ணீருக்கு ஏற்றது; மிகுந்த பித்தத்தைச் சாந்தி செய்யும். சில ஊற்று நீர் மருந்துப் பண்டமாயிருக் கும். ஏனெனில் சில ஊற்று நீர்களில் உலோக சம்பந்தமுண்டு. இவ்வாறின்றி சில ஊற்றுக்கள் மேலெழுந்ததா யிருக்கும். சலதாரை நீர் முதலிய அசுத்த நீர் சம்பந்தமா யிருக்கும். அப்படிப்பட்ட ஊற்று நீரைக் குடிக்கலாகாது. இந்த நீர் குடி தண் ணீர் ஆகாது.

குழாய்த் தண்ணீர் : நாகரிகமான நகரங்களில் எங்கும் நாம் குழாய்களைப் பார்க்கின்றோம். அக் குழாய்களிலிருந்து நாம் தண்ணீர் எடுத்துக்கொள்ளு கிறோம். அக் குழாய்களின் வழியாகத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது? நகரத்திற்குச் சில மைல் தூரத்திலுள்ள பல கிணறுகளிலிருந்து இயந்திர சக்தியினால் தண்ணீர் கொண்டுவரப் படுகிறது. அந்தக் கிணறுகளிருக்கும் இடத்திற்குத் தக்கபடி அந்த நீரின் குணமும் இருக்கும்.

சில நகரங்களிலுள்ள குழாய் நீர் நல்ல நீராகவே யிருக்கும் : சுகாதாரத்திற்கு ஏற்றதாயு மிருக்கும். இந்தக் குழாய் நீர் வருவதற்குமுன் எல்லாரும் குளத்து நீரையே குடித்தனர். அதனால் வாந்திபேதி முதலாயின உண்டாயின. இப்பொழுது குழாய்த் தண்ணீர் வந்ததிலிருந்து முன் சொல்லப்பட்ட நோய்கள் மிகுதியாய்க் காணப்படுவதில்லை. குழாய்த் தண்ணீரைக் கெட்ட நீராக ஒருவரும் எண்ணார். நல்ல நீராகவே நினைப்பார். ஆனால் சில குழாய்த் தண்ணீரும் நோய்க்குக் காரணமாகும். ஆதலால் அயலூருக்குப் போனால் தண்ணீரைக் காய்ச்சி வெந்நீராகக் குடிக்கவேண்டும்.

சுனை நீர் : மலைகளின் இடையிலுள்ள பள்ளங்களுக்குச் சுனை யென்று பெயர். அச்சுனையிலுள்ள நீருக்குச் சுனை நீரென்று பெயர். சுனைநீரைக் குடிக்கக்கூடாது. அதில் நீராடவும் கூடாது. சுனை நீரைப் பருகினாலும், அதில் நீராடினாலும் சீதசுரம், கபவாத சுரம் முதலிய நோயுண்டாகும்.

பாசி நீர்: சில குட்டைகளிலுள்ள நீரில் வழு வழுத்த பாசி படர்ந்திருக்கும். இந்தப் பாசி படர்ந்த நீரைக் குடிக்கலாகாது. குடித்தால் பல பிணிகளை யுண்டாக்கும். ஆதலால் நீரைப்பற்றிய வகையில் நாம் அதிகக் கவலை யெடுத்துக்கொள்ள வேண்டும். அவ் வாறு நாம் கவலை யெடுத்துக்கொண்டால் நோயின்றி நீண்ட காலம் உயிர்வாழலாம்.

## 21. புலியோடு பொருதவீரர்

முற்காலத்தில் நமது தேசத்தில் பல இராச்சி யங்கள் இருந்தன. அவைகளில் ஒன்று விஜயநகர ராச்சியம். அது முன்காலத்தில் மிகச் சிறந்திருந்தது. அது வடக்கே தெலுங்க நாட்டி லிருந்தது. ஆனால் அது இப்பொழுது இல்லை. அவ்விராச்சியத்தை அக் காலத்தில் ஆண்ட அரசர்களில், கீர்த்தியும், செல் வாக்கும் படைத்த அரசர், கிருஷ்ண தேவராயர் என்பவர்.

இக் காலத்தில் நாம் பொழுது போக்குவதற் காகப் பல விளையாட்டுகள் விளையாடுவோம். அது போலவே அக்காலத்தில் அரசர்களும் பல வகையான விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும் உல்லாசமாகப் பொழுதுபோக்குவர். இவ்வாறு பொழுது போக்கும் வேடிக்கைகளில் ஆட்டுக் கடாக்களை ஒன்றோடொன்று பொரவிட்டும், புலியோடு மக்களைச் சண்டை செய்ய விட்டும் வேடிக்கை பார்ப்பதும் சில விளையாட்டுக்க ளாகும். சில சமயங்களில் அரசர்கள் வனவிலங்கு களை வேட்டையாடிப் பொழுது போக்குவர்.

ஒரு சமயம் கிருஷ்ண தேவராயர் வேட்டைக்குப் போயினர். வேட்டையில் ஏழு புலிகள் வலையில் அகப் பட்டுக்கொண்டன. அவைகளைப் பிடித்துக் கூட்டில் அடைத்து ஊருக்குக் கொண்டுவந்தார். தினமும் மல்லர்களை அவைகளுடன் போர் செய்யுமாறு ஏவி அதனைக்கண்டு களித்துவருவார். இவ்வாறு செய்து வருகையில் ஒரு நாள் மூன்று வேங்கைகள் ஒரு மல்லனைப் பிடித்துச் சின்னபின்னமாகக் கிழித் தெறிந்து விட்டது. அதனைக் கண்ட இராயர் மிகுதி யும் மனம் சோர்ந்து, முகம் வாடி, தனது அவையில் இருந்தவர்களைப் பார்த்து, "இந்தக் காட்டு வேங்கை யுடன் பொர எனது ஆத்தானத்தில் ஒருவரும் இல்லையோ" என்றார்.

சபையிலிருந்தவர்கள் யாவரும் இதனைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் முத்தைய நாயக்கர் என்பவர் ஒருவர். அவர் விஜய நகரத்துக் கருகிலுள்ள குத்தியில் பிறந்தவர்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; தோள்வலி யுடையவர்; மற்போர் செய்யும் ஆற்றல் உடையவர்; இராயர் சமஸ்தானத்திலே வளர்ந்தவர். அவர் இராயர் சொன்ன சொற்களைக் கேட்டலும் சரேலென எழுந்திருந்து தமது மன்னரது திருவடி யில் வீழ்ந்து வணங்கி நின்று, "அரசே! தங்கள் அன்னம் புசித்து வளர்ந்த அடியேனிருக்க, தாங்கள் மனஞ் சலிப்பது அழகோ? அடியேனுக்கு இப் பொழுதே விடை கொடுங்கள்" என்றார். அதைக் கேட்ட இராயர், அடங்கா மகிழ்ச்சிகொண்டு, உடனே புலியொடு பொருவதற் கேற்ற கட்டாரி, வாள் முதலிய ஆயுதங்களைக் கொடுக்குமாறு கட்டளையிட்டனர்.

உடனே முத்தைய நாயக்கர் சல்லடம் அணிந்தார்; இடையில் கச்சையை இறுகக் கட்டினார்; வாளை இடையில் கட்டிக்கொண்டார்; கட்டாரியைக் கையில் பற்றினார்; உடனே புறப்பட்டுப் புலியின் இருப்பிடம் சென்றார். யாவரும் திரண்டு சென்றனர். சிறிது நேரத்தில் இராயரும் வந்து தமக்கிடப்பட்ட சிறந்த ஆசனத்தில் அமர்ந்தார். நாயக்கரும் புலியைக் கண்டவுடனே சிங்கேறு போல் உக்கிரங்கொண்டு உள்ளே பாய்ந்தார். புலியுடன் மற்போர் செய்தார்; ஒவ்வொரு புலியுடனும் தனித்தனி பொருதார்; சில நேரம் கொர்ந்த யுத்தமும் செய்தார். அப்புலிகளும் அவருடன் மூர்க்கமாகச் சண்டை செய்தன. புலிகள் மூன்றுஞ் சேர்ந்து அவருடைய மார்பைக் கீறியும், சில விடங்களில் பற்களால் காயம் பண்ணியும் அவருக்கு மிகுந்த வருத்தத்தை விளைவித்தன. நாயக்கர் உடம்பில் இரத்தம் ஒழுகிற்று. ஆயினும் நாயக்கர் வீரம் குன்றாது உடல் தளராது ஆண்மையுடன் பொருது இறுதியில் மூன்று புலிகளையும் கொன்று தம்முடம்பி னின்றும் செந்நீர் ஒழுகவந்து இராயர் தம் திருவடியில் வீழ்ந்தனர்.

இராயர் மனமகிழ்ந்து விரைந்தெடுத்து மார்புறத் தழுவிக்கொண்டு, "என் கண்மணி போல்வாய்! புலியொடு பொருத புகழ்வீர! நீ இருக்க எனக்கு யாது குறையுளது?" என்று பலவாறாகப் புகழ்ந்து, அவரது காயம் ஆறும் வரையில் தன்னுடன் இருக்கும்படிச் செய்து, சிறந்த மருத்துவரைக் கொண்டு அவரது புண்ணை விரைந்து ஆற்றும்படி செய்தார். சில நாளில் நாயக்கர் பூரண சுகம்பெற்றார்; பின்பு

ஒருநாள் இராயர் நாயக்கரைத் தன் சபா மண்டபத்திற்கு அழைத்துவரச் செய்தார். நாயக்கர் வந்ததும் இராயர் அவர் உடம்பைப் பார்த்தபோது, ஒரு பெரிய வடுவைக்கண்டு அதன் காரணத்தை வினவினர். நாயக்கர் தான் புலியைக் குத்தும் காலத்தில், கட்டாரியுடன் கை புலியின் வாயினுட் சென்றபோது, அதின் எலும்பு முறிந்ததனல் தனது உடம்பிலுண்டான பெருங்காயமே இந்த வடுவென்றார். அம்மொழியைக் கேட்டதும் இராயருக்கு வியப்புண்டாயிற்று. நாயக்கரது மனோதைரியத்திற்கும் வீரத்திற்கும் மெச்சித் தனக்குத் தளகர்த்தராக அவரை ஏற்றுக்கொண்டு சன்மானித்து வந்தார்.

இவ்வாறிருக்கையில் விஜய நகரத்தைச் சுற்றிலும் உள்ள நாடுகளிலிருந்த மகமதியர்கள் அவ்விராச்சியத்தின் சிறப்பையுஞ் செல்வத்தையுங் கண்டு அதனருகிற் சென்று சிலர் கொள்ளையடித்தனர்; பயிர்களை அழித்தனர்; குடிகளை வருத்தினர். குடிகள் அரசனிடத்தில் முறையிடவும், இராயர், கோபங்கொண்டு தன் அமைச்சரும் சேனைத் தலைவருமாகிய சதாசிவ நாயக்கரையும் முத்தைய நாயக்கரையும் ஏவி பகைவரை யடக்கிவரக் கட்டளையிட்டனர்.

இருவரும் சேனைகளுடன் சென்று வீராவேசத்துடன் மகமதியரைத் தாக்கினர். அவர்களும் எதிர்த்துச் சண்டை செய்தனர். பதினைந்து நாள் சண்டை நடந்தது. கடைசியில் நாயக்கர் மகமதியர்களை அடித்துத் துரத்தி வெற்றிபெற்றார். பகைவர் தமது படைகளையும் வெற்றிச் சின்னங்களையும் களத்திற் போட்டுவிட்டு ஓட்டமெடுத்தனர். இராயர் சேனை, பகைவரது

வெற்றிச் சின்னங்களுடன் திரும்பிவந்தது. முத்தைய நாயக்கர் இராயர் கொலுமண்டபம் வந்து அடிபணிந்து நின்றார். இராயர் நாயக்கரைக் கண்டதும் விரைந் தெழுந்து தம் மார்புறத் தழுவிக்கொண்டு, "புலியைக் குத்திய போர்வீர! உனக்கு வேண்டியதைக் கேட் பாய்!" எனலும், நாயக்கர் "எனதப்பனே! என்னை யும் தங்களுக்குக் கீழ்ப்பட்ட ஒரு சிற்றரசனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என, இராயர் மனமகிழ்ந்து "உனக்கு எந்த நாடு வேண்டும்?" எனலும், நாயக்கர் தனக்குள் சிந்தித்துப் பார்த்து, தான் முன் தென்தேச யாத்திரை சென்றபோது தான எண்ணியபடி, மது ரைக்குக் கிழக்கும், இரத்தினகிரி மலைக்கு மேற்கும், திருவேங்கட நாதர் மலைக்குத் தெற்கும், வீணிபா ரைக்கு வடக்கும் எல்லையாகவுடைய காட்டை யழித்து, நாடாக்கிக் குடிகளமைத்து ஆட்சிசெய்ய அருள் செய்க" என்று வேண்டிக்கொண்டார். இராயர் அப்படியே பூமியையும், அதற்குரிய சாசனங்களையும் தந்து "அரசு செய்க" என்று உத்தரவு கொடுத்து, பகைவர் படையெடுத்து வருங்காலங்களில் வந்து தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் ஆணைதந்து, அரசனுக்குரிய விருதுகளையும், தண்டிகை இரதம் முதலியவைகளையும் உதவி, குதிரைகளையும் வேண்டும் படைகளையும் பீரங்கிகளையும் கொடுத்தனுப்பும்படி உத்தரவிட்டார். அதனைக் கேட்ட அமைச்சர் முதலி யோர் அவரது பிரிவுக்கு ஆற்றாது வருந்தினர். நாயக் கர் நன்னாளில் இராயரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

நாயக்கர் தமது பிறப்பிடமாகிய குத்திக்குச் சென்று நடந்த வரலாற்றையுரைத்துத் தம் சுற்றத்

தையும் நண்பர்களையும் அழைத்துக்கொண்டு தான் குறிப்பிட்ட காவிரியை யடுத்த தென்தேயத்தை யடைந்து அங்கிருந்துகொண்டு தான் சாசனம் பெற்ற காட்டை யழித்துக் குடியேறச் செய்து பயிர்த்தொழிலுக் கேற்ற வசதிகளையும் ஏற்படுத்திக் கோவில் குளம் முதலியன அமைத்துக் கொடுத்து ஆண்டுவந்தார். இவரது குலத்தவரே இப்பொழுது கடவைமா நகரில் ஆட்சிசெய்து வருங் காவலராவார்கள். இவர் குலம் நீடூழிவாழ்வதாக.

## 22. பாக்கு மரம்

'வெற்றிலைப் பாக்கு' என்ருல், நமது நாட்டில் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். உணவுக்குப் பிறகு வெற்றிலைப் பாக்கு மெல்லும் பழக்கத்தை நாம் பலரிடத்தில் பார்க்கிறோம். திருமண நாட்களிலும், வேறு சிறப்பு நாட்களிலும் வந்த விருந்தினர்க்கு வெற்றிலைப்பாக்குக் கொடுப்பதை ஒரு மரியாதையாக நம் நாட்டார் கருதுகிறார்கள். ஆகவே, வெற்றிலையும் பாக்கும் நம் நாட்டாருக்கு இன்றியமையாப் பொருள்களாய் இருக்கின்றன. இவற்றில் இரண்டாவது பொருளாகிய பாக்கைப்பற்றி இப்பொழுது தெரிந்து கொள்ளுவோம்.

பாக்கு, மரத்தில் உண்டாவதென்பது பலரு மறிந்ததாகும். பாக்குமரம், தென்னை, பனை முதலிய மரவகையைச் சேர்ந்ததாகும். இது சுமார் 60 அடி முதல் 100 அடி உயரம் வரையில் வளரும். அடிமரம் கொஞ்சம் பருத்து, மேலே செல்லச் செல்ல மெலிந்திருக்கும்.

பாக்குமரம் மைசூர், கன்னடம், மலையாளம் முதலிய இடங்களிலும், வெப்பமான வேறு பிரதேசங்களிலும் நன்றாய்ச் செழித்து வளருகிறது. இது தென்னிந்தியாவில் பெரும்பாலும் எல்லாத் தோட்டங்களிலும் காணப்படுகிறது. பாக்குமரங்களில் பெரும் பாக்கு மரமென்றும், சிறுபாக்கு மரமென்றும் இரு வகையுண்டு.

பாக்கு மரங்களைப் பயிர் செய்யும் வகை, பலவிடங்களிலும் பலவிதமாயிருக்கிறது. ஆயினும் இங்கு ஒருவகையைத் தெரிந்து கொள்ளுவோம். பல குழிகளை வெட்டி, அவைகளில் பாதிவரையில் மணலைக் கொட்டுவார்கள். அதன் பின். நன்றாய்ப் பழுத்த பாக்குப் பழங்களை வரிசையாய்ப் புதைத்து, மேலே மறுபடியும் மணலும் உரமுமுள்ள கருமணலும் கொட்டி நிரப்புவார்கள். பிறகு மூன்று நாட்களுக்கொருமுறை வீதம் நான்கு மாதங்கள் வரையில் தண்ணீர் ஊற்றிக் கொண்டு வருவார்கள். நான்கு மாதங்களானதும் செடிகள் நன்றாய் முளைத்திருக்கும். இது நாற்றங்கால் பயிராகும்.

நாற்றங்கால் இங்ஙனம் தயாராவதற்குள், வேறு தோட்டத்தில் நான்கடிக் கொன்றாக வாழைக் கன்றுகளை வைத்துப் பயிராக்கியிருப்பார்கள். அத் தோட்டத்தில் இரண்டு வாழைக் கன்றுகளுக் கிடையில் ஒரு குழி வீதம் வெட்டிப் பாக்குக் கன்றுகளைப் பிடுங்கிக் கொண்டுவந்து இரண்டிரண்டாய் நடுவார்கள். மழையில்லா விட்டால் மூன்று நாளைக் கொருமுறை வீதம் தண்ணீர் ஊற்ற வேண்டும். மழையிருந்தால் தண்ணீர் ஊற்ற வேண்டுவதில்லை. தண்ணீர் மிகுதியாயிருந்

தால் வடிகால் வழியாக வடிகட்டி விடவேண்டும். இல்லாவிட்டால், பாக்குக்கன்று அழுகிவிடும். மூன்று ஆண்டுகளானவுடன் முன்னிருந்த வாழை மரங்களை வெட்டி யெறிந்துவிட்டு வேறு வாழை மரங்களை வைத்துப் பயிராக்குவார்கள்.

பாக்குக் கன்றுகளோடு வாழை மரங்களையும் வைத்து ஏன் பயிர் செய்கிறார்களென்றால், பாக்கு மரங்களின் வேர்கள் எப்பொழுதும் ஈரமாயிருக்க வேண்டும். வாழை மரங்களின் வேர்கள் எப்பொழுதும் ஈரமாயிருக்கு மாதலால், பாக்குக் கன்றுகளின் வேர்களையும் அவை ஈரமாயிருக்கச் செய்யும். அதற்காகவே வாழை மரங்களையும் பாக்குக் கன்றுகளோடு வளர்க்கிறார்கள்.

ஐந்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு பார்த்தால், பாக்கு மரங்கள் ஐந்தாறு அடி உயரமிருக்கும். சில மரங்கள் இந்தப் பருவத்திலேயே காய் காய்க்க ஆரம்பித்துவிடும். இக்காலத்திற்குப் பிறகு தண்ணீர் ஊற்ற வேண்டியதில்லை. கோடை காலத்தில் மாத்திரம் மாத மிருமுறை தண்ணீர் ஊற்றினால் போதும். சில விடங்களில் பாக்கு மரத்திலிருந்து அதிக பயனை விரும்பி உரம்போடுவார்கள். சில விடங்களில் வாழை மரங்களுக்குப் பதிலாகத் தென்னை, எலுமிச்சை, பலா முதலிய மரங்களை வைத்துப் பயிராக்குகிறார்கள்.

பாக்குமரம் பெரும்பாலும் செம்மண் தரையில் தான் வளரும். ஆனால் மழை பெய்தவுடன் ஊறித் தண்ணீர் நிற்கும்படியான மணல் வெளிகளிலேயே மிகவும் வளப்பமாய் வளர்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில்

சுமார் 750 மரங்களைப் பயிராக்கலாம். பாக்கு மரம் வைத்த ஆறுவது ஆண்டுகளுக் கெல்லாம் பயனளிக்கத் தொடங்கிவிடும்.

பாக்குமரம், அதன் கொட்டைக்காகவே பயிர் செய்யப்படுகிறது. ஆயினும் அதன் பாகங்கள் பல வகையிலும் பயன்படுகின்றன. பாக்கு மரத்தை வீட்டுக் கூரைகளுக்கு உபயோகிக்கிறார்கள்; பந்தலுக்குக் காலாகவும் பயன்படுத்துகிறார்கள். இது அடுப்பெரிக்க விறகாகவும் உதவுகிற தென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

பாக்குமரத்தின் குருத்து மட்டையை வெட்டித் தோரணங்கள் கட்டுவதுண்டு. ஈச்சம் மட்டையைக் கொண்டு ஈச்சம் பாய்கள் முடைவதுபோல், பாக்கு மட்டையைக் கொண்டு பாக்குப் பாய்கள் முடைகிறார்கள். ஆனால் அந்தப் பாய் அவ்வளவு கெட்டியாயிருப்பதில்லை. காய்ந்த மட்டையை அடுப்பெரிக்கிறார்கள்.

பாக்குப் பட்டையைப் பலர் பலவிதமாகப் பயன்படுத்துகிறார்கள். சிலர் அதைத் தொன்னைபோல் தைத்துக் கிணறு, வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் எடுக்கும் பாத்திரமாய்ப் பயன்படுத்துகிறார்கள்; சிலர் உணவு உண்ணும் பாத்திரமாகப் பயன்படுத்துகிறார்கள்; சிலர் திருமண், கோபி, சந்தனம் முதலியவை வைத்துக்கொள்ளும் பெட்டிக்கு மூடியாக உபயோகிக்கிறார்கள். இங்ஙனம் இன்னும் பல விதங்களில் பாக்குப் பட்டை பயன்படுகிறது.

பாக்கு, வெற்றிலை மெல்லுகிறவர்களுக்குப் பயன்படுகிற தென்பதைச் சொல்லவேண்டுவதில்லை. இந்தப்

பாக்கை மனிதர்கள் பல விதமாகப் பக்குவம் செய்தும் பயன்படுத்துகிறார்கள் ; பச்சையாகவும் பயன் படுத்துகிறார்கள்.

பாக்குப் பழம் பழுத்தவுடன் அதைப் பறித்துத் தண்ணீரில் ஊறப்போட்டு, பிறகு வெற்றிலை போட்டுக் கொள்ளும் பொழுதுதான் அந்தப் பழத்தின் தோலைப் போக்கிவிட்டு, உள்ளிருக்கும் கொட்டையைத் துண்டு செய்து உபயோகிக்கிறார்கள். அனந்தசயனத்திலும் திருநெல்வேலியிலும் உள்ளவர்கள் இம்மாதிரி செய்கிறார்கள். தஞ்சாவூரில் உள்ளவர்கள் பாக்குப் பழத்தை உரித்துத் தோலைப் போக்கிவிட்டுக் காயப் போட்டு முழுப்பாக்காய் வைத்துக்கொண்டு வேண்டியபொழுது பாக்கு வெட்டியால் வெட்டிப் பயன் படுத்துகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் பெரும்பாலும் கொட்டைப் பாக்குச் சீவலைத்தான் உபயோகிக்கிறார்கள். இம்மாதிரி சீவலைப் பலர் பாக்கு வெட்டியாலேயே சீவுவார்கள். ஆனால் சுலபமாய்ச் சீவுவதற்கு இயந்திர மிருக்கிறது.

சென்னை முதலான விடங்களில் சாயப்பாக்குக் கிடைக்கிற தல்லவா? அதை எப்படிச் செய்கிறார்கள்? பாக்கை மெல்லிய துண்டுகளாக இழைப்பார்கள். அந்தச் சீவலைத் தண்ணீரில் போட்டு அடுப்பேற்றி நன்றாய்க் கொதிக்க வைப்பார்கள். பிறகு அந்தச் சீவலைச் சாயத்தண்ணீரில் போட்டு மறுபடியும் கொதிக்க வைத்தால் சாயப் பாக்காய்விடும். இதைக் களிப்பாக்கென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இச் சாயப் பாக்கைப் பெரும்பாலும் மலையாளத்தில் செய்கிறார்கள். இன்னும் கொட்டைப் பாக்கைப் பிஞ்சி

லேயே துண்டு துண்டாக வெட்டி வேகவைத்துப் பக்குவஞ்செய்து தெற்கு நாடுகளில் உபயோகிக்கிறார்கள். இதைத் 'தெக்கம் பாக்கு' என்பார்கள்.

வெறும்பாக்கை வாயில்போட்டுத் தின்னக் கூடாது. தின்றால் சோகை பிடிக்கும் என்பார்கள். வெற்றிலையுடன் உபயோகிக்கும் கொட்டைப் பாக்குக் கபத்தை எடுக்கும். விருந்து சாப்பாட்டிற்குப் பிறகு வெற்றிலைப் பாக்குக் கொடுப்பது வெறும் மரியாதைக்காக மாத்திரமன்று; உண்ட உணவைச் செரிக்கச் செய்வதற்காகத்தான். கொட்டைப் பாக்கைச் சுட்டுக் கரியாக்கிக் கொஞ்சம் உப்பைச் சேர்த்துப் பொடிபண்ணிப் பல் தேய்க்கும் பொடியாகப் பலர் உபயோகப்படுத்துகிறார்கள். பாக்கு, துவர்ப்புள்ள பொருளாதலால் பற்பொடி செய்யப் பயன்படுகிறது.

இக்காலத்தில் பாக்கைத் தூள் செய்து வாசனைப் பொருள்கள் கூட்டி, காகிதங்களில் மடித்து நவீன முறையில் பலர் விற்கிறார்கள். பல தொழிலாளர்கள் பாக்கு வியாபாரத்தால் பிழைக்கிறார்கள். இது எல்லோருக்கும் இன்றியமையாப் பொருளாய்ப் போய் விட்டபடியால், பாக்கு வியாபாரம் மிகுதியாய் நடக்கிறது. எந்தப் பொருளும் மனிதருக்குப் பயன்படாமற் போவதில்லை யென்பது இந்தப் பாடத்தால் நன்கு தெரிகிறதல்லவா ?



## 23. ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார்


இவர் நமது இந்தியாவை ஆண்டுவந்த சக்கரவர்த்திகளில் ஒருவர். இவரது பெயர் ஐந்தாம் ஜார்ஜ் என்பது உங்களுக்குத் தெரியும். இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் என்று பெயர் வந்ததற்குக் காரணம் என்ன? இவருக்கு முன்னால் இங்கிலாந்தில் ஜார்ஜ் என்று பெயருடைய நான்கு அரசர்கள் ஆட்சி செய்து வந்திருக்கின்றார்கள். அதனாலேயே இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் என்ற பெயர் ஏற்பட்டது. இவர் ஏழாம் எட்வர்டு மன்னவருடைய இரண்டாவது புதல்வராவர். இவருடைய மூத்த சகோதரர் ஆல்பிரட் விக்டர். ஆல்பிரட் விக்டர் நெடுங்காலம் உலகில் இருக்கவில்லை. ஆதலால் இவர் பட்டத்துக்கு வந்தார். இவர் விக்டோரியா மகாராணியார் பேரராவர்.

ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார் கி. பி. 1865-ம் வருஷம் ஜூன் மாதம் 3-ந் தேதி பிறந்தவர். இவருக்கு

இளமை தொட்டே கல்விகற்க அவா அதிகம். ஆத லால் இவர் இளமைப் பருவத்திலிருந்தே மிகுந்த விருப்பத்துடன் கல்விகற்று வந்தார். விளையாட்டிலும் இவருக்கு அதிக ஆசையுண்டு. சிறு வயது முதற் கொண்டே மிகுந்த சுறுசுறுப்பும் மனத் தைரியமும் உடையவரா யிருந்தார். சுற்றத்தாரிடத்திலும் மற்றை யோரிடத்திலும் மிகுந்த அன்பு பாராட்டுவார். அரச குமாரர் என்ற கௌரவத்தைப் பாராட்டாது எந்த வேலையையும் ஊக்கத்துடன் செய்வார். நமது சக்கர வர்த்தினியாயிருந்த விக்டோரியா மகா ராணியா ருக்கு இவரிடத்தில் சிறந்த அன்புண்டு. இவருடைய தாயைப் பெற்ற பாட்டியார் டென்மார்க் தேசத்தில் வசித்துவந்தார்.

இவர் அடிக்கடி அத்தேசத்திற்குச்சென்று தமது பாட்டியாரைப் பார்த்துவருவார். அத் தேசத்தார்கள் கப்பல் ஓட்டும் தொழிலில் கைதேர்ந்தவர்கள். ஆத லால் ஜார்ஜ் மன்னரும் அத்தொழிலை அதிசீக்கிரத்தில் கற்றுக்கொண்டார். சில நாட்களில் கப்பல் செலுத் துவதில் கைதேர்ந்த மாலுமி யாயினர். அதனால் இவ ருக்கு "மாலுமி அரசர்" என்ற ஒரு பெயர் ஏற்பட் டது. இவரது மனைவியாருக்கு மேரி மகாராணி என்று பெயர். இவர் இளவரசாயிருந்தபோது தமது ராணி யோடு நமது தேசத்திற்கு வந்து காட்சி கொடுத்தார். அப்போது சென்னைப்பட்டினத்திற்கும் வந்திருந்தார். இவர் சென்ற நகரங்களி லெல்லாம் மக்கள் பேரன் புடனும் மிகுந்த ஆரவாரத்துடனும் வரவேற்றார்கள். சிறந்த நகரங்களை யெல்லாம் சுற்றிப் பார்வையிட்ட பின்னர் இவர் இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார்.

1910-ம் ஆண்டில் ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தியார் காலஞ் சென்றதும் இவர் சிம்மாசனம் ஏறினர். 1911-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் தேதி இவரது முடி சூட்டும் மகோற்சவம் மிகச்சிறப்புடன் நடைபெற்றது. 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ம்தேதி இவருக்கு



டில்லிமா நகரில் பட்டாபிஷேகம் நடந்தது. அப்போது இவரும் இவரது மனைவியாரும் வெள்ளிச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார்கள். நமது நாட்டிலுள்ள பல சிற்றரசர்களுக்கும், நமக்கும் இவர் சக்கரவர்த்தி யல்லவா? ஆதலால் பேரரசர்களும் சிற்றரசர்களும், பிரபுக்களும் பட்டாபிஷேக மகோற்சவத்தின் பொருட்டு டில்லிமாநகருக்குச் சென்றிருந்தார்கள்.

இதுபோன்ற பெருவிழா நமது நாட்டில் இது வரையில் நடந்ததேயில்லை. இதற்கு முன்னே இங்கி

லாந்து அரசர் ஒருவரும் இவ்வாறு இந்தியாவுக்கு வந்து முடி சூட்டிக்கொண்டதில்லை. இந்த சிறந்த வைபவத்தின் பொருட்டு டில்லியில் புதிய கட்டிடங்களும் மண்டபங்களும் பல கட்டப்பெற்றன. இதற்கு முன்னே கல்கத்தா இந்தியாவின் தலைநகரமாயிருந்தது. இந்த மகுடாபிஷேகத்தி லிருந்து டில்லியே தலைநகராக்கப்பட்டது. இந்த மகோற்சவ காலத்தில் இம் மன்னர் நமது தேசத்தின் கல்வியபிவிருத்திக்காக அதிகமாகப் பொருள் வழங்கப்படுமென்றார். அது போலவே கல்வியும் அபிவிருத்தி யடைந்து வருகின்றது. இந்த மகுடாபிஷேகம் நடந்த தினம் இந்தியா முழுவதும் சிறந்த தினமாகக் கொண்டாடப்பட்டது. இம் மகோற்சவத்தின் பின்னர் நமது அரசர்கோமகன் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். இவர் முடி தரித்த மூன்றாவதாண்டில் ஒரு பெரிய சம்பவம் நடந்தது. 1914-ம் ஆண்டு ஐரோப்பாவில் ஜர்மனி தேசத்தாருக்கும் ஆங்கிலேயருக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. அந்த யுத்தம் நான்கு வருஷம் நடந்தது. நமது இந்து தேசத்திலிருந்தும் அளவற்ற பொருளும் சேனைகளும் ஆங்கிலேயருக்கு உதவியாக அனுப்பப்பட்டன. நமது இந்திய வீரர்களும் மிக்க வீராவேசத்துடனும் விடாமுயற்சியோடும் யுத்தகளத்தில் அமர்செய்து பலவிதமான கஷ்டங்களையும் சந்தோஷத்துடன் அனுபவித்தார்கள். அமர்முனையில் பொருது அங்கவீனமான போர்வீரர்களை யெல்லாம் நமது சக்கரவர்த்தி நேரில் கண்டு அவர்களுக்கு வேண்டிய ஆறுதல் கூறித் தேற்றினார். இவ்வரசர் கோமகனது அன்பையும் அருளையும் என்னென்றுரைப்பது? தன்னுயிர் போல மன்னுயிர் புரக்கும் தண்ணளியுடை

யானன்றே அரசன்? அந்த யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயரே வெற்றிபெற்றனர். யுத்தம் முடிந்தபின்னர் நமது அரசர் போர் முனையில் பொருத வீரர்களுக்கெல்லாம் அவரவர்கள் தகுதிக்கேற்பப் பல விருதுகளும் பட்டங்களும் சன்மானங்களும் வழங்கினர்.

நம்முடைய நாட்டை நாமே ஆளும்படியாக நமக்குத் தகுதியான கல்வியைக் கொடுத்து வருவதுமன்றி நமக்கு நாளுக்கு நாள் நமது தகுதியறிந்து பல உரிமைகளையும் கொடுத்துக் கொண்டுவந்திருக்கிறார். இதற்குச் சாதகமாக முக்கியமான சில சீர்திருத்தங்களையும் நமக்கு அளித்தார். ஒவ்வொரு மாகாணத்திலும் புதிதாகச் சட்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அச்சபைகளுக்குச் சென்று வேண்டிய நன்மைகளைச் செய்து வருகின்றார்கள். இவரது ஆட்சியிலிருந்து நமது தேசத்தார் கல்வியின் பல துறைகளிலும் தேர்ந்து வருவதும் போற்றத்தக்கது. நமது தேசம் கைத்தொழிலிலும் கை தேர்ந்து நவ நவமான பொருள்களைச் செய்து வருவதும் நாம் கண்டறிந்ததே. சுதேசக் கைத் தொழிலுக்கு மிகுதியும் ஆதரவு அளித்து விருத்திசெய்து வந்திருக்கின்றார். இந்தப் புதிய சட்ட சபைகள் 1921-ல் திறந்து வைக்கப்பட்டன. நமது அரசர் கோமகனாரின் முதல் மைந்தராகிய எட்வர்டு அவ்வருஷம் வந்திருந்து சிறப்பித்தார். அவர் அப்பொழுது நமது தேசத்திலுள்ள பலவிடங்களுக்கும் சென்று கண்டு களித்துத் தம் நாட்டுக்கேகினர். இவ்வாறு நீதியுடனும் கருணையுடனும் ஆண்டுவந்த நமது சக்கரவர்த்தியார் ஐந்தாம் ஜார்ஜ்

மன்னர்பெருமான் 1937-ம் ஆண்டு காலஞ்சென்றனர். இவருக்குப்பின் இவரது மூத்த குமாரரும், இளவரசரு மாகிய எட்வர்டு மன்னர் பட்டத்துக்கு வந்து மிக்க சிறப்போடு ஆட்சிபுரிந்து வந்தார். இவ்வரசர் கோம கனுர் அறிவிலும் ஆராய்ச்சியிலும் தேர்ந்தவர். தன் னுட்டைப் பற்றிக் கண்ணும் கருத்துமா யிருந்தார். உலகம் தொழிலாற் சிறப்படையும் என்னும் கருத் துடையவராதலால் எளிய தொழிலாளிகளிடத்தில் மிகுந்த கருணை காட்டுவார்; அவர்களைப் பேரன்புடன் ஆதரித்து வருவார். இவர் தமது பெருங் கருணை யினுலும் உலகத்திற்கு நன்மை செய்யும் பெரு நோக்கத்தாலும் தமது அரசாட்சியைத் தமது அன் பிற் சிறந்த தம்பியும் இப்போது நமது சக்கரவர்த்தி யாய் விளங்குகின்றவருமான ஆறும் ஜார்ஜ் சக்கரவர்த் திக்கு மனமகிழ்ச்சியோ டளித்த மகா வள்ளலாவார். இவரது அன்பும் அருளும் நாளும் ஓங்குக. நமது அரசர் பெருமானும் தழைத்து வாழையடி வாழையாக வழிவழி சிறந்து வாழ்வாராக!

# செய்யுட் பகுதி

# செய்யுட் பகுதி

## 1. நன்னெறி

என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பார் தீதற்றோர்-துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. (1)

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க — ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. (2)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் — பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (3)

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் — பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். (4)

கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி — விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (5)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க — வெள்ளந்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (6)

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவில் — பலியேல்
கடவுள் அவிர்சடைமேற் கட்செவி யஞ்சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. (7)

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் — திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. (8)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர் செருக்குச் சார்தல்—இலையால்
இறைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு. (9)

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்று
எல்லா மிருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்!
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (10)

தம்மையுந் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல். (11)

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ — பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி (12)

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே — பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். (13)

நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவால் அழுங்குவார் — வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. (14)

பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுகாவ ரென்க — தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (15)

ஆக்கு மறிவா னலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க — நீக்கு
பவாா ரவின் பருமணிகண் டென்றுங்
கவாரார் கடலின் கடு. (I6)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்க்
கொண்டு புகல்வ தவர் குற்றமே — வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. (17)

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணுரே — வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணுய்! நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். (18)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் — மடவரால்!
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்ருே விளம்பு. (19)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியனுதவி தாஞ்செய்வார் — அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. (20)

முனிவினு நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினு நல்கார் கயவர் — நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதான் எட்டிபழுத்
தாயினு மாமோ அறை. (21)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் — நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாங்குங் கடிது. (22)

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தா மென்றும் மதியாரோ — வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (23)

— சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியது.

## 2. நீதி வெண்பா

தாமரை பொன்முத்துச் சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா — தாம் அழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என். (1)

ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே — நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். (2)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே — வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (3)

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூர மாமோ கடலுப்பு — பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். (4)

சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ வொலி. (5)

மென்மதுர வாக்கால் விரும்புஞ்சகம்; கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயில் ஏதங் குதவியது கர்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று. (6)

ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிரும்
கான வரியுகிரும் கற்றேரும் — மானே!
பிறந்த விடத்தன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்தவிடத் தன்றே சிறப்பு. (7)

தானே புரிவினையாற் சாரும் இருபயனும்;
தானே யனுபவித்தல் தப்பாது; — தானூறு
கோடிகற்பம் சென்றாலும் கோதையே! செய்தவினை
நாடிநிற்கும் என்றார் நயந்து. (8)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் என்றிவரோ
டின்புறத்தான் உண்டல் இனிதாமே; — இன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்டல் தான்கவர்மீன்
கொக்கருந்தல் என்றே குறி. (9)

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வனைப்பெறுதல் நன்றாமே—பொற்கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏது பயன்
ஒன்றமையா தோகரிக்கன் றேது. (10)

பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலினெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து. (11)

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில் — தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாம்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான். (12)

— நூலாசிரியர் பெயர் விளங்கவில்லை.

## 3. இனியவை நாற்பது

ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது. (1)

தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தல் முன்னினிதே
அங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கும்
அன்புடைய ராத லினிது. (2)

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயலிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது. (3)

ஏவது மாறா இளங்கிளைமை முன்னினிதே
நாளும் நவைபோகான் கற்றல் மிகவினிதே
ஏருடையான் வேளாண்மை தானினிது ; ஆங்கினிதே
தேரிற்கோள் நட்புத் திசைக்கு. (4)

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தானம் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன்(று) இன்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க்(கு) எல்லாம் இனிது. (5)

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது. (6)

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
எளியர் இவரென்(று) இகழ்ந்(து) உரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது. (7)

நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்னினிதே
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி ஈதல் இனிது. (8)

மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழும் தவசிகண் மாண்புஇனிதே
எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை இனிது. (9)

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே
அறம்புரிந் தல்லவை நீக்கல் இனிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்தல் இனிது.

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வு இனிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய(து) இல். (11)

வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற்று இரங்கி இடர்ப்படார்
செய்வது செய்தல் இனிது. (12)

— பூதஞ்சேந்தனார் இயற்றியது.

## 4. இன்னாநாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
கடுமொழி யாளர் தொடர்புஇன்னா; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. (1)

எருதில் உழவர்க்குப் போகீரம் இன்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா
திருவுடை யாரைச் செறலின்னா; இன்னா
பெருவலியார்க் கின்னா செயல். (2)

ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா
நாற்றம் இலாத மலரின் அழகுஇன்னா
தேற்றம் இலாதான் துணிவின்னா; ஆங்குஇன்னா
மாற்றம் அறியா னுரை. (3)

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக்(கு) இன்னா
அருளில்லார் தங்கண் செலவின்னா; இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு. (4)

மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா
துணிவிலார் சொல்லுந் தறுகண்மை இன்னா
பணியாத மன்னர்ப் பணிவுஇன்னா; இன்னா
பிணியன்னார் வாழு மனை. (5)

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்புஇன்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனிஇன்னா
கண்ணில் ஒருவன் வனப்பின்னா; ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு. (6)

நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனிஇன்னா
ஒட்டார் பெருமிதம் காண்டால் பெரிதுஇன்னா
கட்டில்லா மூதூர் உறையின்னா; ஆங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது. (7)

பெரியாரோ டியாத்த தொடர்விடுதல் இன்னா
அரியவை செய்து மெனவுரைத்தல் இன்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா? இன்னா
பெரியார்க்குந் தீய செயல். (8)

பகல்போலும் நெஞ்சத்தார் பண்பின்மை இன்னா
நகையாய நண்பினார் நாரின்மை இன்னா
இகலின் எழுந்தவர் ஓட்டின்னா; இன்னா
நயமில் மனத்தவர் நட்பு. (9)

அறமனத்தார் கூறும் கடுமொழியும் இன்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுகல் இன்னா
இடும்பை யுடையார் கொடையின்னா; இன்னா
கொடும்மாடு உடையார்வாய்ச் சொல். (10)

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா: ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல். (11)

— கபிலர் இயற்றியது.

Printed at the 'Caxton Press,' Madras, — 1939. (B)

# ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

## பாட புத்தகங்கள்

### உத்தம முறை வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் ... ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 2 | 0 |

### பால வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு ... ... ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் வகுப்பு ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றும் வகுப்பு ... ... ... | 0 | 3 | 6 |
| நான்காம் வகுப்பு ... ... ... | 0 | 4 | 6 |
| ஐந்தாம் வகுப்பு ... ... ... | 0 | 6 | 0 |

### இராஜ மார்க்கத் தமிழ் வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு ... ... ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் வகுப்பு ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றும் வகுப்பு ... ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் வகுப்பு ... ... ... | 0 | 6 | 0 |
| ஐந்தாம் வகுப்பு ... ... ... | 0 | 7 | 0 |

### இலக்கணங்கள்

(ஜூனியர் இலக்கணம்)

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் ... ... ... | 0 | 3 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் ... ... ... | 0 | 6 | 0 |
| நான்காம் புத்தகம் ... ... ... | 0 | 8 | 0 |


Caxton Press Madras.

# BALAVACHAKAM

## SIXTH BOOK

### TAMIL

VIDWAN
R. MEENAKSHISUNDARAM
*Lecturer in Tamil, St. Joseph's School, Trichinopoly*

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE
*(Vide Gazette, dated 10th May 1938, page 210)*

MADRAS:
C. COOMARASAWMY NAIDU & SONS
1939

Registered]

[Price 7 As.

662
218
Indic Digital Archive Foundation
gpura.org